# காமன் மகள்

ஆசிரியன்
ஜமதக்னி

முதனூல் :—சய சங்கரரின்
இந்தி காமாயனி

சாந்தி நிலைய வெளியீடு
9, சேணியம்மன் கோவில் தெரு,
சென்னை-21

பதிப்புரிமை ] [ விலை ரூ. 3

முதற்பதிப்பு - 1957

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல்வரிசை எண்: 1615
நன்கொடை எண்: 1615

மதுரை காமராசர்

முத்துக்குமரன் பிரஸ், 14-ஏ, குப்பய்யர் தெரு, சென்னை-1



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

தமிழ்ப் பேராசிரியர்,

## மு. வரதராசனுர் அளித்த பாராட்டுரை

காமன் மகள் என்னும் இந்த மொழிபெயர்ப்புக் காவியம் கற்குந்தோறும் சுவை மிகுந்ததாக உள்ளது. பிரளயத்தின்பின் ஒரு மனத்தின் தனிமை, தனிமை யுணர்ச்சிக்கிடையே காதல், பனி மூடிய சூழ்நிலை, இளவேனிலின் அழகிய காட்சிகள் உள்ளத்தே தோற்றுவிக்கும் நினைவுகள், பனி உருகிய பின் மரங்கள் தழைத்திடும் புதுமைத் தோற்றங்கள், காற்று மழை வெள்ளம் பற்றிய இயற்கை வருணனைகள் யாவும் நயமுற அமைந்துள்ளன. முதல் நூலாசிரியரின் கற்பனைகளில் பெரும் பாலானவை, விஞ்ஞானம் உணர்த்தும் உண்மைகளோடு இயைந்து வருதல் சிந்தைக்கு இனிய விருந்தாகிறது.

பனி, பாறையாக உறைதலால் பயன் இல்லை. அது உருகி நீராய் ஓடினல் தான் வாழ்வை வளம்படுத்த முடியும்: இது புறம். உள்ளம் புலன் வழிச் செல்லாது ஒடுங்கி விடுதலால் பயன் இல்லை. அது அன்பால் கசிந்து புலன் வழியே பாய்ந்து காதலாய் வளர்ந்து அருளாய்ச் செழித்தால்தான், உலகம் இனி தாய் இயங்கும் : இது அகம். இந்நோக்கம் உடைய வாழ்வே காமன் மகள் என்னும் காவியத் தலைவியின் நல்வாழ்வு. அவளு டைய அறிவும் ஆற்றலும் பெண்மைக்குப் புதுப்பெருமை அளிக்கின்றன. ஆண்மையின் குறையையும் மறதியையும் முரட்டுத் தன்மையையும் மாற்றிப் பண்படுத்துகிறது அத்தகைய பெண்மை. இத்தகைய பண்பாட்டின் முடிவில் திகழ்வது ஒன்று, எல்லாம் ஒன்று, அந்த ஒன்றே கடவுள் என்னும் உண்மை. ஆகவே காவியம் சீரியபோக்கும் விழுமிய நோக்கும் உடையதாகிறது.

இதனைத் தமிழில் அழகிய கவிதை வடிவில் மொழிபெயர்த்த அறிஞர் திருவாளர் ஜமதக்னி இளமை முதல் பொதுத் தொண்

டில் ஆர்வம் நிரம்பியவர். காந்தியடிகளின் முதல் இயக்கம் முதல் இறுதி இயக்கம் வரையில் எல்லாவற்றிலும் கலந்து நாட்டு உரிமைக்கான போராட்டத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தில் முன்னணியில் நின்று பலமுறை சிறை சென்றவர்; ஒன்பது ஆண்டுகள் சிறையிலேயே கழித்தவர். இப்போது இயக்கங்களிலிருந்து ஓய்வு பெற்ற இவருடைய நெஞ்சம் காவியங்களில் திளைத்து மகிழ்ந்து அமைதியைக் காண்கிறது. இதன் விளைவே இந்தக் 'காமன் மகள்.'

செல்லம்மாள் தெரு, சென்னை-30.
6—12—56

**மு. வரதராசன்**

# கவிஞர் ஜமதக்னி பற்றிய அறிமுகம்

கம்பர், பாரதி முதலிய ஒப்பற்ற கவிஞரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவரான திரு. ஜமதக்னி வடார்க்காடு வட்டத்தே காவேரிப்பாக்கத் தருகில் உள்ள கடப்பேரி யென்னுஞ் சிற்றூரில் ஓர் ஏழை வன்னியக் குடும்பத்தில் பிறந்தார். பிறந்த தேதி புதன், 15 ஏப்ரல் 1903. தந்தையின் பெயர் திரு. இராகவன், தாயின் பெயர் முனியம்மாள். இளம் வயதில் ஊர்மக்கள் நடுவே யமர்ந்து புராண இதிகாசங்களின் உரைநடைக் காவியங்களைப் படித்துவந்தார். பள்ளி வாழ்க்கையில் நுண்ணறிவு படைத் திருந்தார் என்று சொல்வதற்கில்லை. மரம் ஏறுதல் மலையேறுதல் மிகுதொலைவில் நீந்துதல் மற்றப்பிள்ளைகளுடன் சண்டைபிடித்தல் அடித்தல் அடிவாங்குதல் முதலிய துணிச்சலான செய்கைகள் புரிந்துவந்ததாகக் கேள்விப்பட்டுள்ளேன். காந்தியடிகள் இந்திய அரசியலில் பங்கெடுப்பதன் முன்னரே, இளம் வயதில் கிளைவ் வரலாறு படித்து நெஞ்சங் கொதித்தார். ஆர்க்காட்டுக் கோட்டையில் தில்லி வழியின் கீழே ஆங்கிலத்தில் கிளைவ் இவ்வழியாச் சென்றான் என்ற வாக்கியம் பொறித்திருந்தது கண்டு பிள்ளை ஜமதக்னி கொதித்தெழுந்தான். அதைக் கல் லால் சிதைக்க முயன்றான். மலரிதழ் போன்ற மெல்லிய விரல் களால் எங்ஙனம் அஃதியலும்?

அவர் நான்காம் படிவத்தில் பயின்றபோது ஓர் நாள் இரவு தடியெடுத்து வெள்ளையன் வந்தால் ஒரு கை பார்க்கின்றேன் என்று முழங்கிய வண்ணம் வாலாஜாப் பேட்டைத் தெருக்களைச் சுற்றிப் பித்தனெனச் சுற்றினார் என அறிந்துள்ளேன். இளம் வயதிலேயே அவருக்குச் சுதந்திர வெறி பிடித்திருந்தது எனக் கூறவேண்டியதில்லை.

அவர் இண்டர் மீடியேட் தேர்வில் தேறி ஓர் ஆறுமாதம் பள்ளியாசிரியராகப் பணிபுரிந்து உடனே காங்கிரசில் சேர்ந்து கொண்டார், சிறந்த தேசபக்தராகத் திகழ்ந்தார். கருத்தில் தீவிர

வாதி. சென்ற முப்பது ஆண்டுகளாகவே பொதுத் தொழில்களிலே ஈடுபட்டு வருபவர். காந்தியடிகளின் விடுதலை இயக்கங்கள் யாவற்றிலும் பெரும்பங்கு கொண்டவர். நீல்சிலை சத்தியாக்கிரகம் (1927) உப்புச் சத்தியாக்கிரகம் இராசத்துவேடம் முதலியவற்றிற்காகப் பல்லாண்டுகள் சிறையில் தவங்கிடந்து சொல்லொணுத் துயரம்பட்டவர். தியாகமே உருவெடுத்தவர்.

அவர் சிறையிலேயே நூல்கள் பயின்று பயின்று தமது அறிவைப் பெருக்கிக்கொண்டார். காந்தியடிகளை மிகமிக விரும்பினூர். அவர் பொது மக்கள் முன்னின்று வீரமொழிகள் பொழியும் போது பன்முறை நான் அருகே இருந்திருக்கின்றேன். நெருப்புப் பொரி பறக்கும். ஓழுகூர் என்ற சிற்றூரில் ஓர் நாள் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சினுல் ஆவேசங்கொண்டு ஓர் தள்ளாத கிழவன் தடியைச் சுழற்றிக்கொண்டு "எங்கே அந்த வெள்ளையர்" என்று துள்ளிக் குதித்தான். இச்சொற்பொழிவுக்கு ஓர் மாதம் பின்னர் சிறையில் வீழ்த்தப்பட்டார்.

வெள்ளையராட்சியில் அவருக்குப்போலீஸ் கொடுமை தாங்க முடியாததாக விருந்தது. போலீஸ் ஒற்றர்களின் திருவிளையாடல்களால் பொதுமக்கள் தமது வீட்டுத்திண்ணை மீதும் அவரைப் படுத்துறங்கவிடவில்லை. நடுத்தெரு நாராயணனுகை வெட்டவெளியில் படுத்துறங்கினூர். 1930–இல் உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது சென்னை ஹைக்கோர்ட் கடற்கரையில் போலீஸார் அவரை மண்டைமீது அடித்து வீழ்த்தினர். ஓர் மாதம் வரை பேச்சற்று மயக்கமாகப் படுத்த படுக்கையாகக்கிடந்தார். பிழைப்பாரோ என்றும் நான் ஐயுற்றதுண்டு. 1931–இல் அரக்கோணத்தில் மதுவிலக்கு மறியலின்போது கள்ளுக்கடைக் கைக்கூலிக்காரன் ஒருவன் அவரைக் கத்தியால் குத்தி வீழ்த்தினுன். அதிலும் அவர் தப்பிப் பிழைத்தார்.

1942 இல் விடுதலையடைந்து இவரைப் போன்றே சிறந்த தியாகம் புரிந்த அஞ்சலையம்மாளின் திருமகள், லீலாவதியைத் திருமணஞ் செய்துகொண்டார் அஞ்சலையம்மாளின் குடும்ப

முழுவதுமே சிறையில் கிடந்தது; தியாக குடும்பம் என்ற பெயர் பெற்றது. இவரது வாழ்க்கைத்துணைவியும் நீலன்சிலைச் சத்தியாக்கிரகத்தினுல் நான்காண்டுச் சிறைவாசம் புரிந்தவர்.

எந்தக் காலத்திலும் அவர் விளம்பரத்திற்கோ, பட்டம் பதவிகளுக்கோ விருப்பமுற்றதில்லை. வெளிப்பகட்டின்றிச் சிறந்த முறையிலே பணியாற்றும் இயல்புடைவர். மிகவும் அடக்கமானவர். எளிய வாழ்க்கை நடத்துபவர். குழந்தையுள்ளம் படைத்தவர். தமிழ்நாட்டுச் சிறந்த தேசபக்தர்.

இத்தகைய பெரியாருடன் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக நெருங்கிப் பழகித் தேசப்பணியாற்றும் நல்விளை எனக்குக் கிடைத்ததற்காக நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன்.

இவர் சிறந்த தேசபக்தர், தியாகி மட்டும் அல்லர், சிறந்த இலக்கிய அறிஞருமாவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் இந்தி எனும் நான்மொழிச் சிறந்த இலக்கியங்களை ஆர்வமுடன் பயில்பவர். கம்பராமாயணம் அவருக்கு உயிர், நன்முறையில் அதனை ஆய்ந்திருக்கின்ருர். தமிழ்க் காவியங்களை விருப்பமுடன் இடைவிடாது பயின்று வருபவர். தம் தாய்மொழி தமிழில் பக்தவிஜயம், கனிந்தகாதல், தேசீயகீதம், சோசலிஸ்ட் கீதங்கள், மார்க்ஸீயம், எனும் நூல்களையும் திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, குமரேசசதகம் என்ற நான்கு காவியங்களுக்கு விரிவுரையும் இயற்றியுள்ளார். இவரது ஏட்டுப் பிரதிகளாகிய பூமிவரலாறு, உயிர்களின் தோற்றம் இரண்டினுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஐந்நூறு ரூபா பாராட்டுப் பரிசு வழங்கிற்று.

இவர் இப்போது இந்திமொழியின் மகாகவியான திருசயசங்கர பிரசாத் அவர்களது காமாயனி என்ற புகழ் பெற்ற மகாகாவியத்தைச் செந்தமிழ்க் கவிதை வடிவத்தில் காமன் மகள் என்ற தலைப்புக் கொடுத்துத் தமிழ் நாட்டிற்கு அளித்திருக்கின்ருர். இவர் மகாகவி பாரதியாரின் பக்தர்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்,"

என்ற பாரதியாரின் கருத்திற்கேற்பச் சிறந்த இந்தி காவியமான காமாயனியைக் காமன்மகள் என்ற பெயருடன் தமிழ் நாட்டுக் களித்துத் தமிழை வளம் செய்திருக்கின்றார். இதற்குச் சிறந்த கைம்மாருக இலக்கிய அறிஞரும் தமிழன்பரும் இந்நூலைப் பயின்று சுவைத்துப் பயனடைய வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

பொதுமக்கள் மட்டுமன்றி யரசாங்கமும் இந்நூலின் பெருமையை யுணர்ந்து மேன்மேலும் இத்தகைய நூல்களை யியற்றத் திரு. ஜமதக்னி யவர்களுக்கு ஊக்கமளிக்கும் என நம்புகின்றேன்.

15, கோவிந்து தெரு,
தியாகராயநகர்
சென்னை–17.
13—12—57

ஆக்கூர் அனந்தாச்சாரி

# முகவுரை

## மனு வரலாற்றுப் பெரியான்

முதனூலார் சயசங்கர பிரசாதின் கட்டுரையில் பின்கண்ட உண்மைகள் காணக் கிடக்கின்றன :—

மனிதவினத் தந்தை மனுவின் வரலாற்றுத் துணுக்குகள் நான்மறைகள் முதலாகப் புராண இதிகாசங்களில் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றன. ஆதலின் அவனை வரலாற்றுப் பெரியான் எனக் கொள்ளுதல் தக்கதே. பல கட்டுக்கதைகள் புனைந் துரைகள் இடையிடையே வரலாற்றுண்மைகள் மிளிர்வது காண்கின்றோம். காமன் மகள் என்னும் சிரத்தையும் மனுவும் (மனனம் = உணர்வு) கலந்ததால் மனிதவினம் மலர்ந்தது. மனிதப் பண்பாடு ஊழிவெள்ளத்திலிருந்து மலர்கிறது என்பது தெளிவு. ஊழிவெள்ளம் பற்றி உலகெங்கிலும் உள்ள பழம் பெரு நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. கிருத்துவ பைபிளிலும் பைந்தமிழ் நூல்களிலும் ஊழிவெள்ளம் பற்றிய குறிப்புகள் உள்ளன. தமிழில் இது கடல்கோள் என்று அழைக்கப்படு கின்றது. ஆரியமொழி ருக்வேதத்தில் ஓர் மாபெரும் ஊழி வெள்ளத்தைப் பற்றிய செய்தி உள்ளது. அதில் மனு தன்னந் தனியாகப் படகிலே மிதந்த வண்ணஞ் சென்றான். இமயமலைத் தடத்தே தப்பிப் பிழைக்கின்றான். ஆங்குக் காமன் மகளை மணம் புரிந்து மனிதவின மலர்ச்சிக்கு வழிகோலினான்.

தேவ பண்பாடு சீர்கேடுற்றமை, கட்டுக்கடங்காத தேவ இயல்பு, தடையற்ற எல்லையற்ற சிற்றின்ப விழைவு, நுகர்வு இவற்றின் இறுதியில் மாபெரும் ஊழிவெள்ளம், அதனால் தேவ செல்வம் அழிந்தமை முதலிய வரலாற்றுண்மைகள் சதபத பிராம்மணத்தில் காணக் கிடக்கின்றன. கங்கை யமுனை சிந்து உள்ளிட்ட ஏழுநதித் தடத்தே வாழ்ந்த ஆரிய மக்களே தேவர்கள்.

பாகவதத்திலும் மனுவைச் சிரத்தாதேவன் என்று கூறப்பட்டுள்ளது. சாங்தோக்கிய உபநிடதத்திலும் இவ்விருவரைப் பற்றிய செய்திகள் உள்ளன. மனுவும் அவன் வாழ்க்கைத் துணைவி சிரத்தையெனும் காமன் மகளும் மனிதப் பண்பாட்டிற்கு அடிகோலிய வண்ணம் இருக்கும்பொழுதே, கிலாதாகுலிகள் என்ற இரு அசுரப் புரோகிதர்களின் உதவி கொண்டு உயிர்ப்பலி கொடுத்து வேள்வி புரிந்தான் மனு.

இடாதேவியைப் பற்றியும் ருக்வேதத்தில் பல குறிப்புகள் உள்ளன. மனுவின் வேள்வியால் தோன்றியவளை மனு நீயாரெனக்கேட்க "அவிசொரிந்து வேட்ட நினது வேள்வியின் பயன், நானுன் மகள்" என்றாள் எனச் சதபத பிராம்மணங் கூறுகின்றது. அவள் உறுதி, அறிவு என்பவற்றின் அறிகுறியென ருக்வேதம் புகல்கின்றது. அவளின் இன்றியமையாத உதவியால் மனுவுக்கு அறிவு, உணர்வு, ஆட்சித்திறன் ஏற்பட்டன என்றுங் கூறுகின்றது. மேலும் இடாதேவி யிடத்தே தனியுரிமை செலுத்த முயன்ற மனுவைத் தேவர்கள் ஒறுத்தனர் (7—4 சதபதம்).

இவ்வாறாக மனு, சிரத்தையெனுங் காமன்மகள், இடாதேவி மூவரும் வரலாற்று மக்கள் ஆயினும் தம் திருப்பெயர்களுக்குக் குறிப்புப் பொருளும் கொண்டிருத்தல் இறும்பூது உறுவதற்கில்லை. மனு மனித மனத்தைக் குறிக்கின்றது; சிரத்தை மனித இதயம்; இடாதேவி வெறும் மூளையறிவு, இதயப்பற்று அற்ற ஞானம். ஆதலின் மனு, சிரத்தையெனுங் காமன் மகள், இடாதேவி எனும் மூவரும் உண்மையில் நம்மைப் போலவே உலகில் வாழ்ந்தவரே.

பாரத நன்னாட்டு மொழியாகிய இந்தியைப் பயின்று பிரவீண் தேர்வில் தேறினேன். அதன் தொடர்பிலே இந்திமொழியின் ஒப்பற்ற கவிஞர் சயசங்கர பிரசாதரின் காமாயனி என்ற மாகாவியம் பயில நேர்ந்தது. அஃது என் உள்ளத்தைக் கவர்ந்தது. யான் கடவுளெனக் கருதும் கம்பர் பெருமானின் பண்பாட்டில் அவர் கவிதை இருக்கக் கண்டேன். உடனே என்

உயிரினும் இனிய தமிழ் மொழியில் அதைக் கவிதை வடிவில் இயற்ற வேண்டுமென முடிவு செய்தனன்.

பிழை திருத்தி இக்காவியம் செவ்வனே முற்றுப்பெற எல்லா வுதவிகளையும் என்னுடன் தொழில் புரியும் சர். தியாகராயர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் நமச்சிவாயப் பிள்ளையவர்கள் எனக்களித்தார். அவரது தமிழறிவு கடல் போன்றது. தம்மைப்பற்றிப் பிறர் கூறும் புறஞ்சொற்களைக் கேளாச்செவியினர், தூயவுள்ளத்தினர். அவர் உதவி யெனக்கு மிகமிக இன்றியமையாதது. அவருக்கு என் மனமார்ந்த நன்றி.

இக்காவியத்தை என் பணங்கொண்டு மட்டும் அச்சடிக்க எங்ஙனம் இயலும்? எழுத்தறிவிப்போர் இன்று ஏழையரன்றோ? எனக்கு ஊக்கமளித்ததோடு நில்லாமல் பொருளுதவியுந் தந்து நூலைப் பிரசுரிக்கப் பொருளுதவி செய்த பித்துக்குள்ளி முருகதாசர், ஆடிடர் நாராயண ஐய்யர், ஆக்கூர் அனந்தாச்சாரியார், கே. ஆர். கலியாண ராமய்யர், சென்னை பி. இரத்தின நாயகர் சன்ஸ், உரிமையாளர்: அரங்கசாமி நாயகர், தியாகராய நகர், நாதன் கேப், உரிமையாளர் : திரு. விஸ்வநாதன், தக்கோலம் ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. கோவிந்தராஜ முதலியார், முத்துக்குமரன் அச்சக உரிமையாளர். பி. கே. கிருஷ்ணன் முதலானோர் நீடுவாழ்க.

9, சேணியம்மன் கோவில் தெரு,
சென்னை 21.
13—12—57

ஜமதக்னி

# காமன் மகள்

## பொருளடக்கம்


| | படலப் பெயர் | பக்கம் | பாடல் |
|---|---|---|---|
| 1 | சிந்தை | .... 1 | ... 58 |
| 2 | நம்பிக்கை | .... 13 | ... 53 |
| 3 | சிரத்தை | .... 23 | ... 49 |
| 4 | காமதேவன் | ... 32 | ... 54 |
| 5 | அவா | .... 42 | ... 46 |
| 6 | நாணநல நங்கை | ... 54 | ... 37 |
| 7 | தொழில் | .... 60 | ... 64 |
| 8 | அழுக்காறு | .... 72 | .... 66 |
| 9 | இடாதேவி | .... 82 | ... 71 |
| 10 | சிரத்தை கண்டகனவு | ... 100 | ... 56 |
| 11 | போர் | ... 111 | ... 61 |
| 12 | தன்வெறுப்பு | ... 123 | ... 70 |
| 13 | காட்சி | .... 133 | ... 43 |
| 14 | மறை | .... 145 | ... 61 |
| 15 | மகிழ்ச்சி | ... 156 | ... 73 |
| | | மொத்தம் | 862 |



ஆசிரியர் : ஜமதக்னி

# காமன் மகள்

## முதற்படலம்

## சிந்தை

### இமயமலைத் தடத்தே மனு

1. வெண்பனி யிமயத் துச்சி விண்டொடும் பளிக்குப் பாறை
தண்ணிழல் தவழும் வைப்போ ராண்டகை தமிய னாகக்
கண்ணினீர் வழிந்து சோர வுள்ளமுங் கரைந்து பாயக்
கண்டன னமர்ந்தி ருந்தான் பிரளய வெள்ளக் காட்சி.

2. தத்துறுந் தண்ணீர் கீழே,
யுறைபனி தங்கு மேலே,
யித்தரைத் திரவ மொன்றேல்
திடப்பொருள் மற்றென் றென்ப,
தத்துவ மொன்றே, தோற்றஞ்
சேதன மென்றுஞ் சாற்றாய்,
எத்துணைப் பேத மேத
சேதன மென்றுஞ் சாற்றே.

3. ஆண்டகை யுள்ள மென்னப் பாழ்வெளி யமைதி பூண்டு
சேண்டொலை பரவிற் றம்மா திண்பனி வெள்ளிப் பாறை,
யாண்டுறை மோனம் போன்ற பாறையி னகன்ற தாளில்
தாண்டவக் காற்று மோதித் தாக்கினன் திரியா நின்றான்.

4. அளப்பருங் கடல்தா னங்கே யமரரின் இடுகா டாயிற்
றிளமுனி போன்று னேற்றங் கிருந்தனன் காட்சி கண்டான்
கிளர்ந்தெழும் பிரள யத்தின் பேரலைக் கிளைக ளெல்லாந்
தளர்ந்தன வடங்கி மாதோ தவசிமேல் இரக்கந் தூண்ட:

5. அத்தவ னென்ன நீளும் ஆறிரு தேவ தாரு
வத்தலத் தோங்கி நின்ற, வுச்சியின் பனிய தாலே
மெத்தவு முடிக் கல்லின் மெய்யெலா மரத்தி ருந்த
வுத்தியின் மாந்த ரன்ன மரங்களும் உயிர்க ளன்றே.

6. மற்பொரு தோளும் நல்ல மாமிசத் தசைகள் கட்டும்
நற்றவன் மலர்மு கத்தார் வீரமு மிரத்த நாளக்
கற்றைக ளுயர்வுங் காணுங் காமரு மாதர் மீது
விற்படை வீசி டாமல் நிற்பரோ வனங்க வேளும் ?

7. சிந்தனை யாலே வாடுஞ் செழுமரை முகமென் றாலும்
நிந்தனை யில்லா வாண்மை நீடொளி பொலியு மம்மா !
செந்திரு வுள்ளத் தூடே சேண்மலைத் தடையு டைக்கும்
அந்தமி ளிளமை யூற்ற மமுதெனப் பொங்கு மாதோ.

8. விண்ணவர் நாட்டி னின்றும் வியப்பொடு மிதந்து காத்த
வண்ணலி னுவாய் ஆல மரத்தடி யணைந்தி ருக்க
விண்டொடும் அலைய டங்கப் புவித்தலம் வெளிக்கி ளம்பித்
தண்டரை யுலர்ந்து தோன்றத்தானதை விரும்பிக்கண்டான்.

9. துன்பமா மாழ்ந்த நோயுந் துயர்க்கதை யென்னப் பொங்கப்
பொன்னெழி லியற்கை யன்னை பூவிதழ் முறுவ லித்து
மன்னெடுங் காலங் கேட்கும் வழக்கினள் ஆத லாலே
யன்னவன் மனத்தெ முந்த வாழ்துயர் கேட்ப தானள்.

## மனுவின் தற்கூற்று

வேறு

10. "சிந்தனையே! மனப்புலனின்
முதல்தோன்றுஞ் செழுமுளையே!
அந்தகனே யழகினுக்குப்
புவிவனத்தின் வரிப்பாம்பே!
வெந்தழலின் எரிமலைவாய்
விண்ணிடிக்கும் முதல்வெடிப்பே !
சக்ததமு மன்னுயிரைத்
தான்பிணிக்குந், திணிகயிறே!"

7. மரை = தாமரை

11. "குறைபாட்டி னிளஞ்சிறுமீ! குன்றனையார் பிறைநெற்றி
நிறைசுருளே! விதியெழுத்தே! நெடிதியற்றும் பெருமுயற்சீ!
முறைபடுத்த கடன்மாயை மூண்டெழும்புந் திரளலையே!
கறைமனத்தென் சிந்தனையே! காண்பதுனை யெவ்வாறு?"

12. "கதிரவன்றன் புவிக்கிரகக் கலிமிகுந்த குழப்பம்நீ
கதியழிக்கும் நெருப்பன்னக் கடுநஞ்சின் சிற்றலைநீ
அதியமர வாழ்வதனை யளிக்காத முதுமைநீ
மதியார்ந்த சொல்லெதையு மதியாத செவிடுநீ."

13. "சிந்தனையே ! வானவனுன்
செய்தறியேன் சிந்தனைகள்
அந்தரத்து வானவற்குஞ்
சாவுண்டோ வயர்வுண்டோ ?
அந்தகனல் ? என்னகத்தே
வேருன்றி யமர்ந்தெனனை
வெந்தழியத் துயர்நெருப்பில்
வீழ்த்துவையோ வருளில்லோய்?"

14. "இருதயமாம் பைம்புலனில்
பனிக்கட்டி யெனப்பொழிவாய்
பருவரலின் மேகம்போல்
மனவிண்ணில் பரந்திருப்பாய்
பெரும்புதைய லாழ்தரையில்
புதைந்திருக்கும் பெற்றியென
வொருவருக்கு முணர்வறியா
துள்ளகத்தில் ஒளிந்திருப்பாய்."

15. "பன்னுக்குந் தாயாவாய் படுதுன்ப வடிவத்தாய்
மன்னுயிர்க்கு முடிவினிய சாபத்தாய் மதுவனையாய்
இன்னுயிர்க்கு மனவிண்ணில் எழுதூம கேதனையாய்
பன்னரிய தூய்பிறவிக் கழகமர்ந்த பாவம்நீ."

---

15. முடிவினிய சாபம் :— வெளிப்படைக்குச் சாபம்போல் காணினும் முடிவில் இனிய பயனை யளிக்க வல்லது சிந்தனை.

அழகமர்ந்த பாவம் :— கபடமற்ற தூய இதயத்தில் முதல் முதல் முளைக்கும் பாவ வாசனை போல அழகாகக் காண்கின்றது சிந்தனை.

16. "எத்தனைபேர் ? புந்தியொடு
நம்பிக்கை யிருமதியாய்ச்
சித்தமுமாய்க் கவலையாய்ச்
சிந்தனையா யுனையழைப்பார்
செத்தவன்போல் துயருழந்தேன்
செயலொழிந்தேன் விட்டொழிக
பித்தியும்நீ ! பாவமும்நீ !
பெயர்ந்திடுக ! பெயர்ந்திடுக!"

17. "மறதீ!வா நம்பிக்கை மறைந்திடுக மனமரமா
மரத்திடுக வுணர்வொழிக புலனறிவு மறைந்திடுக
புறவுலகு வெற்றிடத்தில் புகுதரச ராசரமும்
அறவொழிந்து சேதனம சேதனமும் அழிகின்ற."

18. "வானுலகின் முன்னிகழ்ந்த வரலாறின் றெண்ணுந்தோ
றூனுருகும் இன்பநுகர் வுன்னுந்தோ றயர்கின்றேன்
சூனியமா முயிர்த்திரையில் சூழ்துயராங் கருவரிகள்
மேனிமிர்ந்து தோன்றுவதை மேன்மேலுங் காண்கின்
றேன்."

## தன் முன்வாழ்வு குறித்து மனுவின் தற்கூற்று

வேறு

19. "மனிதவினப் படைப்புமுதற் கருத்தாவே ?
மனுவேநீ! இன்ப வாழ்வில்
கனிந்தாழ்ந்தன் றிருந்தனைபின் படுதோல்விப்
பேரழிவு விளையக் கண்டாய்
தனித்தேவ வாழ்வழிந்துங் காப்பதற்கோ
வழிப்பதற்கோ தமிய னாகத்
தனிமீன்போல் பவக்கடலில் வியப்போடு
தற்செயலாய்த் தப்பி நின்றாய்."

20. "தண்ணீரைக் காற்றதனை மின்னதனைத்
தனிச்சத்திப் பொருளாக் கொண்டு
விண்முழுதுங் களியாட்டுக் களனுக்கி
வெறிதழித்தாய் பொழுதெல் லாமே
கண்ணகன்ற வெம்வயத்தக் களியின்பக்
கருவியினம் பகையா யிற்றே
மண்ணகத்தும் விண்ணகத்தும் அடங்காது
வெறிகொண்டார் மாய்வ ரன்றே."

21. "மணிவிளக்கி னெளிபின்ன ரிருண்மூண்ட
ஏக்கறவு வருவ தென்ன
வணிசொர்க்கப் பெருமிதஞ்சேர் வேள்வியிலே
யனைத்தின்பும் எரிந்தொ ழிந்த
வணியணியாக் கூத்தியன்ற பொம்மைகளே!
யணியுவகை வென்றி யோசை
தணியாத துயர்க்குரலாய் மாறிப்பின்
தடஞ்செவியில் அதிரும் போலும்."

22. அரிதியற்கை தனைவெல்லல், மயக்கத்தில்
ஆழ்ந்திருந்தோங் தோல்வி யுற்றோங்
கரைசெய்ய வரியதொரு களியாட்டக்
கடல்நீந்தி மறந்தி ருந்தோங்
திரைக்கடலில் முழுகியதே விண்செல்வங்
தேவரெலா மூழ்கி னுரே
திரைவெள்ளத் துயர்க்கடலே விண்ணின்பப்
பெருங்கடலில் திரளா நிற்கும்."

23. "புலனடக்க மில்லாத வெறிகொண்ட
வின்பமெலாங் கனவோ? மாலோ?
நிலவுதவழ் இரவினெழில் வைகறையில்
அழிதல்போல் நிலையா தாழக்
கலகமிகு வின்பவெறி யன்றியங்கி
நறுமணத்தி னலைவீச் சென்னப்
பலபண்ணி னிசைவடிவில் நெடுநாட்கள்
பரவிற்ருல் அழிந்த தின்று."

24. "பனித்திவலை, மீனினங்கள் வானவழிப்
பருமைமிக வுறைவ தென்ன
நனிக்கடமைக் கெதிராகச் சிற்றின்ப
நலனெல்லாந் திரண்ட தன்றே
தனியுவகை கனிந்தவிசை யின்பவெறி
செல்வநலந் தமது கைத்தா
வினிதுயரும் அலைகளெனத் தேவரின
வின்பெழுச்சி கிளர்ந்த தன்றே."

25. "இளங்கதிரோன் செழுங்கதிர்கள் எனத்திகழும்
எழிலொளிகள் நடன மாட
விளங்குபொழில் ஏழுநதிக் கரைகளிலுங்
கரைபுரளும் மகிழ்ச்சி வெள்ளம்
அளியியற்கை வாயற்றுத் தாழ்ந்தனளே
பொருட்சத்தித் தொழும்ப ராஞர்
களிமிகுந்தோர் அடிமிதிப்பத் திண்புவியும்
பதைபதைத்தாள் கழரு தொன்றும்."

26. "தேவவினம் நாமினிமேல் படைப்பிடையே
சீரழிவு திண்ணந் தானே
பாவநிறை வானகத்தே பலகேடு
படுமழைபோல் பொழிந்த பொங்கித்
தேவரின மங்கையரின் அணிபுனைவுந்
திருநிலவின் முறுவ லிப்பும்
ஆவன்மது வண்டனைய களிமயக்கும்
ஆதவன்முன் பனியா யிற்றே."

---

24. மீனினங்கள் வானவழி :—இதனை யாகாய கங்கை யென்றுங் கூறுவர். பால் தெளித்தது போன்று வானத்தில் நட்சத்திரங் களின் மாபெரும் அரை வட்டந் தோன்று நிற்கும்.

25. எழுநதி :— சிந்துநதி யுள்ளிட்ட ஐந்து நதிகளுடன் கங்கை யமுனை இரண்டுஞ் சேர நதிகள் எழு. அவற்றின் இடங் களில் தேவர் (ஆரியர்) வாழ்ந்தனர்.

27\. "சிற்றின்பத் தடையற்ற நதியோடித்
துயர்வெள்ளக் கடலில் சேர
மற்றெதுவுந் தேவவினப் பண்பாட்டில்
மாண்பளிக்க வெஞ்ச வில்லை
கற்பநிழல் வானவரை யழிவிருந்துங்
காத்தளிக்க வருமெச் சத்தி?
நிற்கவிதை யொருநொடியும் மனத்தகத்தே
நினைத்திடினும் நெஞ்சம் வேகும்."

## தேவர் நுகர்ந்த எல்லையற்ற சிற்றின்பம் அழிந்தது

வேறு

28\. "என்று நூதனம் என்று மினிப்புறுஞ்
சென்றொ ளிர்வது நாலிரு திக்கினும்
இன்று கண்ணிருந் தெங்கு மறைந்தது
கன்னல் தேனனை யெண்ணிலவ் வேனிலே?"

29\. "மன்றல் கோதையார் மன்மத லீலையும்
மன்னு கூடலுக் கூடலும் மாய்ந்தன
தென்ற லின்பமுந் தேம்பிழி பண்களும்
இன்ப மூக்கிய வீணையு மோய்ந்தன."

30\. "நிலவு தண்ணிழல் போலக் கதுப்பினில்
உலப்பில் நன்மண மூச்சுகள் தோய்ந்தில
பலங்கி ளர்புயத் துட்படும் பாவையர்
கலக லத்தணி யாடை கழன்றில."

31\. "ஆய வெள்வளை காற்சிலம் பேங்கிட
சாயன் மாலைநி லாவொளி தந்திட
மாய மங்கையர் ஆடவு மாணிசை
பாய வேற்றமி றக்கமே நாளெலாம்."

32. "திசைநி ரம்பிட நன்மணத் தீஞ்சுணம்
வசையில் விண்ணகத் தோங்கிட வாளுெளி
விசையில் வாயுவும் பின்னிட விண்ணவர்
பசையில் புந்தியர் ஆடியி யங்கினர்."

33. "வெறிகொள் வானவர் வீடிலா வாழ்க்கையும்
பொறிசிற் றின்பமுங் கள்வெறி யாட்டமும்
உறுத்துக் கண்ணிமை யாதுணர் வூன்றியும்
மறுவில் பெண்ணெழில் மாந்திட வேட்கையும்"

34. "பொன்னின் மேனிய ணைவதும் போயவே;
யன்பு ருக்குமம் மெய்சிலிர்ப் பாங்கிலை
யின்பத் தேனினி தழ்ச்சுவைப் பாலுறும்
இன்று பற்குறி யொண்முகத் தேறிலை."

35. "காதல் நோயுறு காமரு ணர்வென
நாத நாட்டியம் நங்கைய ராடினர்
கீத வண்டுகள் தேனிற் கிளர்ந்தென
மாதர் மாலுற மாநட மாடினர்."

36. "கண்ம ணத்தினைக் கான்றுவ வாய்களே
கண்கள் காட்டுவ காதலின் சோம்பலே
வண்மைக் கற்பகப் பூம்பொடி மாதர்கள்
தண்க துப்பின் தயங்கி விளங்குமே."

37. "இனைய இன்புகட் கானபொ ருட்டிரள்
வனைந்த பூவென வாடியு திர்ந்தன
வினைநெ ருப்பகந் தாமுதல் வெந்தனர்
நனிக ரைந்தனர் நாற்கடல் வாரியில்."

## பிரளய வருணனை

வேறு

38. "மதுசெறி காற்று வீசு மணிமனை வாயில் தோறும்
புதுக்கடல் பொங்கி யின்று திமிங்கிலம் புக்குத் தாக்குங்
குதலையின் சொல்லார் கண்கள் குவளைகள் பூத்த வைப்பில்
பதமழி ஆழி வெள்ளக் கொடுமையின் மாரி பெய்யும்."

39. "நறுமலர் வாடா மாலை கவின்மணி நல்ல மாலை
யிறுகின விலங்காப் பற்றி யெழிலணங் கரம்பை மாரைச்
சிறுமதி தேவ வேள்விப் புலியகத் திறுதிச் செந்தீ
பொறுக்கிலா தெரிய லாகும் பேரலை வடிவம் பூண்டு."

40. வானவர்க் காக நொந்து வானகத் தமர்ந்தி யாரே
கானக மாரி போலக் கண்ணினீர் பொழிகின் றுரே?
மானனு ரரற்றல் கேட்டு வயிரவான் படையுந் தூளாம்
மோனமெத் திசையும்பூண்ட வெருக்கொள வோசை மூள.

41. திகைதிசைப் புகையெ ழுங்கொல்
சீறுங்கொல் அடிவிண் மேகம்?
உகைத்துலுங் கிற்று வானம்
உலவிய தூழிக் காற்றுப்
பகையிரு ளிடைம றைந்தான்
கதிரவன் வருணன் கொண்டான்
மிகைசினக், தூல மாகி
யுறைந்ததா லிருளின் வீக்கம்."

42. "பயங்கர வைம்பூ தத்தின் கலப்பிது, மின்னல் பாய்ந்து
வயங்கவெவ் விடத்தும் வீழ்தல், மாய்விலாச் சத்திக் கூட்டம்
நயங்கெட மறைந்த காலைப் பொழுதினை நாடு தற்கே
தயங்கிலா தெங்குந் தாங்கும் வத்திகள் பரப்பை மானும்."

43. "பேரச்ச வோசை யாலே பெருந்தரை நடுந டுங்கும்
வாரியொ டணைதற் காக வானமு மிறங்கும் போலும்
பேரலைக் கடன்மு ழங்குங் காற்றினுல் தாக்கப் பெற்றுப்
பேரலை நுரைமி குந்து பிறங்கின படப்பாம் பென்ன."

44. "அடிபொரு தழுந்தும் பூமி யெரிமலை யழலு யிர்க்கும்
பொடிப்பொடி யாகிப்போன புவிப்பொருள் பொறியு டைந்து
துடிதுடித் தாழும் பூமி துன்னலை மோத லாலே
வெடிபட வுறுதி யுள்ளம் ஆமைபோல் வெய்து யிர்த்தாள்."

45. "துடுப்பிலே சுக்கா னில்லே மரக்கல மொன்று தோன்றிற்
றடுவலே யகத்தினூடே மிதந்தது வெறிகொண் டாற்போல்
அடிபடத் தோணி யூச லாடிடுங் கரைபார்த் தில்லே
கொடுவிதி வழியைக் காட்டுங் குறுகநம் பிக்கை யாக்கம்."

46. "விண்ணிதழ் பருக வோங்கி வீழுமவ் வலேயின் கூட்டம்
எண்ணிலா மின் பிறங்கும் முழங்குமவ் விடியின் ஈட்டம்
விண்ணகம் மழையின் பேரால் நஞ்சினே மிக்குப் பெய்யும்
நுண்டுளி யியற்றுஞ் சொந்த நுவலரு படைப்புத் தன்னே."

47. "வடவையின் தழல்தூ ளாகி யரற்றுவ போல வாரித்
தடந்தொறும் மின்னல் கூட்டந் தயங்கின விரைந்து வீழ்ந்து
கடலுயிர் பதைப தைத்தே யடித்தலங் கடந்து நீந்தும்
மிடல்புவி குழப்ப முற்றுல் மேவுமோ வுயிர்கட் கின்பம் ?"

48. "உயிர்ப்பெழ லரிதா யிற்றே
புயற்சுழற் கடுமை யோங்க
வுயிருணர் வொழியச் சீவன்
கண்ணொளி யொழிந்த தன்றே
புயற்கடற் குமிழி போன்ற
பூமியு மவ்விண் மீனும்,
புயன்மழை யிடையவ் விண்மீன்
மின்மினிப் புழுவும் போன்ற."

49. "எத்துணைக் கால மிஃதி யாவரே யறிதற் பாற்றுர்?
அத்தலங் காலங் காட்டுங் கருவிகள் அறவொ ழிந்த
வித்திரு வில்லாக் காலச் சக்கர மியன்ற தோரேன்
செத்தது போலு நாவாய் செறுத்தொரு மகரந் தாக்க."

46. மின் = மின்னல்

50. இழுத்தது நாவாய் தன்னை
மோதிய திமயத் துச்சி
யிழிசுரர் அழிந்த வாழ்வைத்
தொடங்குவான் தப்பி னேன்கொல் ?
அழிதரு கருவச் சின்னத்
தமரரின் ஒருவன் யானே
வழிமுதற் சிருட்டி யென்னும்
நாடகத் தோற்று வாய்நான்.''

51. ''பயங்கரத் துயரே! வாழ்க்கைப் பாலையின் கானல் நீரே!
மயக்கவேக் கறவே! பண்டை யமரரின் மாருப் பண்பே!
பயங்கர மோனம்! நாசம்! இன்மையின் படிவ மெங்கும்!
பயனிலை யமர வாழ்வில் பார்மிசை வாய்மை யீதே.''

## மரண வருணனை

வேறு

52. ''மரண மே!நெடுந் தூக்கமே! மலையடி யிடத்தின்
விரவு நின்மடி தண்ணிது, வேலையின் அலைபோல்
தரணி யாருயிர்க் குழப்பநீ! சாவெனப் படுவாய்
பிரமை கொண்டவ ரஞ்சுவர் பேதமை கண்டாய்.''

53. ''சுடலை யாடியின் தாண்டவக் கூத்திடைத் தோன்றும்
விடம சமமெனில் உயிர்க்குறு நோயென மிளிர்வாய்
கொடிய துன்புரு வாயினை கூருயிர்க் கவையே
முடிவில் நின்புகழ் மேன்மையை முற்றிலுந் தெரிக்கும்.''

---

50. நாடகம், தோற்றுவாய் பின்னர் தொடங்குகிறது. அதுபோல் மனித படைப்புக்கு மனு தோற்றுவாயாக ஆகின்ருன்.

53. விடம சமம் = விஷம சமம். சங்கீதத்தில் பாடகரும் வாத்தியக்காரரும் சிரக்கம்பஞ் செய்யுஞ் சுவைமிகுந்த கட்டம். அதிலே பாட்டும் வாத்திய வாசிப்பும் முடிவதோடு புதியதின் தொடக்கமும் உறும். அதுபோல மரணமானது உயிர்களின் முடிவுந் தோற்றமும் ஆகும்.

54. " இருட்பெ ருஞ்சிரிப் பாமென வெக்களித் தென்றும்
இருநி லத்தெதி ரொலித்திடு வாய்நிலத் தெந்தப்
பொருட்கு முள்ளுறை வாயிது வுண்மையெப் போது
மரிது நின்மறை நீமிகு வனப்பினை யென்றும்."

55. "நீல முகிற்றெருடை யொருநொடி யொளியொடு நிற்குங்
கோல மின்னலின் அழகிய பொன்வரிக் கூட்டம்
போல வாழ்க்கையுஞ் சிறியதோர் பாகமே புலவோர்
சால வுணர்ந்திதைக் கரையெழ முயலுவ ருண்மை."

56. காற்றே குடித்தது மனுத்துயர்க் காதையை யாங்கே
வேற்றுக் குரலிலை பாழ்வெளி வீற்றிருந் ததுவே
தேற்று வாரிலை நெடும்பனிப் பாறைகள் செம்மல்
சாற்று மொழிகளை யெதிரொலி செய்திடுந் தாக்கி.

57. தாதை தோமென வழிவெனுந் தாண்டவக் கூத்தே
யோதையொ டியலும், விண்ணவர் தொழும்பரை யொப்பப்
பாதையொ டியலும் மின்குழு வவற்றினப் பண்பின்
றேது? தேவருக் காற்றிட வோர்பணி யிலையால்.

58. கண்முன் சாவென விழியவ நம்பகங் காணும்
விண்ணின் முள்பனி திரள்திர ளாகவே வீழுந்
தண்ணீர் கண்ணினீ ராயது, கதிரவன் சார்ந்தான்
விண்ணில், பயப்பயப் பிரளயம் விடிந்தது மாதோ.

# இரண்டாம் படலம்

# நம்பிக்கை

வேறு

1. சொன்னமனு நன்மனத்தே யின்னவிதஞ் சூழ்போழ்தில்
பொன்னம்பு பெய்தவளாய் வைகறையும் பொலிந்தனளே
வென்றிதரு திருப்போலே; பிரளயமாம் வீங்கிரவுஞ்
சென்றொளிந்தாள் தோற்றனள்போல் செழும்புனலினுழத்தே.

2. பயமிகுந்த வியற்கைதன தொளியிழந்த பனிமுகத்தே
நயமிகுந்த முறுவலிப்பந் நாண்மீண்டுந் தோன்றியதால்
வியன்மழையும் நின்றுவிட மெதுவாகப் படைப்பகத்தே
தயங்குநிலாக் கூதிரவண் புதுமுறையில் தவழ்ந்ததுவே.

3. கதிரவன்றன் இளங்கதிரை மிகுகாதல் கொண்டவன்போல்
முதிர்பனிமீ தணியணியாய்ப் பெய்வானம் மொய்கதிர்கள்
பதுமத்தின் மலர்மிசையே மென்மஞ்சள் பராகந்தான்
மதுநனைந்து விளையாடும் போலும்மால் மணமுயிர்த்தே.

4. பனிப்போர்வை மெதுவாகப்
பாரிலிருந் தகல்தோறும்
புனல்தோய்ந்து முகங்கழுவிப்
பொழில்மரங்கள் எழும்போலும்
இனித்துக்கண் முகிழ்த்திருந்த
வியற்கையாண் டெழும்போலுங்
கனவலைகள் சோம்பலுறக்
கடலுறங்கப் புகும்போலும்.

---

2. கூதிர் = ஐப்பசி, கார்த்திகை; சரத் காலமென்பர் வடநூலார்.

5. கடற்பாயற் படுத்திருந்த
கடிமணப்பெண் புவிமடந்தை
மடநாணங் கொண்டனள்போல்
எழுந்தமர்ந்தாள் மனத்தகத்தே
யடலூழி ராக்குழப்பம்
நினைவுமிக வார்த்தெழலும்
படர்துயரும் மனச்செருக்குங்
கூர்ந்தனள்போல் பரிந்திருந்தாள்.

6. மனிதமுதன் மனுகண்டான் மலையிடத்தின் மாண்பழகைப்
பனியுறைவால் களைத்துறங்கப் படுத்தனவோ குழப்பமெலாம்
நனிகவிழ்ந்த சோமரச நீலமணி நளிர்கிண்ணம்
எனவிண்ணும்; கேடில்லை யெனவுயிர்க்குங் குளிர்காற்றே.

7. இவ்வண்டம் பழையதெனப் புதுவண்ணம் ஏற்றுவன்போல்
அவ்விமலன் பொன்மழையை யவனிமிசைப் பெய்தனனே!
யவ்விடத்து வினையொன்று முளைத்தெழுந்த தவனுரே ?
யெவ்விடத்தும் ஊக்கமெனுந் தனியரசே யியன்றதுகாண்.

## மனுவின் கூற்று

8. "எவனுட்சிக் குவகையுடன் இயங்குபவர் திரிகின்றார்
புவித்தேவர்? மரஞ்செடிக்கும் போடணைக்குந் தனித்தேவன்
சவிக்கதிரோன், வாயுவொடு சந்திரனும் புனல்தேவுந்
தவிசுகந்தி யார்பணியைத் தந்தலைமேல் கொள்கின்றார்?"

9. "புருவவளைப் பூழியதாப் புன்வலியோர் தேவரெலாம்
வெருக்கொண்டு வாய்புதைந்து தம்பணியில் விரைகின்றார்
பெருந்தேவர் இயற்கையகம் பெருமிதஞ்சேர் வல்லவர்கள்
இருந்தாலும் பிரளயத்தே யிழிந்தோடும் பலவீனர்."

10. "பூதவுயிர் துயருறவே நடுநடுங்கும்; புல்லறிவேம்
மேதைமிகும் தேவரலேம் மேல்கிரகத் தாருமிலர்
பேதமிகும் பொம்மைநாம் செருக்குரதம் பிணிகுதிரை
யாதலினே யிழுத்துழல்க வானவரை தேவரெலாம்."

வேறு

11. "ஆரைத் தேடுமந் நீலவான் பேரிடம் ?
ஆரைச் சூரிய னுய்ந்தனன் சுற்றுவான் ?
ஆரை மீனினம் மின்னலும் ஆய்வன ?
ஆரைத் தூமகே தூக்கமோ டாய்தரும்?"

12. இழுப்புச் சத்திப் பொருள்சுழன் றுயுமால்
வழியு தீம்புன லார்தர வண்மையின்
செழிப்புற் றோங்கு மரஞ்செடி புல்லெலாம் ?
விழிப்புற் றூர்பணி யாற்றுவ பூவுயிர் ?

13. "சத்தி யாரது தாழ்ந்தனர் ஏற்பவர் ?
பத்தி மீறினர் பாடுத லார்புகழ் ?
அத்த! அந்தமில் சுந்தர! யாவனீ ?
எத்த கையிருப் புன்னதி யாண்டையான் ?"

14. "இனிய சொப்பனம் போன்மன மூக்கியே
தனிய வாமிக வோங்கு கருத்தெது ?
மனத்து நோய்மிக வாட்டுவ தெப்பொருள் ?
எனது யிர்வளி யென்றுறு நம்பகம்."

15. "உலக நாதனே! நீண்டவா! உண்மையில்
நிலவு முன்னிருப் பெங்கணும் நீள்கடல்
அலகி லாவலி லாழ்குர லோடிதைப்
பலகால் ஓங்கித மாலெடுத் தோதுமால்."

16. "வாழ்வு வாழ்வென வைய முழங்கிடும்
ஆழ்ந்த தண்மையும் வெப்பமும் ஆங்குறும்
போழ்து வைகறை யூக்க மிகுந்திடத்
தாழ்ந்தி யாரடி வைய மகிழ்வுறும் ?"

17. "நானு ளேனென நல்வரத் தோசையோ
வானு மெங்கணுங் கேட்டிட வாழ்கநான்
நானு மோங்கியு ரைத்தனன் நாற்புற
வானத் திக்கொடென் னோசையும் வாழ்கவே!"

---

12. பூ=பூமி 14. வளி=காற்று.

18. "எந்தச் சத்திமுன் னேற்றநற் பாதையை
நந்தா வன்பொடு நானெழக் காட்டிடும் ?
சொந்த வாழ்க்கையில் சூழ்வதேன் பேரவா
இந்தத் தீவிர வேகமோ டென்னகம் ?"

19. "கடவு ளேயுயிர் வாழ்வதோ ? காரியங்
கடப்ப தென்னினிக் காசினி வாழ்ந்துநான்
விடநி ரந்தர வேதனை நொந்தனன்
படர்வ தோவிறை வாவுடன் சொல்லுக."

20. வாயு வீச்சினோர் மாயைத் திரையெனப்
போய தொன்றெனின் புக்கதோர் காட்சியே
ஆய வைகறை அன்னவிப் பூமியுந்
தூய சுந்தரத் தோற்றமுங் கொண்டனள்.

வேறு

21. கூதிரின் திருமகள் பிறங்கு கோயிலின்
தாதுகு சாலைகள் தயங்க வேய்ந்தெனத்
தாதுபொன் னென்மணி வயல்கள் சார்ந்தன
மேதினி நெடுந்தொலை பசுமை விளங்குமால்.

## இமயவுச்சிகள்

22. சிருட்டியின் கற்பனைச் சிவணு முயர்வுடைத்
தொருபெரு மகிழ்ச்சியாந் தண்மைக் கழகிடம்
இரும்புவி யாறுகட் கேற்ற தாயகம்
இரத்தின மணிகளுக் கேற்ற பெருநிதி.

23. கனியுறக் கத்திடை யின்பக் கனவிடைப்
பனிதவழ் மெய்சிலிர்ப் பெழுந்த பெற்றிபோல்
பனிமுடிக் கவினுறு மலையில் படருமால்
நனைவரு பூஞ்செடி நறவு மலர்க்கொடி.

---

21. கூதிர் = ஐப்பசி, கார்த்திகை: மேகம் நீங்கிச் சந்திரன் நன்கு ஒளி செய்யும் பருவம் சரத் காலம்.
22. சிவணும் = போன்ற

24. தரணியின் மாசிலா வமைதிச் செல்வமொன்
றரசுவீற் றிருந்ததவ் விமய வடித்தலம்
அருவிதண் ணுறுழக்கொடு பாடி யழகிசை
பரப்புமால் தம்முயிர்ப் பரந்த நுகர்வினை.

25. முல்லைம லர்ந்தென முறுவ லிப்பென
எல்லையில் வானகத் தியங்கு மின்குழு
கல்லியல் உயர்மலைக் கவின்சி ரிப்புதான்
நல்லவன் சிவன்பிறை யழகை நாட்டுமே.

26. மோதலைச் செய்தனன் பாறை மூட்டுகள்
வாதனும் மகிழ்வுடன் வழங்க வெதிரொலி
மேதகு பெருமலைத் திண்மை மேன்மையை
ஓதினன் சாரணர் என்ன வியங்கினன்.

27. விண்ணிதழ் பருகிடும் வெள்ளிப் பனிமுடி
ஒண்மலை யடுக்குகள் ஒன்றன் பின்பல
மண்ணகம் பிறங்கிடும் மாலை மேகமாம்
வண்ணவண் ணக்கலை யாடை வனைந்துமே.

28. நிறைமதிக் கங்குலில் நெடிய வுச்சிகள்
நிறைபுகழ்ப் பெருமைகள் இவற்றின் சார்பிலே
முறையுற வமர்ந்தன விமய முன்றிலின்
மறைவிலா தியற்றின மோன மன்றமே.

29. கடப்பரி தாகிய வான நீலமே
சடப்பொருள் திண்மையா யமைதி தாங்கிடும்
நெடுங்தொலை யுச்சிகள் ஓங்கி நீண்டுதம்
நெடுங்குறை பாட்டினைச் சுட்டி நிலவுமால்.

30. இமமலை யழகிய வுச்சி யெழினிரை
அமைந்தன மனிதனின் ஆவ லுயர்ச்சிபோல்
கமைபுவி யுறுமகிழ் வின்ப மேன்மைகள்
அமைவுடன் விண்ணினுக் கவைவி ளக்கிடும்.

---

26. வாதன் = காற்று.

29. நீலநிறம், வானத்தின் சடத்தின் திரட்சிபோல் காண்கிறது.

வேறு

31. நெடுமலை மடிபோன் ருங்கோர் நீள்குகை மனுகண் டானே
வடுவில தழகுத் தூய்மை வாழ்விட மாக்கிக் கொண்டான்
அடுத்தவண் எரியுஞ் செந்தீ சத்தியின் எழுச்சி யன்னக்
கடுகடுத் தெரிந்த தன்றே கதிரவன் கதிரும் நாண.

32. கடற்கரை யிடத்தே வேள்வி காதலொ டியற்றி னானே
திடமதி கொண்டு தானே யருந்தவத் துறையிற் சென்றான்
படர்ந்தது மனுவி னுள்ளம் விண்ணவர் வேள்விப் பண்பே
அடலவா தூண்டுகின்ற வூக்கமிக் கடைந்தா னன்றே.

33. கிளர்ந்தெழு மூக்கத் தோடே கேழிளங் கதிரோ னென்ன
வளர்ந்தனன் மனுவும் நாலாப் பக்கமு வனப்பு மிக்க
அளப்பரு மியற்கைச் செல்வந் தன்முனர் ஆர்ந்தி ருக்க
உளங்கனிந் தாண்டுத் தாகக் கண்களால் வாரி யுண்டான்.

34. முனைந்தனன் சமையல் வேள்வி தானிய முறையிற் சேர்த்து
வனைந்தது கருத்த வாடை வளர்ந்ததீ யெழுந்த தீபம்
வனத்துலர் விறகுச் செந்தீ தழலெழ வழிந்த நெய்யின்
வனவிசும் பெல்லாந் தூய நறுமணம் மல்கி வீசும்.

35. மனத்தகம் நினைந்தான் "என்னைப் போலவே மனிதன் வேறு
தனதுயிர் விளையாட் டோடு தவிப்பனேல் இறும்பூ தில்லை"
இனியதாம் வேள்வி யெச்ச வமுதினை யிட்டு வந்தான்
"இனியிதை யருந்தி வாழ்வன்," எனநினைந் தகமகிழ்ந்தான்.

36. துன்பமா மாழ்ந்த பாடந் தோன்றவும் இரக்கங் கொண்டான்
தன்மய னனன் ஆழ்ந்த மோனமாஞ் சலதி மூழ்கிச்
சின்மய தவத்தி ருந்தான் தீக்குழி யெதிரே நோன்பின்
தன்னுரு போலி ருந்தான் இலையுதிர் காலந் தன்னில்.

37. இருதயந் துடித்தி யங்கும் புதுப்புது சிந்தை யேறும்
ஒருகுறிக் கோளு மின்றி மனுவுயி ருழன்ற தன்றே
இருண்மயம் அவன்பிற் காலம் விதவித வையப் பாடே
உருவுசன் மலவுங் கொண்டு மனுதனை யொறுத்த தன்றே.

38. ஆண்டகைக் கையப் பாட்டி
னரைகுறைத் தெளிவு தோன்றும்
ஆண்டியல் பொருட்க ளெல்லாந்
தொழின்மய மாக நிற்கும்
வேண்டிய மட்டுஞ் சீவன்
வீணிலா முயற்சி மேவுங்
காண்டகு மியற்கை தன்னில்
தன்னிருப் பிருக்கக் கண்டான்.

39. கடற்கரைக் காற்றுத் தூண்ட
வலையெழுங் காட்சித் தென்னக்
கடவுளின் தூண்ட லாலே
பலதொழில் கிளம்பக் கண்டான்
இடத்துறு தனிமை யாலே
கனவுகள் கிளர்ந்தெ ழுந்த
திடவிதி யருளின் மாந்தர்
செழுங்கனு நனவா கும்மே.

40. கடலகக் குழப்பத் தாலே காலகிளர்ந் தலையா நிற்குங்
கடல்வடிந் தகலப் பூமி யுலர்ந்துபின் பசுமை காட்டும்
உடன்மனத் தளர்வு நீங்கிற் றழகிய காட்சி யூக்கத்
தடமலர் இதயம் பூத்துத் தாரையின் மகிழ்தேன் சொட்டும்.

41. வெள்ளிடை நீலந் தன்னில் ஒளியலை விளங்கா நிற்குங்
கள்ளமின் மனத்தே தோன்றும் புலனுகர் கனவு வையங்
கள்ளென வின்பை யூட்டி யலௌகிகங் கடிந்தொ ழித்துத்
தள்ளரு முவகை பொங்க மனுதனைத் தானி ழுக்கும்.

42. இயல்புறு பசிபோல் பண்டை வாழ்வவா புதிய தீண்டுந்
துயரமுமின்பும் பண்டைப் பான்மைபோல்கிளர்ந்து தூண்டும்
பயப்பயப் பகலி ராவும் பழகுறு மாறி மாறி
வியனுயிர்க் கரையைச் சேர விழைதரு மனுவின் சீவன்.

---

41. அலௌகிகம்=இம்மண்ணுலக விடயங்களினும் புறம்பான முத்தியுலகம் பற்றிய எண்ணங்கள்.

வேறு

43. தவமுயற்சிப் புலனடக்கத் திண்மையினால்
தாங்கரிய விழைவு மீறும்
அவமிகுந்த பாழிடத்தே யிருள்வாழ்வின்
மீறியதே யாவல் வேட்கை
நவதென்றல் தொடுவதனுன் மயிர்சிலிர்ப்பு
நல்லுடலில் பரவிற் றன்றே
தவருது நம்பிக்கை யளகத்துத்
தேன்மணத்தின் அலைக ளோங்கும்.

44. குறைபாட்டின் உணர்வுமிக மனுவுள்ளங்
கொடுந்துயரால் எழுங்கொ தித்து
நிறைவின்மை மேன்மேலும் எழுப்பிவிடும்
நிலவுலகில் கலகந் தன்னைக்
கறையில்லாக் கனவுலகம் இனிமைத்தே
கவினுடைத்தே யூக்க மீற
வெறிமூள மகிழ்சிலிர்ப்பில் நிரல்நிரலாய்ப்
பிறந்திறந்து வெறிதா கும்மே.

45. துணைகுறித்த துயரினுக்கும் மாந்தர்க்கும்
போராட்டத் தொல்லை யின்றேல்
அணைதோல்விக் குறைபாட்டுக் காதைதனை
மனமுடைந்திங் காரே பாடும் ?
துணையேது மில்லாத வாழ்வேயெத்
துணைக்காலந் தனிமை நோதல் ?
அணிகருத்தை யெவர்க்கியம்பல்? தனதுள்ளந்
திறவாதே யவல மாகும்.

## மனுவின் தற்கூற்று

46. "இருட்பரப்பில் விளங்குறுவிண் மீனினங்காள் !
பொலிவுடையீர் மறைவுற் றிந்தத்
திருவில்லா வுலகினுக்கோ ரமைதியுறு
தண்மைதனை யளிக்க வல்லீர்

பெருமிதத்தோ டுவகையெனும் இறும்பூதின்
பிழிசாறு நீவி ரன்றே !
இருநிலத்துத் துயர்நிறைந்த மன்பதைக்கோ
ரின்பமைதித் தண்மை நீவிர்.''

47. ''மாலையெனு மடநங்காய்! மலர்க்கரத்தே
மணிவிளக்காம் விண்மீ னேந்தி
வேலையிடம் அணுகினையுன் செம்மேகப்
பொன்னுடை விலக்கித் தோன்றும்
மாலைநிலா, வதன்மறைவில் முறுவலிப்பாய்
வியப்பளிக்கு மாதே நீயார் ?
சாலவுன தழகின்பால் பேராவல்
பொங்கிற்றுல் சமையா துள்ளம்.''

48. ''விண்மீனும் கண்ணீரால் இருளென்னும்
மைகுழைத்து மாலை வேளை
மண்விசும்பின் நெறியற்ற கொடுங்கோலாம்
மாகாதை எழுதும் போது
தண்மதியி ராமடந்தை! முறுவலிப்பாய்
தாமரையி லினிது பாடும்
வண்டெனவே தினந்தோறும் புவியகத்தே
வந்துகளிப் பூட்டு கின்றாய்.''

49. ''புவிக்கினிய முத்தளித்து மந்திரங்கள்
ஓதியபின் மறைந்து போவாய்
தவிப்பாயே திசையெல்லாம், விம்முறலின்
சஞ்சிதம்போல் விடுவாய் மூச்சுச்
சவிக்காற்று மறைவினிலே பெருமூச்சு
வாங்கினளாய்ச் சலித்துச் செல்வாய்
அவிவேகி! யெவன்காண விவ்விரைவு?
வேண்டற்க தூற்றும் வையம்.''

47. விண்மீன் = வெள்ளி, சுக்கிரன்; வேலை = கடற்கரை.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1615

50. "நிலாவிரவே! கலகலெனச் சிரிப்பெவனோ?
நின்சிரிப்பைச் சொரியா தேவீண்
உலாநுரையில் நதியலையில் செடிகொடியில்
பனித்துளியில் உறங்கு மூப்பம்
விலக்கிமுகத் திரைசிரிப்பாய் நாணமுடன்
விரைகின்று யாரைத் தேடக்
கலக்கமுடன் பாழிடத்தில் எம்மறதி
திரைநினைவில் விரைந்தாய் காண?"

51. "வெள்ளிப்பூம் பராகம்போல் இவ்வளவு
பொழியாதே பொடியின் வெள்ளம்
வெள்நிலவின் மிகுவெறியில் பைத்தியமே
முழுகிடுவாய் விரைவில் நீயும்
வெள்ளிமணி பதிந்ததுணி வெறியுற்றோய்
விழுந்ததுவோ கழன்று கீழே
அள்ளியெடு மணிமுத்தஞ் சிதறினவே
கடற்காத லாழ்ந்த நங்காய்."

52. "கிழிந்ததுவோ கருந்துகிலும்? இளமைமிகு
வெறியாளே! யிரவே! கேளாய்
இழிவுலகுன் மாசற்ற கவின்குவியல்
ஏன்றவகை கொள்ளை கொள்ளும்
விழுச்செல்வம் அளவில்லை யழகுக்கோர்
முடிவில்லை வெறுப்பேன் கொண்டாய்?
முழுமறதித் திரைநின்றும் முனநுகர்ந்த
வகநெருப்பை முனைந்தாய் தேட."

53. "மறந்தனனே முயன்றிடினும் நினைவில்லை
மனக்கடலில் முழுகிற் றேதான்
நறவின்போ? வன்புருக்கோ? கடுமயக்கோ?
நனிதுயரோ? வறியே னேதும்
மறந்தபொருள் ஏ!யிரவே! எதிர்ப்பட்டால்
மனங்களித்துக் கொள்ளை கொள்ளேல்
மறக்காதே ஒருபாக முனக்களிப்பேன்
மதியுறுத்தி யென்பால் சேர்ப்பாய்."

---

50. குழப்பம்=ப்ரளயம். சிரித்தல்=நிலவு. பாழிடம்=வானம்

# மூன்றும் படலம்

# சிரத்தை - காமன் மகள்

## சிரத்தையின் கூற்று

1. "யாவனீ வாழ்க்கை வேலை
யலையெறி மணிபோ லின்றுன்
பாவன வழகு வெள்ளம்
பாழிடம் பொழியா நிற்கும்,
யாவனுன் அழகு மோனம்
அமைதியோ ? தனிமை தானோ ?
தாவரு மனத்து மாலோ
சகமறைச் சிக்க றுப்போ ?"

2. வண்டிசை யினிமை கொண்ட
மங்கையின் வாணி கேட்டான்
பண்டைநாள் கம்பன் வாயின்
கவிதைகள் பாய்வ போலப்
பண்டரு வாம்ப னின்றும்
பாண்மொழி மொழிய லானுள்
தண்டமிழ்க் கவிதை போன்ற
தண்ணிய மகிழ்வு கொண்டான்.

3. மெய்சிலிர்ப் பலைபோல் பாயக்
கொள்ளையுண் டான்போல் மேவிப்
பெய்வளை கண்டான் பாடுந்
தேன்மிகப் பொழிந்தா லென்னப்
பொய்யிடை யாவள் ஈண்டுப்
போந்தனள் அடிகள் நோக
மெய்யினை யறிய வாவல்
மீறிய தடங்காப் பண்பில்.

4. சுந்தரக் காட்சி கண்டான்
கண்ணிணை யமைந்து சூழும்
இந்திர சாலங் கண்டான்
பூங்கொடி பொலிவ தென்ன
அந்தர நீல மேகம்
புகுந்திடை யலர்வ தாங்கோர்
சந்திர பிம்பம் போன்றுள்
மங்கையைத் தரைமேல் கண்டான்.

5. எழிலுடல் பரந்த வுள்ளம்
எனவளர்ந் திருக்கு நீண்டு,
பொழில்வள ரிளம ரம்போல்
காற்றதி லொசிந்தாள் பூவை
சுழியுறு நீலு ரோமக்
காந்தர வாட்டுத் தோலே
யழகுற வணிந்த தாலவ்
வாடையும் வனப்பு மீறும்.

6. மேகவ னத்துச் சேந்த
மின்மலர் மலர்ந்த தென்ன
ஏகநீ லாடை! பாதி
யுடல்திறந் திருக்கு மாதோ
மேகமண் டலத்தே மாலை
மேலைவான் கதிர வன்றன்
மோகமார் பிம்பம் போன்ற
செந்நிற முகம்பி றங்கும்.

7. நீலமா மணிக்குன் றத்தி னுட்கரு நிலைபெ ருமல்
கோலமா ருச்சி மீறித் தழலொளிக் குவியல் கான்றிச்
சாலவு மடக்கத் தோடு தயங்கிடு மெரிவாய் போலப்
பாலனவ் வசந்தன் கங்குல் பொழுதிலப் பாவை நின்றுள்.

---

7. எரிவாய் = எரிமலை.

8. சுந்தர நீல மேகக் குழவியொன் றருகே தோன்றிச்
சந்திர வமுத மாந்தல் போல்புயந் தழுவு கின்ற
பந்தன மின்றி நீளுஞ் சுருணிறை யளக பாரஞ்
சுந்தர வதனப் பாங்கர் சூழ்ந்ததங் கலையா நிற்கும்.

9. சுந்தர வதன மீது தோன்றுமம் முறுவ லிப்புச்
செந்தளிர் தவழ்ந்த பால செழுங்கதிர்க் கிரணம் போலும்
அந்தமி லிளையாள் வையத் தருட்கனி வடிவத் தாளின்
சந்ததம் பரிசத் தாலே சடப்பொருட் குணர்வு தோன்றும்!

10. முகந்தவழ் முறுவலிப்பு! வைகறை முதலி ரேகை
சகந்தொழு காலை விண்மீண் தலைமகன் மடியி னின்றும்
அகமகிழ் கனவு நாணம் அழகுணர் விவைதம் மோடும்
மிகவிரைந் தெழுவ தென்ன மேவிய காட்சி காட்டும்!

11. மீண்டுமம் முறுவ லிப்பு! மென்மலர்க் கான கத்தே
தூண்டுமென் காற்ற தாலே நறுமண வடிவந் தோன்ற
ஈண்டுப ராக மிட்டே யினியதேன் றிரைமீ தாக
மாண்டொழில் வனைந்ததாகும் அழகிதை யெழுதற்பாற்றே?

12. மனமகிழ் வூட்டும் வேனில்
நிறைமதி மணிக்க திர்போல்
வனப்புடன் மயக்கு றுத்தி
மலர்தரு முறுவ லிப்போ
தனதகத் துவகை தூண்டத்
தடையெது மின்றிப் பிள்ளை
புனைவிளை யாட்டுப் போலப்
பூவையின் இதழ்மேல் தோன்றும்.

வேறு

13. "மனுவுரைத்தான், "விண்ணுக்கு
மண்ணுக்கும் இடைதோன்றும்
எனதுயிரோ சிக்கறுக்காப்
பிதிர்போல வெரியுற்கை
யெனமயக்குற் றுள்ளழிக்கும்
எக்கறவு கொண்டின்றே
யெனைத்துணையு மில்லாது
பாழிடத்தில் இரக்கமுறும்."

14. "தன்னகத்தே நதிதோன்றுக் கெடுவினையின் மலைபோலுங்
கன்மலையின் பனிப்பாறை புனலாகக் கரைந்தொழுகி
மன்னுகடல் அணையாதே வருந்துதல்போல் பதங்கெட்டு
மின்னெழிலாய் சடப்பொருளா யுறைந்ததுகாண் அவவாழ்வு."

15. "உயிர்ப்பிதிரைச் சிக்கறுக்க முயல்தோறும் ஒண்ணினைவில்
செயிருடைய முனைநிகழ்வு சேரவுணர் வில்லாதேன்,
உயர்தேவ பெருவாழ்வின் நினைவுகளின் ஒருழிதோறும்
நயமுடைய நிகழ்கால வருளிசையு மறைந்தகலும்."

16. என்னுரைத்தல் ? கருங்ககன
விருட்குகையி லொருநோக்க
மின்றியுழல் வளியலையோ?
பாழரசோ வென்வாழ்வு?
சொன்மறதி வலத்துளோ!
சயந்தோன்றற் கிடுமுளையோ?
தன்னுறுதி யொளிவரியோ?
வுயிர்க்கொள்கைச் சடப்பொருளோ?

17. நனியுலர்ந்த விலையுதிர்க்கண்
நயன்வசந்தத் தூதோநீ ?
கனவிருளின் கொடிமின்னோ?
கோடையிளங் கால்விருந்தோ?
தனிவிண்மீன் ஆசையொளி
தானோவின் கனிச்சுவையோ?
இனியமைதி யருளுநீ
கற்பனையி னெழிலலையோ?

---

16. உயிர்க்கொள்கைச் சடப்பொருள் = சடப்பொருள் தன்ன
கத்தே உயிர்த்தோற்றத்தின் கருவைக் கொண்டிருந்தது.

17. தனி விண்மின் = துருவ நட்சத்திரம்.

18. அந்தமலர்க் கவ்வேனில் ஓதுகுயி லன்னுளாம்
வந்தவளும் உரைதருவாள் மனுத்தாகந் தணிதற்கே,
"எந்தையுயிர்க் கன்புமகள் எழிற்கலைகள் பயில்வதற்கே
கந்தருவ நாடதனைக் காமுற்று வாழ்பவள்நான்."

19. "இடையூறென் றில்லாமல் இயற்கையகந் திரிதருவேன்
நெடிதூக்க மனத்தாகம் நேடுவனோர் உண்மைதனை
அடுத்தெழுமா லோரைய மவ்விமயங் கண்டதுமே
படிமடிப்புப் போலுமலை பயங்கரமே துயரென்னே!"

20. "கனியின்பத் தமிழ்ந்திருப்பேன் அகத்துறங்குங் கனச்செய்தி
மனவூக்கம் விறுவிறுப்பாம் பொழுதுமலை வழிபற்றிப்
புனலுறைந்த பனிப்பாறை மிசைநடந்தேன் புனைவென்னே!
வனப்பென்னே! கண்வேட்கை மலையழகால் தணிந்ததுகாண்"

21. "ஊழிதருங் கடலோர்நாள் உயர்ந்துமலை யடிதாக்கப்
பாழினுயிர்த் தமியள்நான் படர்ந்தேனு லார்வமுடன்
வாழியிடம் பலியன்னம் வைத்தானோர் புண்ணியனோர்?
ஆழியிடம் பிழைத்தானோர் ஆளென்ப தனுமானம்."

வேறு

22. "தவசி! யித்துணைத் தாங்கருந் துன்பமேன்?
அவல வேதனைக் கித்துணை வேகமேன்?
பவமாம் வேலைநி ராசைத் தரங்கமேன்?
நவம னந்துயர் வாடலெக் காரணம்?"

23. "அழகு வேடம ணிந்துதி யாகமே
தொழினின் றீர்த்தயல் பாதையில் தூண்டுமோ?
கெழுத கைமனங் கொண்டிலை பேரவா
அழகி தாக்கிட வாருயிர்ச் செல்வமே."

24. "முன்ன றிந்திலா மூள்துயர் தூண்டிட
உன்னி யெண்ணில் பிதிர்களை யூன்றியே
கன்ம மார்க்கமே பூண்டிலை காதலே
நன்மை யோர்ந்திலை நல்லெதிர் காலமே."

25. "சச்சி தானந்தத் தாண்டவன் லீலைகள்
இச்ச கத்துரு வேற்றவன் காணவன்
இச்ச கம்பரி ணுமத்தி லேற்றுவன்
இச்சை யோடுல கித்தொழி லாழ்ந்திடும்."

26. "மங்க லத்தொழிற் பாலது நன்மையே
யிங்குற் பத்தியும் இச்சையின் பாலதே
யெங்க யிர்த்தனை நற்செருழி லின்பினை
துங்க வாழ்வகந் தோல்விபு குத்தினை."

27. "எதனை வேதனை தீவினை யென்றனை
யெதனை யீசனின் சாபமி யம்பினை
யதனை யோர்க வருள்வர தானமே
இதும றக்கிலா தேற்கம னத்தகம்."

வேறு

28. "எல்லையு ளடங்கி நிற்குங் கடலென வியைந்த சாந்தத்
தொல்லுயி ரகத்து மோர்நாள் குழப்பமாங் கிளர்ச்சிதோன்றும்
ஒல்லெனப் பொங்கும் வேலை யொண்மணி யலைக ளாலே
வல்லையி னழிவ போல வின்பெலாந் துன்பாம் மாதோ."

**வேறு**

29. "துன்ப வேதனை துன்னிய வாய்ப்பினுல்
மன்னு வையகஞ் சேதன மாண்புறுந்
துன்பே யின்பவி காசமாய்ச் சூழுமவ்
வன்புக் கோயிலான் நற்கொடை யாகுமே."

30. மனுவு ரைத்தனன் தன்துய ரோங்கிடக்
"கனியின் சாறென நின்மனங் கான்றிய
இனிய சொல்லென துள்ளம தோகையும்
புனித வூக்க வலையெழப் பொங்குமால்."

31. அன்பு பொங்கிட மாதும் அறைந்தனள்,
"துன்ப வச்ச மிகுந்திடக் கொண்டனை
பன்னு வாழ்க்கையின் பந்தயந் தோற்றனை
நின்னு யிர்பட நிற்குமோ வென்றியும் ?"

வேறு

32\. "உலர்த்துங்தவம் நரநல்லுயிர்க் கொன்றேகுறிக் கோளா?
உலகல்லலும் உண்ணைதலுங் கணமாத்திர முறையும்,
அலரும்மகிழ் மிகவூறிய பெருநம்பகம் அழகின்
மலருங்கன வாக்கத்தது மனதிற்பட முளைக."

33\. "காலத்திள மியற்கைக்கலங் காரம்புது மலரே
தூலத்தரை வீழும்மலர் துவண்டேமறைந் தொழியுங்
கோலத்துயிர் ஓங்கும்புது மாற்றம்மது கூர்ந்தால்
காலப்பழங் குருட்டுத்தனஞ் சீர்கேட்டினைத் தூண்டும்."

34\. "புதுமைக்குறும் பழமைத்தனம் பாம்பின்னுரி போலும்
புதுமைத்தனத் தியற்கைக்கது பொறுக்காதொருக் கணமும்
புதுமங்கல வழிச்சீவனும் ஓங்குங்கவின் பொங்கும்
புதுமைக்கெழி லாதாரமும் புதுமாறுதல் கண்டாய்."

35\. "சிருட்டித்திரு ரதமானதி யுகப்பாறையில் சினைத்
துருண்டோடுதல் சரதம்மிதை யுணர்வார்மதி வல்லார்
பெருந்தேவருங் கந்தர்ப்பரும் அசுரக்குழு தாமும்
உருண்டோடுவர் மாற்றப்புதுப் போக்கைத்தெளிந்
[துணர்ந்தே."

36\. "ஏக்கத்தவன் நீயேதனி யிப்பார்மிசை யொருபால்
ஆக்கத்துறு மியற்கைத்திரு வழகேற்றதங் கொருபால்
போக்கின்வினை போகத்திலும் போகம்வினை சேர்க்கும்
போக்கில்சட வுலகத்துடன் ஆன்மாகளி பொங்கும்."

37\. "தன்னந்தனி யாகாதது தனிவாழ்க்கையின் வேள்வி
யுன்னற்கரு தவமேற்றனை யுயிர்க்குத்துய ருறுமால்
பன்னற்கரி தியற்கைத்தனம் பற்றக்கனிந் தணுகும்
நன்றுந்துணை யின்றிங்கிலை யான்மத்திரு நண்ணல்."

38\. "கடினத்தவ பாரத்தடி நசுக்குண்டனை கதறிப்
படியிற்றன துதவிக்கொரு பாவைத்திரு விலையோ?
கடிதின்னுயிர் வாழ்க்கைத்துணை காமுற்றனன் காளை
கடனாற்றுவன் பணியாற்றுவன் கருத்தென்னருள் தருவாய்."

39. "சேவைத்திரு நின்பொன்னடி சேர்க்கத்துணி வுற்றேன்
சேவைப்பட கொன்றேகொடு பவசாகரந் தீருஞ்
சேவைப்பொருள் பற்றித்தது சேர்க்காதது மோகஞ்
சீவத்தனம் என்னுருயிர் பண்பட்டது தியாகம்."

40. "தள்ளற்கரு மாலோடருள் நன்னம்பகந் தயையோ
டெள்ளற்கரி தினிமைத்தது நுகர்ந்தாளுதற் கெழுக
உள்ளம்மணி நிதியின்றிரள் உனக்கேமிகு சொந்தங்
கொள்ளைப்பட வுரிமைத்தது வையம்மினிக் கொள்ளேல்."

41. "அரிதிற்றிகழ் உற்பத்தியின் மறைமூலம தாவாய்
வருமானவ சிருட்டிக்கொடி நின்காவலில் வளர்க
மருவார்ந்திடு மலர்தாமென மகிழ்லீலைகள் புரிக
பெருகும்மணம் பரவிப்புவி பெருவிண்ணகம் மகிழ்க."

வேறு

42. "மனுவறி யாயோ வீசன் மங்கள வரதா னத்தைத்
தனிப்புகழ் வென்றி வீர னுகெனத் தான்மு ழங்கும்
இனிப்பயப் படற்க வுண்டு மங்களம் அமர ரேறே
புனிதநற் செல்வ மீண்டுங் கேந்திர வாழ்க்கைப் புக்கு."

43. "தேவபண் பாட்டுத் தோல்வி யழிவினுல் மனித சீவற்
காவன பொருட்கள் நம்முன் அளவிலாக் குவிய லுண்டே
சேவக! வவைய னைத்தும் மானவச் செல்வ மாமே
பாவன மனம வற்றுல் தக்கதோர் பாட மேற்க."

44. "மானவ வுணர்வும் இச்சை வளர்ச்சியும் வரலா றன்றே
மானசக் கருத்த னைத்து மெளியதோர் வடிவிற் கொள்க
மானசத் திரைய வற்றைப் பதிகநன் மாந்தர்க் கெல்லாம்
மானச வள்ர்ச்சி யாவும் ஒழுங்கொடு வளர்க மாதோ."

45. "எரிமலை வெடித்துத் தூளாய் மறையினுங் கடலின் எல்லை
யிரியினும், சிதறி விண்மீன் வீழினும் மனித வாழ்வும்
விரிந்தநற் கருத்தும் வாழ்க மானவந் தினமும் வெல்க
அருளிறைப் படைப்பு நோக்க மவனியில் விரிவ தாக."

46. "இரகநட் சத்தி ரங்கள் இளர்சுடர்ப் பொறிக ளென்னப்
பெருமிதக் களிப்பி னோடு மிதித்தனர் பெயர்க மாதோ
தரணியோ டனிலந் தண்ணீர் தாமிவை யடங்கி நிற்கப்
பெரும்புக ழோடு மாந்தர் ஓங்குக பேரி டத்தே."

47. "சாகரந் தாரை யாகப் பிளவுறத் தீவும் ஆமை
யாகமுழ் கிடவு மன்றி மேன்மிதந் திடவு மாங்கு
நாகமுங் குறுக்கே நின்றால் நனியுடைத் தவனு யோங்கி
மாகமும் நடுங்க நிற்கும் பெருமித மனித மூர்த்தி."

48. "தன்குறை பாட்டி னின்றுந் தெளிகவே தகுந்த பாடந்
தன்னுயி ரியக்கில் எண்ணில் தோல்விகள் தாங்கிற் றேனுந்
தன்மனத் தகத்தே மாந்தர் திண்மைசே ருக்கங் கொள்க
பன்னரு தோல்வித் துன்பே பயன்மகிழ் வாக மாறும்."

49. "மானவ மனதி ரம்பும் மாபெரு மின்னல் சத்தி
மேனனி வழிபி றங்கக் கூருநல் வளர்ச்சி மேவும்
மானவன் மறும லர்ச்சித் திட்பமோ டியல்வா னுகில்
மானவப் பண்பாட் டிற்கே திண்ணமாம் வெற்றி மாதோ!"

---

46. அனிலம், அநிலம் = காற்று
47. நாகம் = மலை. மாகம் = பெரிய வானம்.

## நான்காம் படலம்

# காமதேவன்

### மனு தன் முன்வாழ்வின் வசந்தம் நினைந்து கூறல்

1. "சீவனக் கான கத்தே சேயவிண் ணலைக ளூடே
ஆவலொ டினிமை யூட்டும் மோகன வேனி லானே
மேவிசொப் பனத்தி லாழுங் கங்குலின் பிற்பான் மீதே
தாவிய தெந்தப் போழ்தில் தாவொரு மொழிசொல் லாமல்."

2. "நீவரக் கண்டு தானோ நிறைவெறிக் குயிலும் பாடும்
நீவர வமைதிச் சோம்பல் மொட்டுகண் திறக்கும் நீயும்
மேவினை மறைந்தே பாதி கண்மலர் பூவின் மீதே
தாவிய நனைம ணத்தால் தரணியே யழகி லாழும்."

3. "மலர்த்திரை மீதா யுன்புன் முறுவலே வனைபோழ் தத்தே
கலகலென் னருவி யோடுன் இன்னிசை கலந்தொ லிக்கும்
அலர்சிறை மயிலி னோசை யெத்துணை யினிமைத் தாகும்
அலரொலி யெதிரொ லிக்கும் உயிரெனு மடிவா னத்தே."

4. உன்னரு ளாலே பால ரோவிய ராகி நாளும்
பன்னரு விழைவு தம்மை யெழுதுவர் பாங்கி னன்றே
யன்னவர் பார்வை முன்னர் ஆருயி ரொளிப்ப தங்கள்
இன்னதென் றறியா வண்ணம் புகையெழுத் தெழுதாநிற்கும்.

5. மலர்க்கொடி திரையை நீக்கிக் கடைக்கணித் தமுத மானும்
மலர்மதுப் பொழிவினாலே மார்பெனு முன்றில் கண்ணே
அளிக்குலஞ் சூறை யாடப் பாசனம் பெருக்கு மாகில்
அலகிலா உலகச் செல்வங் கொடிமுனர் நிற்கா தன்றே.

---

5. அளி = வண்டு

6. ''கண்களைக் கவரும் பூவுங் காமரு சிரிப்பும் வீசுந்
தண்மண மூச்சு மெங்கே? தரணிவ சந்த மெங்கே?
பண்களை மிழற்று கின்ற பறவைத மிசையு மெங்கே?
யெண்ணரு களியாட் டங்கள் ஓய்ந்தன வமைதி யீண்டி.''

## இயற்கைப் பொருள்களூடே பரம்பொருள்

7. இன்னன பலவும் பன்னி யேங்குமுள் ளத்த னாகி
யின்னலால் விளையுந் தோல்வி மூச்செனு வுருவெ டுக்கப்
பின்பவன் மனத்து திக்கும் எண்ணமும் பெருவி ருப்பும்
மன்னிட விடையீ டின்றி மூள்தவ மனுவு ரைக்கும்.

## மனுவின் கூற்று

8. ''தரணிதன் நீலப் போர்வை யேயுனக் கேனோ காண்டற்
கரியன மறைகள் ? நீயு மெழில்திரை யெனம றைப்பாய்
உருள்தரு நிலவே! யேனோ சுற்றினை துன்பத் தோடே ?
பரவின மீன்பூ தோல்விப் பளுவதன் கொள்கை யென்ன.''

வேறு

9. ''புதுநீலத் தண்டலைகள் புளகிதத்தால் சாய்ந்தாடும்
மதுமலரின் சுவைக்காதை மலர்வுக்கோர் முடிவில்லை
முதுவானம் மலர்ந்துளது மொட்டென்ன மகிழ்மணத்தின்
புதுத்தேனாய் அமைந்தனவே வானிழியும் பனித்துளிகள்.''

10. ''வானமெனும் நீல்கமலந் தேன்மணமாம் வலையொன்றைத்
தானங்கு வீசமன வண்டன்பின் தாவியிடும்
மோனமிலை யணுக்களுக்கு வீண்விரைவு மூளுவதேன் ?
கானநடம் அளவில்லை யுயிருக்கக் கதியென்னே ?''

---

8. நீலப் போர்வை = வானம். மீன்பூ = விண்மீன்களாகிய பூக்கள். 9. தண்டலை = சோலை.

11. "அணுநடனத் தளர்முச்சு மோகமய மகங்கவரும்
அணுவுயிர்க்கு முயிர்நிழலாய் வடிந்தொழுகும் அக்காற்றே
யணுத்தொளையும் விண்ணகத்தில் அழகாரும் உயிர்குளிரும்
நுணுக்கத்துப் படைப்புமறை நூல்வல்லா ராரறிவார் ?"

12. "ஒளிமீன்கள் விண்ணழகில்
வெறிமிகவே வுணர்விழக்கும்
ஒளியழகை யென்கண்கள்
உண்டுண்டு தாகமிகும்
வெளித்தோற்ற மிவையெல்லா
மறைதானோ வெறுநிழலோ ?
ஒளிந்துளதோ வெழில்திரையுள்
விலையில்லா வொண்செல்வம் ?"

13. "எண்ணரிய வனப்பாரும் மறைபொருளாந் தோற்றங்கள்
கண்ணிணைமுன் பலவேடங் களிப்போடு கூத்தயருங்
கண்ணிணைகள் பதிந்தனவக் காட்சிகளில் நிலையாக
ஒண்மறையைக் கிழித்தகல வூற்றமிலை யவற்றினுக்கே."

14. "குறைவில்லா நிதிப்பொருளே!
யுனதியல்பைக் கூறுயோ ?
நிறையுன்பண் புணர்வேனே ?
நெடுவலைக்குள் உயிர்ப்பறவை
சிறைப்படுத்தி வைத்திருப்பாய்
திருவிளையாட் டறிகிலனே
அறைவாயே கடைமுறையில்
சிறையறுத லுன்னுலோ ?"

15. "வேனிலிராச் சோம்பலுறு மேகமறை மீனோநீ?
கானிழியுந் தண்ணதியோ வென்னுள்ளக் கனலுக்குத் ?
தேனிறைய பொழிகின்றுய் செவிக்குள்ளே நீதானோ ?
மேனிவருந் திரைமோனத்துள்ளிருந்து மொழிவாய்கொல்?"

---

14. நிதிப்பொருள் = கடவுள்.

16. "பொதியத்தின் குளிர்தென்றல் போலினிய வுன்பரிசம்
அதிமயக்கில் உணர்வதனை யாழ்த்தும்மெய் சிலிர்ப்புறுவேன்
முதிருவகை பொங்குதலால் முகிழ்தருமால் கண்ணிணைகள்
மதிமயக்கும் வெறிக்களிப்பும் மகிதலத்தே பரவினவே."

17. இவ்விழைவே கனிவெட்க வெழிலுருவாய் மனம்பரவி
யெவ்வளவு நாணமுடன் இடுகிறது முகத்திரையை
யிவ்விழைவில் தெளிவில்லை யெனினுந்தன் மலர்க்கரத்தால்
கவ்விழி மூடியெனை யழகுவெறி யமிழ்த்திவிடும்.

18. நிலவொளியின் வானத்தே நீல்கொண்ட லணிவகுக்கும்
நிலவருகே வெள்ளியுடு நெடுந்தொலைவில் மினுமினுக்கும்
நிலவொளியில் வெண்மேகந் தூய்மையுறு வைகறையின்
நலவருகை யெனுமறையை நாடியறை தரும்போலும்.

19. "செழுந்தளிரின் போர்வையெனச்
சீர்மேக மெல்லடுக்கம்
முழுநிலவின் கதிர்மேலே
மொய்க்குமதை யென்னென்பேன்!
பழரசம்போல் தொலைவிருந்தே
யிசையாரோ பதமுடனே
குழலூத விண்மயிர்க்கால்
தோறுமொலி குழைந்தொலிக்கும்."

20. "இயற்கையகப் பொருளெல்லாங்
கடற்காத லெழிற்செல்வம்
நயத்துடனே காணுதுமிங்
நற்போர்வை திறவென்று
வியப்புடனே விளிக்கும்பின்
வியன்திரையா யுறுந்தாமே
யியற்கையெலாங் காதலனின்
எழிற்காட்சிக் கெழுந்தோங்கும்."

18. கொண்டல் = மேகம்.

வேறு

21. "அலகிலாத் திருவினன் கடவு ளமைத்ததாம்
நிலவென அழகுடைத் தந்த நீள்திரை
விலகுமேல் எல்லையில் ஊக்க மிகுந்திட
அலையெடுத் துவகையி னுழி பொங்கிட!"

22. "நுரைபட மடித்தனன் நூறு நூறென
நிரைமணி யொளிதரச் சேடன் நீண்டென
விரைந்தெழுந் துறுவெறி மீறிப் பாடினன்
கரையிலாக் காதலன் காட்சி காட்டுவன்."

23. "அழகைநு கர்வதன் பயனே தாயினும்
அழகிய வாழ்வெழில் விழைவை யழிக்கிலேன்
எழும்புல னடக்கியும் ஆற்றி யிருந்தவம்
விழுமன வுரிமையை வீழ்த்த விழைகிலேன்".

24. "இருட்பொழு தொளிர்விரே யொளிமீ னினங்களே!
திருவலர் வைகறைச் செழுமை யறிதிரோ ?
உருவிலா தையுற வொழிய வுறுதியுங்
கருக்கொள மனத்தகங் கமழும் பேரொளி."

25. "சுந்தர மெத்துணைத் தூய்மை! கோமளம்!
மந்திர மறையெனப் படைப்பு மறையுமே
இந்திரி யப்பகுத் தறிவு மியற்கையின்
சுந்தர நுகர்வினுக் கெதிர்ப்பைத் தூண்டுமால்."

26. "ஊறொளி நாற்றமுஞ் சுவையு மோசையும்
ஊறிலை நுகர்வன விறும்பூ துறுகிலேன்
சேறிலா வலைகளின் ஊக்கம் போலவே
ஊறிலாப் புலன்விழை வூன்றித் துய்ப்பனால்."

27. "எனைவெறி யூட்டுவீ ரின்பக் கனவுகாள்!
அனைவரு மீனெனச் சிதறி யழிவதென் ?
அனைவெறி மயக்கதி லயர்வுத் தோல்வியாம்
மனமவ னம்பகம் மறக்க மூழ்த்துவேன்."

28. இருளலை நடுவிலே யின்ப வெறியிலே
திருமனச் சேதனந் தளர்வு சேர்ந்தது
இருளிர விறுதியின் யாமப் போதிலே
மருண்மனு வாழ்ந்தனன் கருத்தா மாகடல்.

29. மனத்தடி வாரமே பண்டை வாழ்வதன்
நினைவுக ளோர்பெரு முலகாய் நின்றன
மனப்புல னுழன்றதவ் வுலகி லலைந்ததால்
இனயதுன் புறுமனத் தமைதி யியலுமோ?

30. விழிப்பு மறந்தன னுணர்வும் வீழ்ந்ததா
லெழுந்தன வவனக மின்பக் கனவுகள்
கழிபெருங் கனவெனுங் கடலுண் மூழ்கியே
விழைவொடு மனமது விளையாட் டயர்ந்தது.

வேறு

31. மனமு றங்கு மயக்கமாஞ் சொப்பனம்
நனவொ டுள்ளகம் நல்லியக் குற்றிடும்
அனய வேளையி லாண்டகைக் காதுகள்
மனங்க வர்வதோர் ஆழ்குரன் மாந்தின.

## அசரீரியாகக் காமதேவன் கூறல்

32. "அடைந்த வேட்கையு மாறிய பாடிலை
கிடையா தூழிய கல்கினுஞ் சாந்தமே
கொடிய வெள்ளமு மீண்டதா லாறியே
யுடைத்த மைதியை யோங்குமவ் வேட்கையே."

33. "என்னு ராதனை நாளு மியற்றினர்
அன்ன விண்ணவர் முற்று மழிந்தனர்
பின்னென் னச்சர வுற்றிலை சாந்தமே
இன்னும் பித்தனு யாரையுஞ் சூழ்ந்தனன்."

34. "என்னு ராதனை யேதினஞ் செய்தனர்
என்கு றிப்படி யாடினர் தேவரே
என்றன் மோகவி தான மிறங்கினர்
அன்னுர் போகவி லாசநு கர்ந்தனர்."

35. "காதல் தோழனுன் காமனென் பாரெழில்
சாத னங்களி யாட்டினுக் கீபவன்
நாத மாய்நகைத் தூக்குந கைப்பினைச்
சேத னத்தில சைவுறு சீவனுன்."

36. "இரதி யென்றுணை விண்ணவர் தம்மனம்
பிரதி வேளை கவர்தரும் பெற்றியள்
விரும்பு பாவை சிருட்டிதன் வேளையி
லுருவ முற்றிட நற்றுணை யானவள்."

37. "ஊழி பின்னரு மெம்மிருப் புள்ளதால்
வாழ லாயினம் மாவுல காதியில்
ஆழ்கு ழப்பிலே யாதி புவித்தலம்
வாழ்பொ ருட்குரு வந்ததெம் மூலமே."

வேறு

38. "இளங்கொடி யன்ன மங்கை வசந்தகா லத்தி லின்ப
வளங்கெழு பருவ முற்று வனப்புறச் சிரித்தா லென்ன
வளப்பரு மியற்கை யின்றுங் கோடையி லழக மர்ந்த
வொளிபட ராண்பெண் ணுக விரதியு நானு முற்றோம்."

39. "கடவுளின் மூல சத்தி சோம்பலைக் கடந்தன் றேங்கத்
தொடர்ந்தன புல்ல ணுக்கள் தூய்மைசேர் காதல் பொங்கப்
படர்தரு வானம் வேனில் திருவிழாப் போது கூடற்
கடர்ந்தன தழுவ லான விரண்டிரண் டாகச் சேர்ந்து."

40. "முதன்முதல் சேர்மு ழுத்தங்
கவர்ச்சியி னணுக்கண் மோதும்
இதன்பின ரரும்புந் தோற்றம்
மயக்குறுத் தெழும்பும் மாயை
சிதறிய வணுக்க ளூழி
தீர்ந்தபின் சிருட்டிக் காக
உதவிய சேர்ந்த வேனில்
பூவிழா வுவகை யூட்ட."

40. முழுத்தம் = முகூர்த்தம்.

41. "பருப்பதம் பொழியு மாறு
பைங்கொடித் தோள்க ளாலே
உருகிய காத லோடு
தழுவுமப் பூமிக் குற்ற
பெருங்கடற் புடவை யோரம்
விசிறியாம் பெற்றி நோக்கின்
அருள்புவி யிடத்த வாண்பெண்
இரண்டிரண் டாகக் காணும்."

42. "இரதியுங் காம னும்
இன்றளிர் பூமொட் டென்னத்
தரணியி லசைந்தோ மச்ச
ராசரப் புதுமிர் மாணச்
சிருட்டியாங் கான கத்தில்
செழுமலைக் காற்று வீச
இருவரு மலர்ந்து வந்தோ
மணுகிடா தேக்க மொன்றும்."

43. "இருவரும் பசிதா கம்போ
லிழைந்தனர் வாழ்ந்து வந்தோம்
ஒருநிறை யாக்கி னேம
வாமகிழ் விரண்டி னுள்ளும்
ஒருமுறை விருப்பம் பின்னர்
உவகைவந் தடையு மன்றே
இருவரா லிறைவ னுற்றுஞ்
சிருட்டியி னிளமை யோங்கும்."

44. "அரம்பையர் விழையுந் தோழி
யெனதுயிர்த் துணைவி யாகி
யிரதியு மவர்கள் நெஞ்சாம்
வீணையி னிசையா னாளே
அரமட வாரை யன்னாள்
கவர்ச்சியொ டினிமை சூழக்
கரவில துள்ளத் திற்குக்
காமரு வமைதி யானாள்."

45. "பரவுமால் வேட்கை யென்றால்
படருமால் தணிவு மாங்கே
இரதியா லுவகை யூட்டிச்
சமநிறை யியற்றி வந்தோம்
விரவினர் வாழ்க்கை யாற்றில்
தேவரும், பின்னர் வீழ்ந்தார்,
கரந்தன வின்ப மெல்லாம்
அறிகுறி யொன்றுங் காணோம்."

46. "அழிந்ததென் தோற்றந் தேவர்
நலங்கெட வனங்க னானேன்
அழிந்திலை யுணர்வு பின்ன
ராய்ந்திட வெனது திட்பம்
ஒழிவிலா தலைவேன் முன்னை
யூழ்வினை யுதவி யாலே
வழியொழுங் காகச் சென்று
விருப்பினுக் குதவி வந்தேன்."

47. "செழும்புவி சிருட்டிக் கூடுந் தொழிற்களச் சிறப்பு மாகும்
ஒழுங்குறும் வருதல் போத லுய்ந்தனன் வலிமை யுற்றான்
சுழலுவர் படைப்பு வட்டத் துண்டென மாந்த ரெல்லாம்
உழலுவர் தொழிற்க ளத்தே யுயிரின முளவ ரைக்கும்."

48. "நீலவா னகத்தே காலைச் செம்மையேன்? நீளி டத்தே
கோலபன் னிறத்த மேகக் குலங்களங் கெதனைக் காட்டும்?
காலையு மாலை தானுங் கன்மமா மொளியேன் கொள்ளும்?
நீலநீள் மாயை மீது கொள்ளிவாய் நிறைமீ னேனோ?"

49. "சிருட்டியின் தோற்றந் தன்னில் சீறுமக் காற்றுப் போல
உருவினைப் பெற்று மாந்தர் மனத்தொடு படைப்புக் குற்ற
அருந்துணை யானே னன்னா ரகத்தியல் பண்புக் கேற்ப
அரியதாம் பற்றுக் கோடு பற்றினன் கடன்க ளாற்ற."

48. நீலமாயை = வானம். கொள்ளிவாய் = விண்மீன்.

50. "பரிந்தவெம் முயற்சி யாலே பண்புறு மனித வாழ்வு
தெரிந்தது ஊழி வெள்ளத் தெமதிழி வுடைமை, தீமை
புரிந்ததும்; உயிர்வ ளர்ச்சிக் கன்புதான் புனித மார்க்கந்
தெரிதர வன்புச் செய்தி போந்தனள் சிரத்தை யீங்கு."

51. "எம்மகள் சிரத்தை தூய
இதயமு வனப்பு முற்ருள்
கொம்மைசேர் வண்ண வண்ண
மலர்க்கொடி யழகு கொண்டாள்
செம்மையள், பாலம் போன்ருள்
சேதன சடப்பொ ருட்கும்
எம்மகள் அருவி ஞவுக்
கேற்றதோர் விடையு மாளுள்."

52. "சீவன வெப்ப வெண்ணத்
தணைப்பதோர் தண்மை சேர்ந்தாள்
பாவன மாதை வேண்டின்
பற்றுக தகுதி தன்னை."
ஆவன வின்ன பன்னி
யக்குர லோய்ந்த தன்றே
தேவனுங் கண்ணன் வாயின்
தீங்குழ லடங்கிற் றென்ன.

53. உறக்கமுங் கலையச் சொன்ஞன்,
"ஒளியனுள் வரிப்ப தற்கார்
சிறந்தநல் வழியைக் காட்டும்?
திருவனுள் பெறுத லெங்ஙன்?"
இறுக்கவோர் விடையா ரங்கே
யிரிந்ததக் கனவுக் கூட்டம்
பிறந்தனன் கதிரோன் கீழ்ப்பால்
பிறங்கொளி வீசிக் கொண்டு.

54. கொடிமனைக் கான கத்தே தவழ்தரு குளிர்ந்த நீழல்
அடித்தலத் திடையே செம்பொன் ஒளிவிளை யாடு மன்றே
படியுயர் தேவ சோம வமுதமாம் பானங் கொண்ட
கடிகமழ் கிண்ணஞ் செம்மல் கரமிசை பொலிந்த தம்மா.

## ஐந்தாம் படலம்

# அவா

1. சிரத்தையு மனுவும் மார்க்கத்
 தெளிவிலர் வழிச்செல் வார்போல்
நிரந்தரந் திரிந்தா ருள்ளம்
 நாடொறுந் துடிக்குஞ் சேர
ஒருவனில் தலைவன் வந்த
 வொருத்திநல் உள்ளந் தூயாள்
அருவினை வொருவ னாகி
 லொருத்திநல் விடையு மானாள்

2. அவனுயிர்க் கடலை யொப்பா
 னவளணி யலையைப் போன்றாள்
அவன்புது விடிய லொப்பா
 னரிவைபொற் கதிரைப் போன்றாள்
அவன்மத யானை மாரி
 மழைபொழி வான மன்னான்
அவள்கதிர்க் கற்றைச் சேர்ந்த
 வனப்புறு மேக மன்னாள்.

3. அருவியின் கரைமேன் மாலை வானகச் சூன்மே கத்தே
இருவரி மின்னன் மின்னி யழகொடு பொருதா லென்னச்
சிரத்தையு மனுவுந் தத்தஞ் சேதனக் கயிறு தாங்கிப்
பொருதனர் சுருக்கி னுள்ளே புகுந்தில ரொருவ ரேனும்.

---

1. இல் தலைவன்.

4. நிறைந்ததொப் படைத்த லேனும்
 கொடையினுக் காவன் மீறும்
உறுவது முன்னேற் றந்தான்
 ஓர்தடை காதற் குண்டே
சிறந்தது காத லேனுஞ்
 சேர்ந்தது தனிமைப் பாழே
யறிமுக மில்லார், ஊழும்
 இணைத்தலை வேண்டிற் றன்றே.

5. அருகிருந் தாலு மென்ன வனையவர் தொலைவி ருந்தார்
அரிதரி தென்ற வெண்ணம் அகங்குடி கொண்ட தன்றே
இருள்வனத் தோரம் மார்க்கஞ் செல்பவர் கண்ணை யீர்க்கும்
ஒருகதிர்ச் செம்மைபோலத் தொலைவுறு மன்னர்நோக்கம்.

6. கடலிடை யுதவி யின்றி மங்கிய கதிரோன் மூழ்கப்
படலமா மிருளி லோடிப் பதுங்கின கதிர்கள் கூட்டம்
அடங்கின தொழிற்க ளெப்பி னலகிலா வுயிரி னங்கள்
அடங்கின வண்டி னங்கள் அருதுயி லியற்கை கொள்ள.

7. மங்கிய வானத் தாரும் இருளுடன், மறைய வீழுஞ்
செங்கதிர் கடைசி யாகத் தழுவுமவ் வேழ்மைச் சேர்க்கை
அங்கொரு விரங்கு வையம் அந்நொடி தோன்று நிற்குந்
தங்குபாழ் துயரக் கூட்டில் தான்பிரிந் தகன்ற தன்றில்.

8. காமனன் றளித்த செய்தி கருத்துற நினைத்தி ருந்தான்
காமரு மனையி னுள்ளே காதலர் மனைமாட் சிக்குத்
தேமெழிற் கனியும் நெல்லுந் திரண்டன நாற்புறத்துஞ்
சேமமார் விலங்கு மேயுஞ் செழும்பயிர் விளையா நிற்கும்.

9. செம்மலுக் காவல் நாளும் புதியன படைத்தல் செய்தான்
அம்மக ளாணை யில்லத் தமைப்புகள் வனப்பு மிக்குச்
செம்மையி னிலங்கு வேள்வி யமர்ந்தனன் இறும்பூதெய்தும்
இம்மியு மறிந்தா னில்லை யூழியி னியக்கந் தன்னை.

## மனுவின் உணர்ச்சியைத் தாக்கியதோர் நிகழ்ச்சி

வேறு

10. ஒருமாயை! யவண்மருங்கே யொருகாளை வருமோடிக்
கருணைவழி மோகமுயிர் பெற்றதுவோ? கரசமலம்
மிருகவுடல் தைவரவும் மிடறுயர்த்தி யன்போடு
வெருவுகொளா தெக்களித்து விசிறியென வாலசைக்கும்.

11. கரைகாணு வுவகையொடு காளையது குதிகொள்ளும்
தரைமீது நாற்புறமும் அன்புவலை தான்பின்னும்
நிரைகண்ணு லவளழகை நேயமுடன் நின்றருந்தும்
நிரைபுனலின் கண்வழியா நேயமதைப் பொழிதருமால்.

12. அன்புருக வாவலுட
னவ்விலங்கைத் தடவினளே
நன்மனத்தி னல்லெண்ண
மன்புருவம் நாடிற்ரோ?
அன்றவன்பா லொருநொடியி
லணுகினரே குழந்தைகள்போல்
பொன்விளையாட் டழகுமிக
வினிமையெழப் புரிந்தனரே.

13. பற்றின்மைப் புறச்சாம்பல்
அமுக்காரும் பாய்காற்றால்
பற்றெழியக் குறைதணிவின்
பொரிநெருப்புப் பாய்ந்தெரியச்
சொற்றனனே, "கனல்கவளஞ்
சூழ்விக்க லெதற்காகப்
பெற்றனனே யெவன்தரவிப்
பீழைமிகு முள்ளெரிவை?"

14. "இதுவிலங்கேல் பெறலாமோ
வெளிதினிய வழகன்பை
இதுவளரு மெனதருளா
லெனக்கரிய வின்பருந்தும்

மதுவன்மை யெவ்வுயிருந்
தன்பங்கை மாந்தினபின்
இதுவுன்ன தெனவெறிவர்
பசையற்ற தென்விரதம்.''

15. ''நன்றியிலா விலங்கேநீ
நற்பளிங்குப் பாறையடி
மென்பசிய பாசியனுய்
மெல்லிதய முடைக்கின்ருய்
என்னிதயத் தனந்திருடிக்
கொடும்பாவ மியற்றினையே
இன்பவெறி யெனதுரிமை
யிதைவிழைவாய் திருடன்போல்.''

16. ''எனதன்ரே நனியழகுச்
செல்வமெலாம், இவையாவும்
எனதுடமை யாமன்றே
யெரிகனலாம் வடவைத்தீ
எனவுள்ளேன், கடலலைகள்
திரள்போல மன்னுலகத்
தனமெல்லாம் என்னெருப்பைத்
தணித்தற்கே யுள்ளனகாண்.''

17. குழந்தையுறு குறும்போடு
குரிசில்முன் வந்தனளே
அழகார்ந்த தன்குற்ற
முகனமர்ந்து தானேற்றுக்
கழறினளே, ''நிலையென்ன?
காளையனுய்! கருத்தென்கொல்?
விழியொருபால் செவியொருபால்
விழுமனமோ மற்ருெருபால்.''

---

17. தன் குற்றம் = சிரத்தை மனுமீது அன்பு நேரடியாகக் காட்டாது ஓர் காளைமீது காட்டி மனுமனத்தில் அழுக்காறு உண்டாக்குதல்.

18. "உனக்கென்ன நேர்ந்ததுசொல்?
பொருளென்கொல்?" எனக்கேட்டாள்
மனுகொண்ட வழுக்காறு,
மந்திரத்தால் படவரவ
மெனத்தணிய வவனுடலை
யினிதொளிருங் கரகமலம்
நனிதடவ வகங்குளிர்ந்தான்
நங்கைவனப் பதுகண்டு.

## மனுவின் கூற்று

19. "இல்விருந்தே யறிமுகத்திற்
கரிதாறு யெப்பொருளோ?
நல்விடையும் வரும்பொருளை
நவிறல்போ லூக்கமிகுஞ்
சொல்லரிய மகிழ்வுடனே
சூழ்ந்துன்னைக் குலவிவரும்
பல்பிறப்பின் நண்பென்னப்
பாவைநின தன்புபெறும்.

20. "நீயாரிவ் விதமென்னை
நின்பக்க மிழுக்கின்றாய்
மாயாவீ! கவர்ந்தென்னை
மாதொலைவி லகல்கின்றாய்
ஓயாதுன் அழகருவிக்
கொளிக்கண்கள் கூசினவே
சாயாதே கண்டிருந்தும்
அறிமுகத்தைப் பெற்றிலனே."

21. "உன்னகத்தே யருள்வனப்பின்
எம்மாயை யொளிந்திருக்கும்?
உன்பொருட்டான் மரங்கொடிகள்
தண்ணிழலை யுதவுங்கொல்

மன்னுயிருஞ் சடப்பொருளும்
மகிழ்பொங்கி யசைந்தாடும்
உன்னழகைப் பருகற்குத்
துடிதுடிக்கும் ஊக்கமுடன்.''

22. ''பொழிகின்றுய் திரள்திரளாய்த்
தண்ணன்பைப் புவியெங்கும்
இழிவுலகு துளித்துளியாய்
இவ்வன்பை முயன்றிணைக்கும்
பொழுதிறுதிச் செம்மேகப்
புதுநிழலில் அசைந்தாடுங்
கொழுங்கொடியை நீயென்று
கொள்வேனல் இறும்பூது.''

23. ''வேனிலிரா வியல்புவகை
தன்னேடும் வெறியோடுந்
தானிறங்கி மெதுவாகத்
தரைமீது படிதருமால்
சூனியத்தோ டென்னிதயந்
துயருழக்கும் பாழடைந்து
மோனஞ்சேர் குடியற்ற
முழுதழிந்த வில்லம்போல்.''

24. ''மனவெளியாம் பாழிடத்தே
மாயைகுடி கொள்ளவொரு
பனிநகையோ டின்பவெறி
காட்சியுறப் பரவிவருந்
தனிவிருந்தே! புலன்வேட்கைத்
தண்ணிழனீ! உடனலுனீ!
கனியமுதே! திண்வலிநீ!
கற்பனைதன் அழகுருநீ!''

25. ''உன்னுண்மை வடிவென்கொல்?
விருப்பென்னும் ஒளிக்கதிர்கொல்?
என்னிதயம் உனைநாடும்
இடையின்றி முல்லைமலர்

என்னநகை நாற்புறத்தும்
இன்னழகைத் தெளிக்குமெனில்
அன்னவகை யென்னுள்ளம்
அலராது கூம்புவதேன்?''

26. அறிவித்தாள் முறுவலித்து,
''விருந்தானேன், அறிமுகம்வீண்
வெறியிவ்வா றென்பொருட்டுன்
விழுமனத்தின் றேன்கொண்டாய்?
சிறுமுகிலை யூர்ந்தவனுய்ச்
சிரித்தமுகச் சந்திரனுஞ்
செறிகதிரைப் பொழிந்தவனுய்
நமையழைக்கச் சேர்ந்தனன்வா.''

27. ''கருவிருளைக் கரைந்தொழியக்
கலக்கின்ற வொளியணுக்கள்
உருவாகும் வெற்றிடமாம்
ஒளிவிண்ணில் புதுவுலகம்
திருவமுதக் கதிர்நிலவை
மனங்குளிர மிகவுண்டு
வெருட்டுதுநாம் மனத்துயரை
வீணுகை உள்ளழியேல்.''

28. ''உயருச்சி யிடையற்ற
வொளிவிண்ணை முத்தளிக்குந்
துயர்மூழ்கிக் கதிரொளிகள்
துவண்டவனி நின்றெழியும்
அயர்வொழித்துக் கடல்நிலவில்
ஆழ்ந்தியற்கைக் கனவுலக
நயன்துய்த்தே யுயிர்ப்பயனை
நாந்துய்ப்போ முயர்ந்தெழுக.''

---

28. கதிர் ஒளிகள் = சூரிய கிரணங்கள்.

29. இயற்கைத்தாய் முறுவலித்தாள்
இருவர்கண் அன்பலரும்
மயக்குறுத்துந் தண்ணிலவு
மலர்ச்சுண்ணம் பறந்தெழுங்கொல்?
நயமிகுந்தா ளவனெழிற்கை
பற்றினளாய் நகைசொரிந்தாள்
வியன்கனவோ டன்புவழிப்
பணத்தோடும் விரைந்தனரே.

30. மரங்கொடியும் புதர்குகையும்
மதிநிலவாம் அமுதாழும்
இரவளிக்கும் விழிப்பென்னும்
நற்செய்தி யியற்கைமகிழ்
திருவிழவைக் கொண்டாட
மாதவியுஞ் செய்யுமணம்
உருவாகுஞ் செக்கரென
மலர்ச்சுண்ணங் கலந்தநிலம்.

31. கொடிமனைக்குள் பனித்துளிமேல்
மரஞ்செடியின் குலவுநிழல்
மடியிரவின் நிழல்கிடந்தாற்
போற்படியு மயலோடு
துடியிதயக் காட்சியது
கருத்துவெறி சுழற்சியறுங்
குடிகொள்ளும் மனத்தகத்தே
பேருவகைக் குதுகலமே.

## மனுவின் கூற்று

32. "மனைவிருந்தே! பார்த்திருந்தும்
மாதுன்னை உணர்ந்தில்லேன்
உனையழகு மிகவமுத்தும்
இறும்பூதின் உவகைமிகும்

29. அன்பாகிய வழிப்பணம். 30. மாதவி = குருக்கத்தி

முனைக்காலப் பெருநுகர்வுஞ்
செம்மேகம் முட்டிவெறி
யெனதாவல் ஊக்குவித்த
வெழில்வாழ்வும் நினைவுவரும்.''

33. ''மறந்தனனுன் முன்னிகழ்வும்
மனமடங்கிற் றசைவின்றிச்
சிறப்போங்கும் நினதழகைத்
தெரிவிக்கு மவ்விழைவே
உறுமதியும் உருண்டுருண்டு
விளக்கும்மோர் ஒளிக்கருத்தைப்
பெறற்கரிய ளுன்வயத்தன்
பெறத்தகுந்த பேறிஃதே.

34. ''மதியினிய வமுதென்னுங்
கதிர்பொழியு மாருதத்தில்
அதிபுளகும் உறுமந்தம்
மகரந்த வணிச்சுவையில்
அதிதத்தின் எம்மண்மென்
ஆன்மாவை யூக்குவிக்கும்
மதிமுகத்துன் அருகிருந்தும்
என்றனுயிர் மயங்குதலேன்?''

35. ''உள்ளுணர்வாங் குழிநெருப்பின்
ரேகையுடன் எரிந்தாலும்
உள்ளெரிவில் ஓர்மகிழ்ச்சி!
யோரின்பம்! செந்தழலின்
வெள்பொரிபோல் என்விருப்பும்
ஊக்கமொடு மீறியெழும்
விள்ளாதே யெரிந்தாலுங்
கொப்புளமும் வெப்புமிலை.''

---

33. மதி=சந்திரன், புத்தி. 34. அதிதம்=இறந்த காலம்.

36. ''புவியுயிரின் மறைச்சாரம்
போன்றியங்கும் இளவழகீ!
புவிமாயை யிசையென்ன
வடிவெடுத்தாய் பூவையெவள்?
தவிப்புறுவான் யாத்திரிக்கோர்
தண்விசிறி யுதவுதல்போல்
பவக்கடலில் வாழ்வுவழிக்
களைப்பகற்றும் பண்பினைநீ.''

## அமுதநிலவில் காதலர்

வேறு

37. மாற்றஞ் சொல்ல வாய்தி றந்தாள்
மனுவன் போடு கேட்டனன்
ஊற்ற வானத் தங்க ரேகை
போன்ம லர்ந்த தொண்முகங்
காற்றுத் தென்றல் போலும் வாணி
கடல லைக்கு மொக்குமால்
நாற்றக் கான்ம லர்ந்த மொட்டுப்
போலு நங்கை வாண்முகம்.

38. ''தோழ! நீயேன் மனமு டைந்த
யர்ந்து தோன்றும் பித்தனுய்
ஆழி யோங்கு மலைக ளென்ன
வகங்கு ழப்ப முற்றிடேல்
வாழி நீயே யமைதி கொள்க
வடிவெ டுத்து நிறைமதி
சூழ வாழ்ந்த மோனம் யாவ
னங்குத் தோன்றும் இங்கொடி?

39. ''கன்னி மாதி யற்கை நீலச்
சேலை யோக மன்றது
மின்னு டுக்கள் மங்க லத்துப்
பொரிக ளென்ன விளங்குமால்

அன்றி யிந்த நிலவுக் கருகு
லடிசி வந்த தாமரை
தன்னில் பூசொ ரிந்து பூசை
தானி யற்று மாளவன்?''

40 ''கண்ணி மைக்கி லாது திங்கள்
கங்குல் கண்டி ருந்தனன்
தண்ணி லாவ னந்த நீழல்
தான டைந்த தற்புதம்
விண்ணி னின்றும் இடைவி டாது
சொக்குப் பொடிகள் வீழுமால்
வண்ணப் பண்கள் கூடற் காக
வெதிரொ லிக்கும் வண்ணமாய்.''

41. மனும னத்தி லாவன் மீற
மயக்கப் போதை யுற்றனன்
இனிய வங்கி பொங்கத் துன்ப
நெஞ்ச வின்பத் துடிப்புறுங்
கனிந்த காத லூக்கஞ் சூறைக்
காற்றுப் போல வோங்குமால்
அனைய வேளை யவன கத்தி
லுறுதி யற்றுப் போயினன்.

42. துறவு நீத்த மனுவு மங்கை
யங்கை பற்றிச் சொற்றனன்
''பிறதி னத்தி லில்லா மிக்க
வழகைக் காணப் பெற்றனன்
மறுவி லழகை மாறு வழகை
மறந்தி ருந்தே னிதுவரை
மறதிக் கடலில் நினைவுப் படகு
மாறி மாறி மோதுறும்.''

43. ''காமன் மகள்நீ வாழ்வு தோறுங்
காதல் துணைவி யாயினை
நாமஞ் சிரத்தை வாழ்வுக் கமைதி
நாளுந் தந்து வந்தனை

சேமக் குவிய லழகுக் காணு
யதனி னன்றோ செம்மலர்
நேம பூசை செய்யப் பூர
சத்தைச் சொட்டும் நித்தியம்.''

44. ''பிரள யத்துந் தப்பி வந்தோங்
கூட வூக்கம் பெற்றனம்
விரவு பாழ்ச கத்து மடியி
லொன்றற் காவி லைழந்தனம்
பரவு மூடு பனிபி ளந்து
நிலவு போல்ப டர்ந்தனை
கரமீ தேற்று விண்மீன் மாலை
காதல் செய்தி தந்திடும்.''

45. ''சுருண்ட வுன்றன் கூந்த லாலோ
மாயை செய்யுந் தூய்புவி?
மருண்ட வுண்கண் கருமை யாலோ
விருளி யற்று மகிதலம்?
இருளி லாழ்ந்த குரல தன்ன
மறையை யேற்கு முன்விழி
யுருப்ப டுத்தும் இனிய கனவுக்
கூட்ட முன்றன் முறுவலே.''

46. ''அலகி லாத பண்பி னீபல்
சாத னங்கள் கேந்திரம்
உலக வனப்பி யாவும் பெண்ணின்
வடிவெ டுக்க லுற்றதோ?
உலகஞ் சுற்றுங் கதிரோ னென்ன
உறுக ளைப்ப டைந்தநான்
அலைகு ழந்தை போல வுன்னை
யுற்ற மைதி பெற்றனன்.''

# ஆறும் படலம்

# நாண நலநங்கை

மனுவிடந் தன்னை ஒப்படைக்கப போகுஞ் சிரத்தைக்கு இயல்பாகவே நாணந் தோன்றலும் அதனை ஓர் மடமங்கையாக உருவகப்படுத்தல்.

## சிரத்தையின் கூற்று

வேறு

1. ''செந்தளிர்க் கோமளக் கோலச் சேலையில்
அந்தமி கும்மிளம் பூமொட் டன்னவும்
அந்தியின் பொழுதிருட் படலத் தழகினில்
செந்தழ லுயர்ந்தெழு தீப மன்னவும்,''

2. ''சுந்தரக் கனவுகள் மயக்கச் சுழலிலே
சிந்தனை மனத்தகம் வெறிசி றந்தெனை
முந்தெழும் பேரலை முன்னர் நீர்க்குமிழ்
அந்தமுங் கவர்ச்சியுங் கொண்டொ ளிர்ந்தென,''

3. ''மாயையு ணிழலென வருவாய் மணியிதழ்
ஆயசெங் கனிமிசை விரல்வைத் தழுத்துவை
நேயமு மருட்சியும் நிறைந்துன் கண்களில்
பாயுவ சந்தநீ ரொடுநல் லூக்கமும்.''

4. ''சாந்தவி ராத்திரி தயங்கு கொடியெனக்
காந்திமிக் கணுகினை நீயார் காரிகை?
மாந்தரி கத்தினைப் படித்து மயக்கினை
சேந்த மரைக்கரம் அணையச் சேர்ந்தனை.''

5. ''தெய்விக மலரெடுத் தன்புஞ் செவ்வியும்
பெய்தனை குனிந்தனை மாலை பின்னினை
பெய்யுமம் மாலைநின் றன்புப் பெருக்கமே
மெய்யழ கின்பமுன் னிதயம் மீறுமால்.''

6\. "உள்ளகத் திட்டனை யுற்ற புளகிதக்
கள்ளவிழ் இன்மணக் கதம்ப மாலையை
உள்ளமாங் கிளைகனிச் சும்மை யுறுத்திடத்
தள்ளுதற் கரியதோர் நிலையில் தாழுமால்."

7\. "நீனிறக் கதிர்களில் நெய்தவெ ழில்திரை
தானிடு வாய்வர தானம் போன்றதே
கானெழு மணத்தினல் சிறந்த பூந்துகில்
மேனியி னழகொடு மென்மை சானறதே."

8\. "அவயவ முழுவது மெழுகே யன்னவும்
அவற்றுறு கோமளச் சுவையி லமிழ்ந்தனன்
சவியுடல் சுருங்குநீ வந்து தாக்கவுங்
கவின்மன முறும்பரி காச மலர்ச்சியே."

9\. "சிரிக்கவெ டுக்கென விரும்பித் தெரிவையே
சிரிக்கலா திளவொளி முறுவல் தெரிப்பனல்
அரிபடர் கண்கொளு மழகு வக்கிரந்
தெரிசகங் கனவுல கென்னத் தென்படும்."

10\. "கண்மலர் போதினில் கனவு லகத்துறு
மண்ணெதி ரொலித்திடு மகிழ்வி னேசையை
அண்மையின் காற்றுவீச் சுவந்து பெருமிதத்
தண்மைசேர் காதலின் செய்தி தந்திடும்."

11\. இருதய பரவச மோநீ யெவளென
தருமையி னுரிமைக ளனைத்தும் பறித்தனை
கருத்தலர் பூத்திடக் காத்தி ருக்கவும்
பொறுக்குவை யுயிர்வனத் திருந்தும் பூவையே."

12\. தெரிவையு மிம்மொழி பகரச் செக்கரில்
சிரித்ததா லோருரு சித்தங் கனிந்திடச்
சிரத்தைவி னவினுக் குற்ற விடைகளை
யுருவெளி முனகியே யுரைத்த தக்கொடி.

## நாணநங்கை யுரை

13. "என்பெயர் நாணமென் பார்நீ திகைத்திடேல்
உன்னித யத்தினைத் தாங்கின் றேர்நொடி
இன்றிள கும்முன திதயம் நிறுத்தியே
நன்மொழி கூறுவன் எங்கு நகர்கிருய் ?"

14. "விண்டொடு மிமமுடி மேலே மின்னிடி
விண்ணிடித் திழிவது போல வேண்டரு
மண்ணகத் திளமைவந் துற்ற போதுயிர்க்
குண்ணிக ழினிமையும் வெறியு மோங்குமால்."

## இளமை வருணனை

15. "மங்கலக் குங்கும மானு மழகெதில்?
செங்கதிர்க் காலைபோல் சிறக்கு மன்பெதில்?
மங்கையர் மங்கலத் தெளிமை மாண்பெதில்?
பங்கமில் புதுப்புதுப் பான்மை யுறுமெதில் ?"

16. "எதனினே கண்களுக் கியலும் பன்னலம்?
எதனினே யவைமல ரன்ன வின்புறும்?
எதனினே வாழ்க்கையின் வேனி லிசைக்குயில்
பதமுற ஒலித்திடும் பஞ்ச மச்சுரம்?"

17. "இசையிடை மூர்ச்சனை யடம்பி டித்தெனத்
தசைமயிர் தொறுமெது தவழ்ந்தொ லித்திடும்?
நசைமிகப் பொருளெலாம் எதனல் நயமுடன்
அசைந்தெழும் வனப்புட னரிவை யறிவையோ?"

18. "யார்பொருட் டன்பினி லீர முகிலென
நீர்நிறைந் தொளிர்வன நேயக் கண்மணி?
யார்பொருட் டியங்குவ திதயம் மின்னெளி?
யார்பொருட் டாவது தண்மை யின்பமே?"

19. "எதன்பொருட் டெக்களித் தெழுமவ் வேனிலே?
எதன்பொருட் டந்தியின் காத லியங்குதல்?
எதன்பொருட் டுவகையு மின்பக் காலையில்
உதவுநண் பகற்குறு மூக்க மியக்கமும்?"

20. "பழமுதிர் சோலையில் அமைதி பரவவுங்
கிழக்கிடை நொடியிலே தோன்றிக் கிளர்ந்திடு
மெழிற்கதிர்ச் சந்திரன் அமுத நிலவினுல்
அழன்மனந் தண்ணலை யாதெ முப்புமால்?"

21. "மலர்களின் மெல்லிய விதழார் வருகையின்
பலவழிச் சிதறின பரிவின் காணுறும்?
மலர்களெ தன்பொருட் டளிக்குந் தேனுடன்
அலர்பொடி குங்குமச் சந்த மாகவே?"

22. "எதன்சய வோசையை யினிய செந்தளிர்
அதன்சல சலப்பினில் முழங்கி யறையுமே?
எதன்மிசை துன்பமு மின்புஞ் சேர்ந்தன
உதவிகொண் டாடுவ வுவகைத் திருவிழா?"

23. "எதனுகர் வினைவர தான மென்பரால்?
எதனுகர் வினையழ கெனவுஞ் சாற்றுவர்?
எதன்பெருஞ் சேதன மினிய வாவலை
நிதமுயிர் கனிவுற மாண நிரப்புமால்?"

வேறு

24. "அறிக வத்தகை வாலிபத் தன்னைநான்
அறிவு றுத்துவன் நன்மையுஞ் சீலமும்
எறியப் பட்டவள் காத விழந்தவட்
கறிவு றுத்தும் படிப்படி யாகவே."

25. "தேவ வாழ்விலே பேரெழில் மாதுநான்
தேவன் காமனைத் தேர்ந்து மகிழ்பவள்
ஆவ ளோர்தடை பின்ன ரகத்துறும்
ஆவற் கின்பமாந் தூண்டுதல் செய்பவள்."

**வேறு**

26. "அழிவு பின்னருந் தோல்வியி னுகர்வுக ளன்ன
பொழியு மின்பிடை யின்களைப் புறுவது போலச்
சுழியு மன்பதை மனத்திடைச் சூழ்ந்தனன் தங்கி
யழிவிற் றப்பிநான் வந்தனன் ஆவலைத் தூண்ட."

---

21. குங்குமச் சந்தனம்.

### வேறு

27. "இரதி தேவிநான் நாணமும் ஓர்பெயர்
பெருமை மேன்மைகள் போதனை பெய்பவள்
அரிவைச் சீறடிப் பொற்சிலம் பாகவே
பொருந்தி யோர்புது வோசைமு ழுக்குவன்."

28. "காம வல்லி கதுப்புறு செம்மைநான்
வாமக் கண்ணிணை மையென் றுளிர்பவள்
தேம வாங்குழல் நற்சுருள் போன்றவள்
காம நோயினை யுள்ளகங் காட்டுவள்."

29. "இளமைப் பேரழ கென்னுமோர் இன்பொழில்
களவு நேர்ந்திடா தாற்றுவன் காவலை
இளமை சேரென தாழ்ந்த நுகர்விஞல்
எளிய மாது கதுப்புச் சிவப்புறும்."

### சிரத்தையின் கூற்று

30. "உனது சொல்லெலாம் உண்மையாம் ஏ!ரதி
எனது வாழ்வினுக் கோர்வழி யெஃதுரை?
கனத்த துன்புழல் காசினி வாழ்க்கையில்
எனக்குப் பேரொளிக் கற்றைக ளெங்குறும்?"

### வேறு

31. நானறிந்தே னெவ்வளவு பலவீனர் நாரியர்கள்
ஆனதெங்கும் பெருந்தோல்வி கோமளத்தால் நிறையழகால்
நானறியேன், மனந்தளர்ந்து நலிகின்றேன் கருமேக
வானமழை யெனவிழியில் வழிநீரும் பொழிகிறதேன்?

32. "நம்பகமாம் மரநிழலி லெனதெல்லா நயந்தளித்துத்
தெம்பகலா தமர்ந்திருக்க வருத்தியுறு செயலென்ன?
அம்பரமீ னமுதொளிபோல் மெதுவிளையாட்டவணயர்வேன்
எம்மனத்தே பயன்கருதா வழித்தொண்டுக் குறுமாவல்."

---

29. இளமையே பேரழகு. 32. தெம்பு = மகிழ்வு.

33\. "படகின்றி நீந்துகிறேன் மனமென்னும் பாற்கடலில்
விடமாட்டேன் கனவமுதம் விழிப்பதனை விரும்புகிலேன்
மடமங்கை யுயிர்ப்படத்தில் வேட்கைநிறம் வார்க்கிறதேன்?
படத்தெளிவில் வரிக்குள்ளே கலைக்குருவம் பரிந்தளிப்பாய்.

வேறு

34\. "தாம தித்துத் தயங்கியி ருந்தனன்
சேம யோசனை சிந்தனை செய்கிலன்
ஆமெ னுள்ளகம் பைத்திய மாரது
நேம மில்லவள் நாளு மரற்றுவள்?"

வேறு

35\. "முயல்வேனே லளவெடுக்க முழுதளக்கப் படுவேனுன்
புயக்கொடியை நரன்மரத்தில் புனைந்தவளாய் ஊஞ்சலென
நயந்தசைவே ன்திதில்விளங்குந் துறவொன்றே யளிப்பேனுன்
பயன்கருதி மாருகப் பரிந்தொன்றும் விழைகில்லேன்."

**நாணநங்கை யுரை**

36\. "என்னுரைத்தாய்? பொறுபொறுநீ
கண்ணீராம் எண்ணீரால்
முன்னுயிரின் பொற்கனவை
மழைக்கொடையின் முழுதளித்தாய்
மின்னெழினீ வெறுஞ்சிரத்தை
நம்பகமாம் வெள்ளிமலைப்
பொன்னடியில் அமுதூற்றை
யுயிர்வெளியில் பொழிதருவாய்."

37\. "பகைக்கருத்துப் பெரும்போர்கள் நாளுமுளம் படர்தருமேல்
பகையசுரம் உறத்தோல்வி பணிதெய்வம் உறும்வென்றி
தகைகண்ணீர் முன்றுனை கருத்தெல்லாந் தானிட்டு
நகைநண்போ டொப்பந்த நல்லோலை வரைந்திடுதி"

---

36\. முன் = முன்னமேயே.

ஏழாம் படலம்

# தொழில்

1. அவன்முன்னர் கொடிச்சோமந் தொழிறுை யமைந்ததுகாண்
அவனுயிராந் திணிவில்லை யக்கொடிநாண் வலிந்திழுக்க
அவனுயர்ந்தா னம்பென்ன வருந்தொழிலாங் குறிநோக்கி
அவன்சும்மா விருப்பானே வருவேள்வி யழைத்திடவும்?

2. செவியொலிக்கக் காமனுரை புதுவிருப்பஞ் செழித்தோங்கக்
கவிக்கடலி னெழுங்கருத்தின் முழுகவெழுங் கனல்காதல்
நவமதுவை யருந்தற்கு நம்பிமனந் துடிதுடிக்கும்
அவவாழ்வுக் குறையின்ப வுணர்வதனுன் மனமழுங்கும்.

3. புயலெதிர்க்கும் படகொன்று நடுக்கடலே புகுதல்போல்
உயிர்வாழ்வின் நெடுமுயற்சிப் பெருவிருப்பில் நுழைந்தாழுங்
கயல்விழியின் சொற்பொழிவு, காமனுரை மனுகேட்டு
மயக்குபொருள் கொடுபுனைந்தான் மடுவதனைக் கடலாக.

4. நரன்மனத்தோர் முதற்கொள்கை யெழுந்துறுதி நாடும்பின்
உரன்மனமு மாதரிக்கும் உத்திபின ரெடுத்துரைக்கும்
ஒருவினவு வலுப்படுத்தி யிறைவலியும் மனவலியுந்
தருமுதவி கொண்டதற்குச் சான்றுகளைத் தான்திரட்டும்.

5. காற்றென்ன விண்ணென்ன கடலலைகள் தாமென்ன
ஏற்றஞ்சேர் கொள்கைதனை யெதிரொலிக்கக் கேட்கின்றான்
ஊற்றஞ்சேர் தருக்கந்தா னக்கருத்தை யூக்குவிக்கும்
ஏற்றவழி நயனுயிர்க்கென் றக்கருத்தை யெண்ணுகிறான்

---

4. வினவு = வினு

6. திண்ணுண்மை! யுனதாழந் தெரிந்துணர்தல் அரிதரிதால்
திண்கூடாம் பேரறிவில் திருவிளையாட் டயர்கிளிநீ
உண்மைக்கே புகுந்தாய்ந்தோ மெனவெங்கும் ஒலிதருமால்
ஒண்தருக்கந் தொடச்சிணுங்குஞ் செடியாகு மொரு–
வுண்மை.

## அசுரர் இருவர் தோற்றம்

7. கள்ளசுரர் புரோகிதராம் ஆகுலியுங் கிலதனனும்
வெள்ளத்தின் தப்பினராய் வியன்மலையில் திரிதருவார்
உள்ளன்பால் வளர்விலங்கின் ஊனயக்கும் விடநாவர்
கள்ளவிழி யுரையாட நாவொன்றுங் கழருது.

## ஆகுலி கூற்று

வேறு

8. "இலைதழை தின்று தின்றே யெத்துணைக் காலம் வாழ்தல்?
அலையென வாவ லோங்கும் அவ்விலங் கிரத்தந் தேக்க
இலைகொலு பாயம் வேறின் றிதன்றசை யருந்து தற்கே
உலைவிலாக் காலம் பின்னர் மகிழ்க்குழ லூது வோமே."

## கிலதன் கூற்று

9. உரைசெயுங் கிலத னுங்கே, "விலங்குட னுற்று நோக்காய்
கரையிலாக் கடலா மன்பின் கனிநிழல் முறுவ லிக்குந்
தரைமிசைக் கதிரோ னென்னச் சாடுவ ளிருட்பி ழம்பை
இரியுகம் மாயை மேகத் துண்டென விவள்தி றத்தால்."

10. "இருப்பினு மொன்றே தானு
மியற்றின னமைதி கொள்வேன்
வருபொரு ளெதுவா னுலும்
மனங்கொளு மின்ப துன்பம்"
இருவரு மினைய வெண்ணிப்
பூம்பொழி லிசைந்த டைந்தார்
அரும்பொருண் மனத்தி ருத்தி
யிருந்தனன் மனுவு மாங்கே.

---

8. மகிழ் = மகிழ்ச்சிக்குக் காரணமாகிய இன்பம்.

11. தொழிலெனும் வேள்வி யாலே
யுயிர்க்கணு வீட்டுஞ் சொர்க்கம்
பொழிலெனு முள்ளந் தோன்றி
மலருமால் ஆவற் பூவே
"விழுமிய வேள்வி செய்யப்
புரோகித வேத னுரே
ஒழுங்கொடு வழியைக் காட்டி
யுன்னிய வென்றி யீட்ட."

12. "அருமையென் சிரத்தை மிக்கப்
புண்ணியத் தடைந்தா ளேனும்
விருப்பமும் நிறைவே றற்கு
விரவுவார் வனத்தி யாரென்"
றிருந்தனன் மனுவு மாங்கே,
இயம்பினர் அசுர நண்பர்,
"வருந்தனீ வேள்வி வேட்பார்க்
குதவுவான் விரும்பி வந்தோம்."

13. "எவன்பொருட் டாகும் வேள்வி
யவனெமை யேவ வந்தோம்
தவித்தனை புரோகி தற்கு
வந்தனம் உன்னைத் தாங்க
எவனதி யாணை யேற்றுர்
இரவியு நிலவு தானும்
அவனியி லியற்று கின்ரு
ரிராப்பக லவற்கே வேட்போம்.

14. "இருவரும் வழியைக் காட்ட நிறைவுறு மிந்த வேள்வி
வருகநீ மீண்டுந் தீயே வேதிகை மடுத்து வீங்கும்
வருவன தொழிலின் வேள்வி யூழிதோ றிந்த வண்ணங்
கருவிக ளீண்டும் வாழ்வுக் காவன காலந் தோறும்."

15. "அளவிலா வேள்வி மூலஞ் சித்திகள் விளையு மன்றே
புளகித மயக்க மீறுஞ் சித்திகள் புகுமேல் வாழ்வில்
இளகிய வெளிமை யேனே வாழ்வினி லினிமை பொங்கும்
விளையுமேல் புதுமை வாழ்வில் பாழ்மையும் வெருண்டு
நீங்கும்."

## உயிர்ப்பலி வேள்வி

16. தனித்ததோ ருக்கம் பொங்கும்
வேள்வியால் சிரத்தை யார்க்கும்'
மனிதனின் தந்தை கேட்டு
வியந்தனன் மனம்வி ழைந்தான்
முனைந்தெரிந் தோங்கத் தீதான்
முடிவுறுந் தொழிலின் வேள்வி
வினைமிகக் கொடிதி ரத்த
வெள்ளமு மென்புங் காண!

17. கொடியதோர் மகிழ்ச்சி! கொன்ற விலங்குத னழுகைக்
[கோரம்!
படிமிசை வேள்வி வேதி பயங்கர விலங்காத் தோன்றும்
வடிந்தது சோமக் கிண்ணம் மாந்தினர் வேள்வி யெச்சந்
துடியிடை காணும் நம்பி யகத்தெழுந் துயர வெள்ளம்.

18. "திருமுக நகைவி ழைந்தேன் திருவளுள் தொலைவிருந்தாள்
உருகெழு நங்கை யுள்ளம் மாறிய துண்மை தானோ?
பெருவனப் பரிவை யின்பக் களஞ்சியத் தாளைப் பெற்றும்
இருதயத் தமர்ந்தா ளென்று கருதுத லெவ்வி தத்தில்?"

19. "சினமிகச் சிரத்தை கொண்டாள் மகிழ்வுறச் செய்வ
தென்ன?
மனமிசை வாளோதானே மருவிட வருவாள் கொல்லோ?"
எனவுரைத் தயின்றுன் வேள்வி யெச்சமு மதுவு மாங்கே
தனதுயி ரான பாண்டம் நிரப்பினன் மயக்கந் தன்னுல்.

## சிரத்தை நிலை

20. அந்தியி னிருண்ட நேரம் மலைகளின் உச்சிக் கோடே
அந்தரந் தழுவப் பிள்ளைச் சந்திரன் தவழு மாங்கே
சுந்தரி துயரத்தோடு சூழ்குகைச் சயனஞ் சார்ந்தாள்
பந்தனச் சுமையாந் துன்பத் தழுந்தினள் பாவை நொந்தாள்

21. இரண்டுமென் கட்டை நாப்பண் எரிந்தது தழலார் தீயே
விரட்டிய தந்தத் தீதான் குகையுறை யிருளின் வீக்கம்
இரண்டொரு தண்கால் வீச்சின் சிறுதழ லணைவ தேனும்
பரந்தெழு தழலைக் காற்றே கொழுந்தொடு தாவ வாக்கும்.

22. பரப்பினள் மான்மென் றோலைப் பாவையும் படுத்தி ருந்தாள்
சிரமமு மினிது சோம்பி யோய்வினில் சிறக்கும் போலும்
தரணியவ் வுருவை யோட நாள்வினை தவறு தொன்றும்
திரளுமீன் மான்கள் பூண்ட தேர்நிலா தவழ்ந்த தன்றே.

23. கங்குலோ பரப்பும் நீலச் சேலையைக் கதிர்நி லாவில்
அங்கதன் குளிர்ந்த நீழல் அயர்புவி யின்பத் தாழும்
துங்கமா மலையில் பிள்ளை யியற்கையின் முறுவல் தோன்றுங்
கங்குலில் பனிநி லாவின் வெண்ணகைக் காந்தி தோன்றும்.

24. சீவன வின்பந் துய்ப்பான் தீவிர விருப்பங் கொண்டாள்
ஆவலைத் தடுக்கும் நாணம் மனமயல் நோயி லாழும்
மேவுமா லிதய வானம் விரத்தியாம் நீல மேகம்
ஏவமி லன்பு மின்ன லிடையிடை மிளிர்ந்து காணும்.

25. துணையிலாக் கண்தி றக்கு மயருமா லச்சந் தூண்டத்
துணைமனு படர்கின் றுனே தீயரின் வழியைப் பற்றி
இணையிலாத் துன்பம், காதற் கேற்றவன் தீய னுனன்
அணியகத் தோவி யங்கள் அழிந்தன கனவு போல.

26. சீவன வழகுக் கானில் கொடியதோர் செந்தீ பற்ற
ஆவன முயன்றி யாரே யதைத்தணித் துதவ வல்லார்
தீவிர துன்பக் கூண்டில் வானமுந் திகைப்புற் றேங்கும்
மேவல விமைகள் காலம் விழித்திருந் துழலுந் துன்பம்.

27. காற்றுமோர் துயரின் தாழும் அஞ்சுறு வமைதிக் காட்சி
மாற்றரு திசையு மேங்கும் மலைதரு மருவிக் கண்ணீர்
சாற்றிய மனத்து வேட்கை துயரினல் சால வீங்க
ஏற்றமங் கேது தோல்வி நுகர்வுக ளியலுந் தோறும்?

---

22. மீன் = விண் மீன்களாகிய மான்கள்.
23. நீலச் சேலை = வானம்

28. அகன்புவி துயர மீற வஞ்சினள் சுழன்று சுற்றும்
அகத்தெழு துயரத் தாலோ பரவிய தந்த நீலம்
மிகக்களைப் புற்றுப் பொங்கும் வியன்கட லலைகள் கூட்டஞ்
சகவிருள் கடிநி லாவின் சக்கர வாகந் தீயும்.

29. கனவிருள் மண்ட லத்தில் வெண்டழல் காந்து மென்கோ ?
இனவுடு, கங்குல் பாம்பின் கவின்மணி மாலை யென்கோ ?
மனந்துடித் தெழுமால் காது பிளக்குமோர் ஓசை மாந்தச்
சினத்தொடு சூதும் பொய்யும் வஞ்சமும் புவியில் சேர்ந்த.

## சிரத்தையின் கூற்று

30. "சீவன நுகர்வு மிக்குக் கொடுமைக ளெனக்குச் செய்யப்
பாவசக் கரம்போல் கண்முன் பகலெலாஞ் சுழலா நிற்கும்
பாவனர் குற்ற மென்ப விழிப்பினில் தளர்ந்த பான்மை
ஆவன கோடி துன்பந் துளியனை தவறென் றுலே."

31. "வரச்சிறு பலவீ னந்தான்
குற்றமாம் வையந் தன்னில்
தரணியோர் வெறுக்கும் போதை
வாழ்வினை யிருளில் தள்ளும்
நிரப்பினை நிலவா மோட்டில்
இறைவனே! நீல நஞ்சு
பருகினும் அமைதி கொள்வாய்,
வியர்வைகள் சொட்டும் பாராய்?"

32. "புவியதன் நஞ்சையுண்டா யுயிர்த்துளர் புவிவாழ் வாரே!
அலகிலா வமர சாந்தம் எங்கிருந் துனக்கின் றுகும்?
தவிசுகந் தமர்ந்தாய் நீல வலைமிசை நிலவாய்த் தானே
குவியலின் வியர்வை சொட்டக் கூர்தரும் வீண்மீன்
கூட்டம்."

---

29. வெண்டழல் = சந்திரன்.

31. வியர்வைகள் = விண்மீன்கள்.

33. "தாரகை வழியே வையத் துருண்டைகள் தளர்ந்து தத்தம்
ஆரவா வோடுன் பொற்ருள் தொழின்மல ரஞ்ச லிக்கும்
ஆரருள் அரிதி யார்க்கும் நாள்தொறும் ஐயங் கேட்டுன்
பேரருள் பெறுக லாது பெயர்குவ தோல்வி யுற்று."

34. "நிலைபெரு தகன்வி சும்புன் நெடுநட மாயைக் குள்ளே
நிலைபெறு முன்னி ருப்பே யிமைதொறும் புதுமை நேருஞ்
சலித்தொரு குற்றஞ் செய்தார் தாம்நிறை வுறுவ தற்கே
அலகிலா வுயிரினத்தில் உயிர்த்துயிர்த் துலகின் மாள்வார்."

35. "மாறுத லுலகின் பண்பே மன்னுமோர் நிலைபே றுண்டோ?
ஊறுபே ரழிவி னுள்ளே மங்கள முறுவ துண்டோ?
சீறுமேல் வெறுப்புற் றுள்ளம் மானவஞ் சிறுமை யாமே
தாறுமா றுக வாழ்தல் தானுயிர்க் கேற்ற பண்போ?"

36. "ஒருவனின் இன்பால் துன்ப
மற்றவற் குறுவ துண்டோ?
ஒருதடை யேனோ வின்ப
வளர்முறைக் கூறிங் கேனோ?
ஒருவனின் குற்றம் மாற்ருன்
பொறுக்குமோர் வழியு முண்டோ?
அருமையீ தாமோ நஞ்சை
யருந்துவர் அமுதாய்ச் சான்ருேர்."

## மனு சிரத்தையிடத்திற் கெழுதல்

37. எழுந்தது வெறிம யக்கம்
ஈர்த்தது புலன வாவும்
எழுந்தனன் மங்கை நோக்கிப்
போவதை யார்த டுப்பார்?
அழகுட லொன்றே கண்டான்
ஆன்மாவின் அழகைக் காணுன்
விழுமிய தவஞ்செய் வோருங்
காமத்தை வெல்ல லாற்ருர்.

## சிரத்தை நிலை

38. எழுந்தெழுந் திறங்கு மார்பு
மூச்செழுந் திறங்கு மாற்ருல்
செழுமுக நிலவி னேங்கும்
உயிர்க்கடலெ ழுச்சித் தோற்றம்?
அழுந்தினள் துக்கத் தேனு
மழகது விழித்தி ருக்கும்
அழகெனும் நிலவில் மங்கை
யிரவென வொளிதந் தாளே.

39. மின்னலை யுயிர்க்கு மங்கை மென்மயிர்க் கதிர்கள் கற்றை
அன்னவ ளளக நூலி லவனுயிர் சிக்கக் கண்டான்
அன்னவள் கருத்தே வேர்வை முத்தென வரும்பிற் [றென்கோ?
கன்னியின் மூகத்தே யன்புக் கற்பனை முத்தா மென்கோ?

40. அவன்ருடப் பூங்கொ டிக்கு மெய்சிலிர்ப் பார்ந்த தன்றே
அவளுட லசைந்த தின்ப நோய்க்கொடி யலைவ தென்ன
அவனது வெறிம கிழ்ச்சி நீளுரு தாங்கிற் றென்கோ?
அவனொளி யிருளி ரண்டுங் கலந்ததோர் உளத்த ளுனன்.

41. இருந்தனள் விழித்தென் ருலுந் தன்னுணர் விழக்கப் [பெற்ருள்
உருவங்கள் பலவெ டுக்கும் ஊனமில் சிரத்தை யுள்ளம்
இருதய மருங்கி ருந்து மொருமுறை தொலைவி லேகும்
ஒருவனி னுறவு கொண்டால் சினமவன் திறத்து முண்டாம்.

வேறு

42. காதலனை வெறுத்தாலும் வெறிமயக்கில் கட்டுண்டாள்
காதலெனும் மலைமோதும் புனன்மீளுங் கடிதகையே
மோதுமழைக் காற்றதனுல் நடுநடுங்கு முளரியிகர்
பேதைதன தங்கையினைப் பேரழகன் பற்றினனே.

---

42. புனல் = நீர், இங்குக் காதல் கொண்டவள்.
முளரி = தாமரை.

43. உரையாலே வேண்டினனே யொளிக்கண்ணுல் கண்டித்தா
னுரைசெய்தான் "பெருமிதத்தோய்! உன்செயலின்
றெத்தகைத்து?
நிறைதுறக்க முருவாக்க நீயதனைக் கெடுக்காதே
அரமடந்தை! உலருயிர்க்குப் புதுக்கீத மணிந்திசைப்பாய்.

44. "விண்ணகத்தே நிலவடையும் வெண்கதிராம் மயிர்க்கூச்சம்
எண்ணுங்கால் நமைவிடுத்திங் கெவருமிலை ஏனுணும்?
கண்கவரு மிவ்விசும்பு நுகர்வினுக்கே காட்சிதருந்
தண்கரையி லுயிர்நதியின் தான்பெருகும் கடற்காதல்."

45. "களைப்போடுங் குறையோடு நிறைபுவியின் தொல்லைகளும்
விளையச்ச நுகர்வுகளும் விலகுமொரு வேளையிதே
அளவில்லாப் பேரின்பம் ஆருயிரின் இன்பரசக்
தளர்வின்றிப் பெருகிடுமே சோமரசத் தண்டுளியால்."

46. "தேவர்விழை தீங்கள்ளைச் செவ்விதழில் சுவைத்திடுக
ஆவலொடு வெறியூஞ்சல் காதலியே யாடிடுவோம்"
பாவனஞ்சேர் குணத்தாளைப் பற்றியதோர் வெறிக்காதல்
மேவலுறுஞ் சுவைக்கருத்து மிளிர்ந்ததவள் தசைதோறும்.

47. அடக்கத்தோ டுரைதருவாள்,
"அன்புடையோய்! என்னுரைத்தாய்?
தடநதியா மெக்கருத்துத்
தாரையொடு மிதக்கின்ருய்?
கடலூழி மீண்டெழுந்தால்
காப்பற்று நாமழிவோம்
உடன்கொண்டன் றெத்துணையை
யுஞற்றுங்கொல் வேள்விகளை?"

48. "மீண்டுமொரு கடவுளுக்கோர் விலங்கதனைப் பலியிடுவாய்
ஈண்டிவரும் இன்புழைப்பால் ஏமாற்றங் கொள்ளற்க
ஈண்டுறையும் புவிவிலங்கர் எஞ்சியுயிர் வாழ்வதற்கே
வேண்டுரிமை யிலைகொல்லோ வீழ்வதற்கோ வலைவ
[வாழ்தல்?"

49. " புகழ்பெறுமுன் மானவமு
மிதுதானோ புகன்மனுவே?
இகழுற்ற தன்னலந்தான்
மனிதன்றன் எழில்நோக்கோ?"
" இகழ்வில்லை மேன்மைத்தே
தன்னலமும்," எனவுரைத்தான்
" பகலிரண்டு வாழ்விற்குத்
தன்னலமே பேரின்பம்."

50. "புலனுவல் நாம்நுகரும் இன்பகதி பொழிந்திடுக
புலனுள்ளம் நுகரின்பப் புகழ்க்கீதம் இசைத்திடுக
அலர்முறுவல் வெண்ணிலவில் ஆழ்ந்திடுக வெறிமகிழ்ச்சி
கலந்திடுக பயன்மூச்சுக் குறிவிருப்பங் காட்டிடுக."

51. "புவியினிமை மாற்றுருவம் புலனுவல், ஆதலினே
அவியாத புலனின்பம் எழில்துறக்கம் அறிந்திலைநீ
தவிப்பேனோர் மறைதேடி இமகிரியின் தாழ்வாரங்
குவிதுயரம் அகக்குறைவால் கூருமுயிர் வெங்கதியில்."

52. "நிகழ்வாழ்வில் நுகர்வின்பம் நிகழ்போழ்தே வஞ்சவிதி
இகழ்க்குறைவு வடிவெடுத்துத் தோன்றுவதின் றெதற்காக?
இகவாழ்வின் வினையெல்லாம் எம்மோடே முடிவுறுமேல்
நுகர்ந்திடுவோம் புலனின்பம் பிறமுயற்சி நொய்தாகும்."

53. மயக்குறுத்துங் குரலிசைத்தாள், "மனுவன்பே! இன்றறிந் [தேன்
இயக்கமுறு முன்னிடத்தே யெஞ்சியவுன் பண்பாடே
மயக்கவுணர் வெஞ்சியவுன் மாற்றறிவுங் கண்டேகொல்
வியனாழிக் கடலலைகள் பருகரைக்குள் திரும்பினவே."

54. "இன்பெல்லாந் தனதாக்கித் தனியாளிங் கிவ்விதத்தில்
தன்னுயர்வை யுருப்படுத்துந் தன்னலமே பேரழிவாந்
தன்மகிழ்வைக் காண்மாற்றார் புன்முறுவல் தான்பார்த்துத்
தன்னின்பம் அனைவோரும் இன்புறவே தான்பெருக்காய்."

55. ''இறைவேள்வி புவித்தோற்றம் நிர்மாண இயல்பதனை
நிறைவேற்றப் பங்கெடுப்போம் நெடுவளர்ச்சி நற்றொழிலில்
நிறையின்பங் கொண்டுதுயர் நிறுத்துவையோ மற்றவர்க்கே
இறையேனுங் கருதாயோ உயிரினங்கள் இடுக்கணை.''

56. ''மலரரும்பு மறைந்திலையில் மணமுயிர்த்துச் செழுந்தேனோ
டலர்வுற்று நனையாதே யழிவுற்றுப் போனபினர்
உலர்ந்தனவாய் மிதிபடுதற் குதிர்ந்திடுமேல் மணமெங்கே?
உலகமிசை மகிழ்வென்னும் ஒளியதனைக் காண்போமோ?''

57. ''தன்சொந்த இன்பங்கள் நலமன்று, தானுகரும்
இன்பங்கள் மற்றவற்கு மியல்பாக வரவேண்டும்
என்னநயம் பாழிடத்தில் காண்கிறப்பாய் இனித்தனியாய்
இன்னவழி யோருயிரின் இதயமலர் மலர்தருமோ?''

58. ''தனியாளென் இனந்தானென் இன்பமெனுந் தண்காற்றின்
பனிப்பரிசம் படமனிதர் கூர்வளர்ச்சிப் பண்புயரும்''
இனியவைசீர் மொழிபகர்ந்து மவளுள்ளம் எழுங்கிளர்ந்தே
இனியிதய நெருப்பதனல் இதழ்மலர்கள் வாடினவே.''

59. மதுக்கிண்ணங் கையேந்தும் மனுவறிந்தான் உட்கிடக்கை
''மதுவருந்தின் மாதேயுன் மனத்தையம் இற்றகலும்
எதுபுகன்றுய் அதுசெய்வேன் தனிமைக்கிங் கேதுநலம்?''
இதுபுகன்றன் மனுவிறைஞ்சி, ''இதையருந்த
[மறுப்பாயோ?''

60. சிவந்தனவே மனுக்கண்கள் சிவந்தனவே அவளிதழும்
அவன்மீது வெறிகொள வவளிதயந் துடிதுடிக்குங்
கவடாரும் பொய்யுரையாற் கற்புள்ளம் மயங்கிப்போம்
நவமாதர் அருங்கற்பு மயக்கத்தால் நாசமுறும்.

61. புலனசைவின் ஓரினிய குறிக்கருத்துப் புகுதருமேல்
நலமிகுந்த முன்னேற்ற வுயிர்நோக்கம் நாசமுறும்
புலன்விருப்பின் ஒருதிட்டம் பலவடிவம் புனைந்தகத்தைப்
பலமாக வயப்படுத்தும் பயனுயிற் றவள்திறத்தும்.

## மனுவின் கூற்று

62. ''முகநிலவில் உயிரிரவின் முளிருளே யகன்றெழியுஞ்
சகத்தின்பம் இனியெளிதாம் உன்னிடத்தே சார்ந்தடைந்
[தேன்
இகத்தில்நாண் எனும்போர்வை யிருணின்றுங் காத்தாலும்
மிகுமாற்ற முண்டாக்குங் காதலெனு முறவொழிக்கும்.''

63. ''இன்றிதயத் தளவில்லாக் கடலுவகை யெழும்பொங்கி
இன்றிதற்குத் தடைநாணே, எறிந்ததனை மணம்புகுவாய்''
இன்முத்தம் முகஞ்சிவப்ப மனுதந்தான் மகிழின்ப
நன்னுகர்வு செழிப்புறவுந் தண்ணுயிரும் நன்கெரியும்.

64. பெருங்குகையின் பாழிடத்தே பேரழகி யமைத்திட்ட
இருவிறகின் இடையெரிந்த வெரிதழலும் அணைந்ததுகாண்
அருந்தூக்கம் அகல்பொழுதே கனவினமும் அகல்வதுபோல்
இருவிறகி னெரிதழலும் இருநொடியின் மறைந்ததுவே.

# எட்டாம் படலம்

# அழுக்காறு

வேறு

1. ஒருநொடித் தளர்வுதான் இழந்தா ளுரிமையை
இருதய பரவசம்? இனிய மனத்தகம்
அரும்புமக் காந்தியின் கருத்த ழிந்தன
இருளினைப் பரப்புமால் இப்போ தவண்மனம்.

2. வேடுவத் தொழிலினும் வேறு தொழிலிலை
காடுவாழ் விலங்குகள் காப்பற் றெங்கணும்
ஓடின, வாயிலி ரத்த மூறிடத்
தேடினன் இன்பினைக் கொலைக்க ளத்திலே.

3. இமிசையோன் றேமன வுறுதி யிழந்தவன்
தமியனாய் நாடினன் தனிப்பெ ருஞ்சுகம்
அமியசொல் மங்கைமீ தாட்சி நடத்தியே
அமிதம னத்துய ரகற்ற விரும்பினன்.

4. இவன்வயம் பிறர்நயத் தில்லை பொறுமையே
கவர்ந்தனன் உரிமையைக் காதன் மனையிருந்
தவள்தரும் அன்பினின் மகிழ்வ டைந்திலன்
அவள்சுவை யற்றனள் அவன்கண் பார்வையில்.

5. சந்ததம் அவனகத் திருந்து சுழன்றெழும்
அந்தமில் திண்மையோ டாவல் திரள்களே
இந்திர வில்லென வியங்கி யோர்நொடி
சொந்தநு கர்வுகள் மறைந்து தொலையுமால்.

---

3. அமிய = அமுத.

## மனுவின் கூற்று

6. "தன்னல வூற்றினைத் தடைசெய் ததுவரைத்
துன்புறு வாழ்க்கையைத் தூண்டி நடத்துதல்?
இன்புற விம்முமென் இதயக் கூவலைக்
கன்மனத் தழுத்தலோ காப்புப் பெறுவதோ?"

7. "ஆங்கெளி மைத்தவள் அன்புக் காட்சியே
தேங்கசி வேசியர்ப் பேச்சுத் திறமையுந்
தீங்கனிச் சுவையிகழ் கலவிச் செவ்வியும்
பாங்கெழில் சிரத்தையோ தரப்ப டித்திலள்."

8. "கருத்தினில் விரைவிலை காதற் கனலிலை
உருக்குமோர் முறுவலில் புதுமை யொளிர்ந்திலை
மருவிடத் தொழுகிலள் வசந்த வருகைபோல்
தருகிலள் புதுமையை யூக்கச் சால்பிலள்."

9. "கண்மொழி கழறினுங் காதற் புயலிலை
தண்ணிலா முகத்திலும் அமுதந் தவழ்ந்திலை
ஒண்ணடம் புரிந்திலை புதிய வூக்கமுங்
கொண்டிலள் கலவியின் குறும்புக் கூறுகள்."

10. "கண்டிலள் களைப்பினைக் காணும் போதெலாம்
உண்டியிற் காவன செந்நெல் ஒண்மணி
கொண்டனள் சோற்றினுக் காகக் குற்றினள்
கண்டிலண் மகிழ்ச்சியைக் கலவிப் போரிலே."

வேறு

11. "ஒருகால் நெல்லு திரட்டுவ ளூக்கமாய்
ஒருகால் நூற்றன ளோகையின் பாடினள்
உருகிச் சொர்ந்த வுணர்வினி லாழ்ந்தென
திருக்கை யோர்ந்திலள் ஏறவும் பார்க்கிலள்."

12. திரும்பி வந்தனன் வேட்டுவந் தீர்ந்ததும்
இருந்த தக்குகை வாயிலி வன்முனர்
இருந்தென் உட்செல வுள்ளமி சைந்திலை
விருப்ப மில்லையேல் மேவுவ தெங்ஙனம்?

13. விலங்கு வீசினன் வில்லு மெறிந்தனன்
வலித எர்ந்தனன் பாறைய மர்ந்தனன்
கலக லத்தன வம்பொடு தூணியும்
வலவே லூதுகு மூல்களும் வாளுமே.

## சிரத்தை கூற்று

14. "சிவந்த மேற்றிசைச் செங்கதிர் சென்றது
நிவந்த தாற்கனக் காரிருள் நீலமே
இவண்ப டர்ந்திலன் வேட்டையெ ழுந்தவன்
அவனைக் கோள்விலங் கீர்த்தன வோதொலே?"

15. நினைத்தி ருந்தனள் இவ்விதம் பொய்யிடை
வனைத்தி ருந்தனள் மால்சுழல் தக்கிளி
எனைக்க ருத்தும னத்தகங் கொண்டிலள்
சினைக்க ருங்குழல் முத்திடுஞ் சேவடி.

16. கண்கள் சோம்பலு நேயமுங் கான்றிட
வண்டா ழந்துகள் போன்முகம் வாடவும்
ஒண்மு கத்திலே தோன்றும யர்வுதான்
உண்கண் பூங்கொடி சால வொசிந்தனள்.

17. தாய்மைச் சும்மையின் வண்முலை வீங்கவும்
வாய்மை மாதுவ னைந்தவை கட்டினள்
ஆய்ந்து மென்கருங் கம்பளி யாவலின்
தோய்ந்து நெய்தனள் சுந்தர வாடைகள்.

18. அன்னள் பொற்கரக் கம்பளிச் செவ்விதான்
பொன்மண் மீயமு னைப்பொழி வன்னதே
அன்றி மண்ணவர் போற்றுமக் கங்கையின்
மன்றல் நாறுநீல் தாமரை மானுமே.

19. தோயு நுண்ணிடைச் சேலைவ னப்புறும்
ஆய நீலம் விளங்கிட நெய்தது
தாயின் பேறுற நாள்பல தாழ்ந்திலை
ஆய தன்னிலை நோய்ப்பொறை தாங்கினள்.

---

16. வண் தாழந்துகள் = தாழம் பூவிலுள்ள சுண்ணம்.

20. வடியு நன்னுதல் வேர்வை மணித்துளி
படிந்து தாய்மையின் மேன்மை பரப்பிடும்
படியில் பூவென வீழ்ந்துகொ ண்டாடின
மடியில் மாண்புடை மக்கள் விழாவினை.

21. கண்டான் மாதி னியல்பு களைப்பினைக்
கண்டான் காம விருப்பை வெறுப்பதை
''மண்டும் ஐம்பொறி தாமவித் தாள்கொலோ?
கொண்டாள் என்வயின் கோப மறிந்திலேன்.''

22. ஒன்றும் பேசிலன் ஓரதி காரமாய்
நின்று கண்டவன் உள்ள நிகழ்ச்சியை
யன்ற றிந்தனள் போன்மெது வாகவே
மன்றல் தாமரை போல மலர்ந்தனள்.

23. மங்கை நோக்கினள் இன்சொல் பகர்ந்தனள்,
''எங்க லைந்தனை நாள்முழு திவ்விதம்?
பங்கப் பட்டனை செய்து கொலைத்தொழில்
இங்குன் தேகமு மில்லு மறந்தனை.''

24. ''நின்றேன் வாயிலில் நின்வர வேற்றிடச்
சென்றுய் சாந்த மிழந்தனை சேண்தொலை
வன்றுள் கானுயிர் மாடுதொ டர்ந்தனை
உன்றன் காலடிச் சிற்றொலி கேட்பனே.''

25. ''அஞ்செம் மாலையும் வானம ரும்பியும்
மஞ்சன் பானுபோல் கானில லைந்தனை
மஞ்சு பட்சி மரக்கிளைக் கூட்டினுள்
குஞ்சுக் கன்பொடு கொஞ்சலுந் தந்திடும்.''

26. ''அவற்றின் வீட்டிலே ஓகைவி ழாவெனில்
இவணம் மிற்குகை யானது வெற்றிடம்
நவக்கு றையெதைக் கண்டனை நம்மனை?
அவத்தோ டன்னிய தானநெ ருங்கினை.''

## மனுவின் கூற்று

27. "சிரத்தா யோர்குறை யுற்கிலை செவ்விதே
விரத்தி யுங்குறை பாடு மெனக்குள
உரத்தின் முன்னிகழ் வுண்மையொன் றுள்ளதாம்
இருந்தி ருந்தெனை நோயை யளிக்குமால்."

28. "ஆணி யல்புகட் டுங்கடங் காதது
தாணி லாவகை துன்புறல் தக்கதோ?
வீணில் நோதலோ வீழ்மூட னன்னவுங்
கோணி லூர்ப்புறக் கோயிலை யன்னவும்"

29. "மோக பாசமொன் றென்னுயிர் தேகமோ
டாகத் துள்பொறி யாவுமி றுக்கிடத்
தாகத் தோடுமு யல்பொழு தேமிகு
வேகத் தோடுதுண் டித்திட வந்தனை."

30. இனிய தேமொழுக் கானசொல் ஈபவள்
கனிந்த காதலி கேட்டிடக் காதலன்
இனிய வாழ்வினுக் காழ்ந்த மகிழ்வினைத்
தினம்வி ழைபவன் மீண்டு மியம்பினன்.

31. "எனது வுள்ள மயக்கு மியல்புடை
உனது காதலின் ஓங்கன லோய்ந்ததோ?
மனிதன் நம்பக வாலிழை தூங்கினன்
எனவுன் தக்கிளி யோடசைந் தாடுவாய்!"

32. இழைத்தல் தக்கிளி காரண மென்னவோ?
எழின்மான் தோலில் விருப்பிலை யுற்கரோ
விழைவொ டாய்ந்தனை வித்திடு கின்றனை
யுழைநல் வேட்டுவ முற்றில தோர்குறை."

33. "மஞ்ச ளாகிய துன்முகம் மங்கையே
மிஞ்சி நெய்தனை நோய்மிக வெந்தனை
எஞ்சா தெற்குறை யிவ்வுழைப் பார்பொருட்
டஞ்சா தேமறை யேதிதில் உள்ளது?"

## சிரத்தையின் கூற்று

34\. "தன்னைக் காத்திட வம்பினைச் சாடலாந்
தன்னைக் கொல்லிய சாருநர் வீழ்ந்திட
மின்னு வாளி யெறிந்திட வேண்டுமால்
சொன்ன கொள்கையுந் தூயதென் றோர்ந்தனன்."

35\. "நமக்குத் தோலினை நாளு மளித்திடும்
நமக்குக் கம்பளம் பட்டென நல்கிடுந்
தமது வாழ்வினை நன்கு வளர்த்திடும்
அமுத மீந்திட நாமகிழ் பொங்கவே."

36\. "தீங்கு தாங்கிட வென்ன புரிந்தன?
பாங்கு நன்மைதந் தீண்டு வளர்தரும்
நீங்கிச் சாகரம் நீள்பதஞ் சேர்வதால்
ஈங்கு மானவ வாழ்க்கை யுயர்ந்தது."

## மனுவின் கூற்று

37\. "சீவப் போரிலே செய்மையில் பின்னுறல்
ஆவ தின்ப நுகர்வினைக் கைவிடல்
மேவ வந்துறு நன்மையை விட்டிடல்
ஏவ மென்றறி நின்கருத் தேற்கிலன்."

38\. "கருமை யிட்டவுன் கண்ணிணைக் குள்ளென
துருவம் நாடொறு மோகையின் காண்பனுல்
அருவத் துள்ளமாங் கண்ணடி மீதிலே
யுருப்ப டிந்திடும் உன்னழ கேகிதம்."

39\. "துறவுப் போதனை என்மனந் தோய்ந்திலை
சிறந்த தாமுயிர் ஓர்சிறி தாயினும்
பறப்ப தேனும் பழுப்பிலை போல்சுகம்
மறப்ப தற்கிலை நன்றது துய்த்தலே."

40\. கண்ட தில்லைகொல் காசினிச் செல்வமே
யண்டத் தூழியின் சாகரத் தாழ்ந்ததை?
விண்டு மாயமா யாவு மழிந்தது
கண்டெ திர்வினைக் காதலித் தோய்கிலேன்."

41. "நெடிய சாந்தமாம் நின்மல வீடுறக்
கடின வாவலை நீகொளக் காரணம்?
முடிவில் நண்பினை மூண்டு திரட்டுவாய்
படியி லார்பொருட் டன்பு பரிந்தனை?"

42. "உனது காதலென் நல்வர தானமே
எனது சொத்ததை யீத லருங்கடன்
எனது நன்மை பொறுத்தலுக் காகவே
நினது மெல்லுட லுள்ளது வேறிலை."

## சிரத்தையின் கூற்று

43. "எனது சுந்தர சாந்த மியற்றுமோர்
கனவு வைய மலர்ச்சியைக் காண்கவே
இனிய தேனதி யாங்குப் பொழிந்திடும்
நனியு யர்கவே இன்பலை யவ்வயின்."

44. "குடிலெ முப்பினன் கூர்ந்ததைக் காண்க" வென்
றடியை மென்கரம் பற்றினள் மங்கையே
"குடிலேன் செய்தனள்?" என்றவன் கூறுவான்
அடிபெ யர்ந்தனன் மாதுபின் சென்றனன்.

45. குகையி னண்மைபுற் கூறைவேய்ந் துள்ளது
தகவொ டந்தியில் சால விளங்குமே
வகைவ கைப்படு பூங்கொடி மென்கிளை
மிகசூழ்ந் துள்ளன மென்பசுங் கானென.

46. இலைமண் ணுல்சுவ ரோங்கவ றுத்திடை
நிலையின் சாளரம் பற்பல வுள்ளன
மலையின் வாயுவும் வானியல் மேகமும்
இலைத டையெனப் புக்கன வேகின.

47. அங்கக் கூறை பிரம்பினு ளுகிய
தொங்கிற் றூஞ்சலொன் றுள்ளமுந் தூங்கிட
மங்கை நல்லுழைப் பால்தரை மீதினில்
தங்கப் பூமண மென்பொடி சார்ந்தது.

## சிரத்தையின் கூற்று

வேறு

48. "எப்பொழு தடவியில் தொலைவி லேகினை
யப்பொழு திழைத்தனன் அமைந்து தக்கிளி
யொப்பிலாக் கருவியைச் சுழற்றித் தனிமையாம்
வெப்புறு பாழிலும் பெற்றே றுறுதல்."

வேறு

49. "சுழல்க நாட்டியக் தக்கிளி மெல்லிதாய்
மழலைச் சொற்கிளி நாணுறப் பாடுவேன்
சுழல்க தக்கிளி நீமெது வாகவே
சுழல்வொன் கானிலே காதலன் தோன்றலே."

வேறு

50. "உன்னழ கென்னவே வாழ்வி னுயிரிழை
மின்மணி போறபல விருப்பின் நிறைகவே
யென்றுமி யற்கையோ டியைக நிறைவுயிர்
என்றுமோர் பெருமையே யழகுக் கியல்கவே."

வேறு

51. "இழைக தக்கிளி சூர்க்கதிர் என்னவே
விழைவன் வாழ்க்கையின் வைகறை மின்னிட
மழையின் பேரருள் கொண்டவென் காதலன்
பிழையி லாவுயிர் தேகம் பிறங்குக."

52. "அன்பின் நாயகன் ஆவலின் கண்ணிணை
மின்னு நல்லொளி மெத்தெனக் கொள்கவே
என்றுல் ஊறுக பேரருள் கண்ணிலே
மன்றல் பூங்கொடிப் பூமணம் போலவே."

53. "தேவ! நியிலாக் காலமென் சிற்றுல
காவ தற்கிலை பாழிடம், நம்முயிர்க்
காவி போன்றவன் நம்மகன் தூங்கிடப்
பூவ ரும்புகள் பூம்பொடி வைப்பனல்."

54. "உன்ம கன்றனை பூஞ்சலிட் டாட்டுவன்
என்றன் மார்பி லெடுத்தணைந் தின்புற
அன்பின் கொஞ்சி யளிப்பனுல் முத்தமே
தன்னி யல்பிலே சார லியங்குவான்."

55. "வருவான் மெல்லெனத் தென்றலை மானவே
கரும யிர்முடி நீலொளி கான்றிட
வருமி தழ்களில் பூங்கொடிச் செந்தளிர்
பொருவும் புன்னகைப் பொன்னெழின் நன்மகன்

56. "தனது நாவினே தீஞ்சொலைச் சாற்றியே
வனப்பின் பூம்பொடி தேனின னைந்தென
எனைப்பி ரிந்ததால் எய்திநி லைக்குமென்
மனத்துப் பீழை குளிர்ந்திட மாறறுவான்."

57. "அண்ணல் கானி லகல்கிற போழ்திலே
கண்ணீர் தாமரைத் தேனெனக் காலவென்
கண்ணன் நம்மகன் மாசிலாக் கண்ணிலென்
வண்ண மேனியை மங்கைநான் காண்பனுல்."

## மனுவின் கூற்று

வேறு

58. "இன்பமாம் மணவலை வீசு கொடியென
உன்னெழி லின்புகண் மணத்தின் றேகுக
மன்னும ணத்தினை வனத்தில் தேடியே
மன்றலார் கத்துரி மான்போல் தாவுவன்."

வேறு

59. "இங்நெ ருப்புப் பொறுத்தற் கியல்கிலென்
சொந்த வாவலின் வாழ விழைந்தனன்
இந்த வைம்பெரும் பூத மியையுடல்
சொந்த வின்பெனு மாழ்கட லாழ்த்துவேன்."

60. "அன்பைப் பங்கிடும் இவ்விதஞ் செவ்விதே
யுன்னி ரட்டை யொழுங்கு விழைகிலென்
உன்னி டத்தி லிரத்தலை வேண்டிலென்
இன்று மாற்றினன் என்றன் கருத்தினை."

வேறு

61. "என்வயி னிரங்கினை மேக மென்னவே
அன்பெனுந் துளிகளை யருளின் பெய்திடேல்
இன்பவான் கூதிரின் பிறங்கு மிந்துபோல்
கன்றிய வுரிமையி லியங்க விரும்பினேன்."

வேறு

62. என்மீ தன்புக் கடன்சுமை யேற்றலா
மென்ற வெண்ண மொழித்திடா யிங்கொடி
வென்றி வேண்டு முயற்சிகள் வீணுறும்
உன்றன் சூழ்ச்சிகள் தோற்பது முண்மையே

63. "கவர்ச்சிப் புன்னகை விட்டிடு காரிகை
நுவன்ற ணங்கென நோக்கினை யேலினித்
தவழ்ந்துன் முன்முழங் காலிட் டமர்ந்தனன்
தவத்து யிர்வர தானம தேற்கிலன்."

64. "உனக்கு மங்களம் உனனல மோங்குக
எனக்குண் டாவல் துயர்க்கட லாழவும்
மனம்பி றர்வயம் மாதுய ராகுமே,
தினமித் திவ்விய மந்திரஞ் செப்புவேன்."

65. "இன்றே யென்மனத் தின்பமாஞ் சும்மையைச்
சென்றேன் வீசி யெறிந்தனன் என்னினி
நின்றுஞ் சூலமேல் துன்புறேன் நிற்கிது
மன்றல் பூவனம் மங்கள மாகுக."

66. சொல்லு ரைத்தழுக் காறனல் சூழ்ந்தெழச்
செல்ல லாயினன் பாழிடஞ் செய்தனன்
கொல்து யர்க்கட லாழ்ந்தனள் கூயினள்
"நில்நில்! கேளிதை! யன்பிலோய்! நின்றிடு!

---

61. இந்து = சந்திரன்.

## ஒன்பதாம் படலம்

# இடாதேவி

### மனுவின் தற்கூற்று

வேறு

1. "புயல்போல வெக்குகையி னுள்ளிருந்தே
யிந்தவுயிர் போந்த தீங்குத்
துயருற்றே யைம்பூத நுண்ணணுவு
முயிரோடு தோன்றும் போலும்
பயங்கொள்ளும் பயந்தூண்டும் ஆழ்ந்தியற்றும்
பயபூசை யுயிர்நா டோறும்
வியன்புவிக்குக் கொடுந்துயரை விழைந்தியற்றி
யலக்கழிக்கும் வினையைக் காண்க."

2. "ஒருபொழுதி லாக்கப்பா டொருபொழுதில்
கேடிழைத்த லுயிர்க்கிவ் வேலை
ஒருபொழுதில் வெறுப்புறுமே லொருபொழுதில்
விருப்புறுமா லுண்டிப் போரே
பெருநாளின் விருப்பென்னும் வில்லிருந்தும்
உயிரம்பு கிளம்பப் பெற்றே
யுருவுதற்கின் றெக்குறியை வெளிவானங்
கிறிமிக வோங்கா நிற்கும்?"

3. "பலபார்த்தேன் மலையுச்சி கவிந்திருக்கும்
பனிமுடிக் கவலை யில்லை
அலகில்லாத் தன்விருப்பில் வானீளுஞ்
சடத்தன்மை விசும்பி டத்துப்
பலமாகப் பறைசாற்றும் எனக்காணும்
பார்க்கருவங் கெடுத்தொ ழித்தோம்
உலகத்தி ரிதுகாணீர் என்றுரைத்தல்
போன்றிருக்க வானத் தோங்கும்."

---

3. உயிரோடு = மனுவின் உயிரோடு

4. ''துயரில்லை சினமில்லை நிறையமைதி
யவையாழும், துங்கக் குன்றின்
வியர்வைகளில் சிலதிரட்டிச் சிசுநதிகள்
விரைந்துலகில் ஒழுகும், குன்றின்
வியன்முத்தி வேண்டுகிலேன் கதிரோன்போல்
நிலையசைவை விழைந்தேன் மிக்கு
மயக்குறவே சடப்பொருளைத் தொடுங்காற்றின்
ஒழுக்கத்தை மனம்வி ழைந்தேன்.''

5. ''என்றழலா லொளிவீசி முன்னையுயி
ரழகெளிமை யெண்ணீர் வார்த்தே
யின்றிங்கே வனங்குகைகள் பொழில்பாலை
யெங்கேனும் வளர்ச்சி யுண்டோ
வென்றலைந்தேன் வெறியுற்றேன் கனிந்தவருள்
எவரிடத்தும் உடையே னல்லேன்
கன்றிமன மிரங்குதலைப் புரிந்தறியேன்
காசினியோ டிட்டேன் போட்டி.''

6. ''என்குரலோ பாழிடத்தி லழுதரற்றுந்
தகுந்தவிடை பெற்றே னில்லை
யென்றுமெரி காற்றென்ன வழல்கின்றேன்
எவருக்கும் நலஞ்செய் தில்லேன்
இன்பமல ரென்னுலே மலர்ந்தில்லை
யென்கனவு பொய்யா யிற்றே
யென்கனவு வியனுலகை யியற்றிடினும்
இன்பவெறி வாழ்வில் காணேன்.''

7. ''சுகம்பெறலில் தோல்வியுறத் துயருயிரோ
புகைவடிவாய் மங்கித் தோன்றுங்
ககனத்தில்; மலரெல்லாம் ஆயினமுள்
நெடுந்தொலைவு கடந்து வந்தேன்
மிகக்களைத்தேன் பலவிடத்தே யோய்வெடுத்து
வருகின்றேன் மிகவு யர்ந்து
ககனமுறு பனிமலைகள் எனைக்குறித்துக்
கலகலெனச் சிரிக்கும் போலும்.''

8. "அழகெளிய வுயிர்த்துறக்க மறிவின்றி
யழித்தவனு யுள்ளம் நொந்தேன்
பழவினையாங் கூத்தாடி நாற்புறமும்
பார்க்கின்றேன் நடன மாடல்
அழன்றயர்ந்தேன் பாழுயிரின் தோல்வியினல்
வால்பற்றி யகற்றித் தும்பை
மழையிரவில் மின்மினியைப் பற்றினவன்
ஒளியுண்மை மறந்து விட்டேன்."

9. "உயிர்நிராசை யிரவிருளே! மூடுபனி
கருங்கடலி லொழியா தென்னப்
பயின்றிருப்பா யுணர்வென்னுங் கதிர்களென
தகத்தாழ்ந்து பாழா மந்தோ!
மயக்கந்தா னுனதிருளோ புவியெல்லாம்
பிரிவின்றி வருவாய் மூடி
மயலுருவ முளதேனும் விருப்பத்தின்
மறைந்தருவ மேற்கின் றுயே."

10. "மின்னெழிலாள் அலைகூந்தல் குங்குமத்தின்
வகிடென்னக் கதிர்கள் வீசும்
உன்னிடத்தும் நம்பிக்கை வைகறையின்
கதிர்வரிக ளொளிரக் கண்டேன்
மன்னுயிர்க்கு நிலைபெற்ற வோய்வானுய்
மாயைக்குக் கூந்தல் பாரம்
என்னதிகழ் தருவாய்நீ யாவலெனும்
இருண்மேக நிழல்போன் றுயே.

11. "என்னுயிர்க்கி ராவிருளே! நம்பிக்கைக்
கொழும்புகைமேல் எழுதல் செய்வாய்
உன்னகத்தே குறைவிருப்பும் நோயுணர்வுந்
தீப்பொறிபோல் மின்னி யோங்கும்

9. உயிர் நிராசை இரவிருள் = மனித வாழ்வில் தோன்றும் நம்பிக்கைத் தோல்வி இருண்ட இரவு போல் உள்ளது.

என்னிளமைத் தேங்கானில் வேட்கைநதி
யெம்முனையு முத்திட் டோடும்
அந்நதியில் மனக்குழந்தை பலகோடி
விளையாட லழியும் வீணில்.''

12. ''குயின்மொழியா ளிமையாத கண்மைநீ
குறுநகையாள் காம வல்லி
யுயிரழகை யுயிர்திகழு மோவியத்தை
யுன்கருவி லொளித்து வைத்தாய்
குயில்பஞ்சக் குரலோடு நெடுந்தொலையின்
வழிப்போக்கன் கூவு கின்றேன்
வெயில்வீசுங் கருவானத் தக்குரலோ
விரைவாக வெதிரொ லிக்கும்.''

## நாமகள்நதிநகர் இடிபாடு

13. ''இந்நகர மெத்துணைப்பாழ்! சிற்பத்தின்
இடிபாடு போன்ற காட்சி!
யின்பதுயர் வரையறுப்பை யிதில்கண்டேன்
இதன்கோண வரிக ளிங்கே
மன்னுயிரின் துயர்விதிகட் கோர்குறியை
மதிக்குணரக் காட்டா நிற்கும்
இன்பநினைப் பரைகுறையின் ஆவல்கள்
எவ்வளவோ சிதரு நிற்கும்.''

14. ''எவ்வளவு துயரடைவு புதைந்திருக்கும்
அழுகியபல் லிலேயோ லிங்கே!
யிவ்வளவு நோயுணர்விப் பாழ்நகரில்
பலத்தவடி யிதயத் திற்கு
வெவ்வுயிரா முலவையிலே பைங்கருத்தாங்
கொடியேறும் விழைவிண் ணேக்கி
யிவ்வுயிரின் இடிபாட்டில் நெருப்பாவல்
எழினணைந்து விரைவில் வீயும்.''

---

12. பஞ்சக்குரல்=பஞ்சமச் சுரம்.

15. "இந்தவிதம் மனுகளைத்துக் கிடந்தெண்ணி
யிருந்தனனே சிரத்தை யாத்த
வந்தமிகு வின்பமைதிச் சிறுமனையை
விட்டமுத லடிக்க டிக்கு
வெந்துழன்றே யலைந்தலைந்து துயருழன்று
படர்ந்தனனே யிப்பா ழூரை
விந்தைமிகு நாமகள்பேர் நதிபொழியு
மிருளிரவு வமைதி கொள்ளும்."

16. அந்தரமீ னிமையாது காண்கிற்குந்
துயருலகின் சீர்கே டெல்லாஞ்
செந்திருவின் குடிமிகுந்த நதிநகரின்
றெவ்வளவு சீர்கே டாயிற்
றிந்திரன்றன் புகழ்க்கதைகள் இடிபாட்டால்
நினைவுவர விதயம் வேகும்
இந்நகர் களைப்புற்றுத் துயர்க்கனவு
காணுங்கொல் இருளா ழத்தே?

17. சீவவினப் புதுக்குறிக்கோள் பொருட்டசுர
சுரப்போர்கள் சீறும் போழ்து
தேவர்க்கு மசுரர்க்கும் பெருமுயற்சி
வாழ்வுயர்ச்சி செழித்தோங் கிற்றே
தேவவரர் நம்பிக்கை யாணவத்தின்
கோலமொழி சிலப கன்றார்
"ஏவர்க்கும் யாஞ்சிறந்தோம் எமதினத்தைத்
தொழுதல்தான் கடமை யேற்பீர்."

18. சத்திகளைக் கையாண்டார் களியாட்டத்
தாண்டவமாம் உவகை வாரி
சத்திபிறப் பிடமென்றார், வாழ்வென்றுங்
கூர்ந்துவளர் சார்பிற் றுகும்
இத்தரையின் மாறுதலுக் குட்பட்ட
புதுவமைப்பு விழுமி தன்றே
மெத்தநலன் சுரர்திரட்ட முயன்றாரே
சீர்திருத்த மேன்மை யற்றார்.

19. தன்னுடலைப் பெருக்குவதில் பேரசுரர்
தலைப்பட்டார் தேவ சாதி
தன்குறைபாட் டகங்காரம் நிறைவென்னும்
தவிராது பிடிவா தம்மே
சொன்னவிரு திறத்தாரு மூக்கமிலர்
சூழ்தருக்கம் படைப்போ ராதற்
கென்னதடை ? போட்டிக்குப் போரிட்டார்
அதிகாரத் ததிரிட் டாரே.

20. "என்வயமோ வழிகவலை நிறையாவல்
ஒழுங்கற்ற தளர்ந்த வெண்ணம்
மன்னவரும் பிரளயத்தின் அச்சமிக
வருந்தினனென் உடற்கா வற்கே
மன்னுயிர்க்குத் துணைபுரியும் நலன்விடுத்து
மனத்தாசை கொண்டு ழன்றேன்
முன்தேவ செருக்குந்தத் துயர்க்கடலில்
மூழ்கினனேர் ஒழுக்க மற்றேன்."

## அசரீரி காமதேவன்

21. ஒருகுரலை வான்முழுது மெதிரொலிக்க
மனுதிடுக்கிட் டுற்றுக் கேட்டான்
உருவுதல்போல் சூலொன்று வருத்திற்று,
"மனுவேநீ உணர்ந்தா யில்லை
சிரத்தைதனை விடுத்தனையே நம்பகத்தின்
செழுமையளை அறிவின் தாயை
யிருவினையைச் சிதறடிக்கும் மேதையளை
வெறுங்காமப் பொருளாய் எண்ணி."

22. "இன்பளிக்கும் நேரந்தான் உண்மையெனத்
தவருக எண்ணு கின்ருய்
புன்புலன்கள் சுவையொன்றே துறக்கமெனக்
கருதினையுன் மதியும் பொய்யே

---

20. அழிகவலை = அழிக்கின்ற கவலை; மன்ன = பொருந்த, மிக்க.

புன்மதியாண் செருக்கதனின் பெண்ணுக்கோர்
கடனிலையென் றுரைத்தாய் பொய்யே
நன்னிறையி லொற்றுமையின் நல்லுரிமை
யிருபாலும் அமைதல் நன்றே.''

## மனுவின் கூற்று

23. "இவனுரோ? அக்காமன்? உயிர்க்கிருந்த
வின்பமைதி கெடுத்தொ ழித்தான்
இவனேயத் தப்புவழி காட்டியவன்
கதையாகி யிறந்து போன
கவலையுறு முன்னிகழ்ச்சி தெளிவாகக்
காட்சிதரும் அவ்வு கத்தின்
தவறுடைய சிற்றின்பம் நினைத்ததுமே
யுடல்நடுங்கும் உள்ளந் தாழும்.''

24. உரைசெய்தா "னிதுவரையில் தப்புவழி
யுயிர்செலுத்தி வருகின் றேனோ?
அருள்செய்தா யன்போடு சிரத்தைதனை
யேற்றுக்கொள் அதனைக் கேட்டு
விரைவில்நா னேற்கவவள் அமுதமய
விதயத்தை விரித்துத் தந்தாள்
கரையில்லாப் பேருவகை யெனக்கில்லை
யடைவென்கொல் காம தேவ?''

## காமன் கூற்று

25. "தனக்குரிய வெல்லாமும் உனக்களித்தாள்
எளிமையுறை யுள்ளந் தூயாள்
உனக்குரியா ளுயிர்ப்பெருமை மிகவுடையாள்
பொழிதருவா ளுண்மை யன்பைத்
தனதுணர்வில் நேர்மையினள் உணர்வமைதி
யுறுதியொளி தயங்க நிற்பாள்
உனதுகருத் தழகுடைய சடவுடலே
புறவழகில் ஊக்கங் கொண்டாய்.''

---

23. உகம் = யுகம். 24. அடைவு = காரணம்.

26. ''அழகமுதக் கடலிருக்கத் தன்குடத்தில்
அழிநஞ்சை மொண்டு கொண்டாய்
பழமுடன் தான்கொண்ட குறைபாட்டைத்
தானுணரும் பான்மை யற்றேன்
இழந்தனையே யவளன்பை யெதுவுமெனை
தெனும்பான்மை யிழிவு டைத்தாம்
இழிகருத்திப் படகோடு பவக்கடலை
யெங்ஙனம்நீ கடக்க கிற்பாய்?''

27. சுதந்திரத்தை விரும்பினைகொல் தன்பாவச்
சுமைபிறர்மீ தேற்றப் பார்ப்பாய்
இதமில்லாத் தனியாட்சி விழைகின்றாய்
இரட்டைவிதம் நிலையே றுமே
இதனிருப்பிங் குளதென்றும் நல்லொளிகீழ்
இருள்தங்கும் மலர்க்கீழ் முள்ளாம்
பதமறிந்தே யவ்விரண்டு ளொருபொருளைப்
பரிந்தெடுத்த லொன்றே பண்பு.

28. ''உயிர்வழங்குந் தழலிலுறுங் காதலொளி
விடுத்தனையே யுதறித் தள்ளி
யுயிர்வாழ்வில் புலன்விருப்பாம் நெருப்புக்கும்
மயலிருட்கு முயர்வு தந்தாய்
துயர்ப்பெருக்கந் திரளுகநீ விதிவட்டப்
பொறியென்னச் சுழல்க துன்றி
யுயர்வுடைய தெனநினைக்கும் மனிதவினம்
உறுசாபத் தோய்ந்து வீழ்க.''

29. ''உனதுபுது மக்களினம் பிளவுகளால்
ஓய்ந்திடுக, சாதி பேதந்
தினந்தோறும் வளர்ந்திடுக, முன்னறியாப்
பிதிர்க்கூட்டந் திகைப்ப தாக

26. குடம் = பானையாகிய உயிர்.

தனதுகரத் தழிவதனைத் தாந்தேடச்
சார்ந்திடுக கலகப் போர்கள்
வினையத்தோ டொற்றுமையுங் கெட்டொழிக
வீறிடுக பேதப் பாடு.''

30. ''விருப்பங்கள் கைக்கெட்டா வெண்ணுதை
துயர்பொழிக விரைந்து மூண்டின்
றிருதயத்தை மயலென்னு மிருட்போர்வை
மறைத்திடுக வினியெல் லாரும்
ஒருவனையு முணர்ந்தறிதல் முயற்கொம்பாம்
உருண்டுருண்டு வையம் வீழ்க
இருந்தாலு மவரெதிலும் நயங்காணர்
குறுநோக்கால் நிகழு மின்னல்.''

31. ''ஆசைக்கோ ரளவில்லை நம்பகமா
மலையுச்சிக் களிக்கும் அன்போ
டாசைநிறை முத்தங்கண் ணீர்மேகம்,
உயிர்நதியில் குழப்ப மாகி
வீசியெழுந் துன்பலைகள், கவர்ச்சியுறு
விழைவிளைமை யிலையுதிர்போல்
நாசமுற வுதிர்ந்திடுக, ஐயங்கள்
நாடோறுந் திரள்வ தாக.''

32. ''சந்தேக வழல்கொளுத்த மக்களினம்
பயத்தாழ்க, சால மூள்க
பந்துக்கள் இடைபகைய மாவாசைக்
கனவிருளாம் படிவங் கொண்டு
சுந்தரியாம் பசுங்கூழாள் புவிமாதும்
நல்குரவால் துயரஞ் சூழ்க
இந்திரவில் போலநரன் துயர்மேகத்
தெத்தனையோ வண்ணங் கொள்க.''

32. நல்குரவு = ஏழ்மை.

வேறு

33. "காதலின் தூய்மை வீயுந் தன்னலங் கவிந்து மூடும்
மேதகு மங்க ளத்தைத் திருமறை மறைந்து வீயும்
ஓதநீர்ப் புவியின் மாந்தர் பிரிவினு ழைப்பர் துன்பம்
பாதகத் துயரக் கீதம் பரவுக பாரோர்க் கெல்லாம்."

34. "விருப்பமாங் கடலின் கண்ணீ ராசையி னடிவான் வீழும்
விருப்பமும் வெறுப்புங் கொள்வீர் ஆயிரம் பிளவில் வீழ்வீர்
இருதயம் மூளை தீராப் பகையுறும் நல்ல வெண்ணம்
இரண்டினு மில்லை யாசை நெருப்பினில் வீழ்ந்தி றப்பீர்."

35. இருதய மொருமா டேக வொருதிசை மூளை யேகும்
அருந்துய ரமுகை யோடு கடப்பரே நிகழ்கா லத்தை
ஒருநொடிக் கனவு போல வொழிதரு மிறந்த காலம்
உருகுவர் வென்றி தோல்வி யூஞ்சலி லூச லாடி."

36. எல்லையில் மனிதன் திண்மை
குறுக்கமுற் றிழிவ தாக
நல்லதாம் அன்பு நின்றும்
வேற்றுமை நனிபி றக்கத்
தொல்லையா முயிர்க்குத் தத்தங்
குறைவிலே செருக்குச் சூழ்ந்தார்
அல்லலின் அகங்கா ரத்தில்
மோகமுற் ருழ்ந்து போவார்."

37. "இருதய மலர்வும் ஊழைப்
பொறுத்ததோ ரெல்லை நிற்கும்
ஒருமொழி திறனில் லாரும்
உற்றனர் கவிதை நூற்கப்
பெருமிதப் படைப்புத் திட்பம்
பிழைதரு கலைகட் காகித்
தருபய னில்லாக் கேலிக்
களிப்பினி லிழிந்து தாழும்."

---

34. இரண்டினும் = இதயம் மூளை எனுமிரண்டினும்

38. "நிலையுல கொழுகுஞ் சால
வுடைந்துபின் நிமிடந் தோறுங்
கலையுமே சிறகா லாகிக்
காலமுஞ் சோம்பி யோயும்
மலையென வலிமை யுண்டு
நன்மையில் மதியில் தேராய்
மலைகுலை சொக்கி வெட்டிப்
பேச்சினைத் தொடர்ந்து மாதோ."

39. "உன்னுயிர் முழுதும் போராம் இரத்தமு நெருப்பு முற்ற
வன்மழை பொழிக தூய வெண்ணமு மூழ்கி மாய்க
தன்னையே யைய முற்றுத் தவித்துநின் பகைநீ யாவாய்
தன்னியல் பொளிந்து கோண லாகுக சார்பில் வாழ்வு."

40. "பொய்ப்பெரு மிதத்தால் காற்றில்
முறியுதூண் போலச் சாய்வாய்
பொய்யிடை திகழ்கின்றுளே
மறையெனப் புவியுள் ளார்க்கே
மெய்யினைக் காப்பாள் மாசில்
நம்பக உறுதி மிக்காள்
மெய்ப்பொருள் செல்வ மீந்தாள்
கெடுத்தனை வெறிய னன்றோ?"

41. "நுகர்கிலை நிகழ்கா லத்தை
நுவலரு வெதிர்கா லத்தின்
தகர்வரு வலையில் மாட்டிக்
கொண்டனை வருந்துஞ் சால
நகர்வன தொழிற் கூட்டங்கள்
நால்கவே தலைகீ ழாகத்
தகர்ந்திடும் ஊக்க வுள்ளம்
தடுப்பரு முதுமைச் சாவால்."

42. "மாறுத லிடையீ டின்றி யுண்மையவ் வறிவின் மாண்பர்
தேறினர் தெரிந்தார் இந்த வுண்மையைத் தெளிந்தா யில்லை
மாறுதல் பண்பை நீயோ மறுத்தனை முடிவுண் டென்றாய்
கோறினை சிரத்தை நன்றி கூர்துயர்க் குறிகள் போன்றாய்."

42. கோறினை = கொன்றனை.

43. "மான்வர் கோள்க ளென்ன
ஆழ்வினை தொடர்ந்து மற்றோர்
போனவப் பழைய மார்க்கம்
போவதா லின்பங் காணார்
மானவர்க் குரைத்தாள் நன்மை
வாய்ந்ததிவ் வுலக மென்றே
ஆனவிம் மறையை மாக்கள்
அறிந்தில ரறியாய் நீயும்."

44. "ஒழுங்கிலை யிம்மை பொய்யே
யென்றனை, மறுமைக் காக
அழுங்கினை, பொய்யா சைக்குத்
துடித்துநி ராசை யாழி
யழுந்தினை தனது புந்திச்
சத்தியா லலைந்த லைந்து
வழிகெட என்றுந் தோற்றுக்
களைத்தனை வாழ்வி னேவாய்."

45. ஓய்ந்தவப் பெருமீ னென்ன
வானகக் கடலி லோடி
யோய்ந்தது சாப வோசை
யலைநுரை காலி னேங்கிப்
பாய்ந்தென விண்மீன் தோன்றி
மின்னொளி பரப்பா நிற்கும்
வாய்ந்ததங் கமைதி, தூக்க
மயக்கினி லாழும் வையம்.

46. இருள்கனத் துருவம் பெற்ற
விரவினில் மனுவுந் துன்பப்
பெருவுயிர்ப் புயிர்த்தான், "வந்தான்
என்விதி வகுத்த பெற்றி

---

43. கோள் = சூரியனைச் சுற்றிவருங் கிரகங்கள்.

44. இதயக் கனிவு விடுத்துப் புந்தி வலியை மட்டுஞ் சார்தலால்
வாழ்வில் இன்பம் காண வியலாது.

45. பெருமீன் = கதிரவன்.

யருவனக் காமன் கொல்லோ ?
வாருயிர்க் கல்லல் தந்தான்
இருந்துய ருழக்க வாழ்க்கை
வகுத்தனன் எதிர்கா லத்தை.''

47. பலன்கரு தாத வெண்ணம் எனச்சர சுவதி பாயுங்
கலகல வொலிசெய் தோடுங் கானதி கருகி லத்தே
உலகுகை விட்ட தாலே வருத்தமிக் குற்றுத் துன்பம்
பலமுற வருந்தும் போலும் பாறையாஞ் சடமு மாங்கே.''

48. ''உவகையின் ஒழுக்கே யென்கோ
வின்னிசை யோங்க லாலே ?
பவத்தொழில் தொடர்ச்சி யென்கோ
ஞாலமுட் பாய்த லாலே ?
யவணிரு கரைகள் தம்மைப்
பனிக்குளி ரலைகள் மோதுஞ்
சிவப்பொளிக் கதிர்கள் கூட்டம்
செழுமையோ டலைமேல் மின்னும்.''

49. ''அதிசயம்! தனது மார்க்கந்
தான்கொடு வழிபோ வான்போல்
நதியொரு தடையு மின்றி
நல்லதோர் செய்தி தந்தே
யதிவிரைந் தொழுகக் கீழ்ப்பால்
இளவொளி யரும்பா நிற்கும்
அதிலொளிர் பொன்ப ராகக்
கமலமொன் றலர்ந்து தோன்றும்.''

## தேவியிடை வருகை

50. கமலநன் மணத்தி னூடே கானகப் பறவை பாடும்
விமலமக் களுக்குத் தேனை மிகப்பொழி தருவாள் காலை
தமனிய ஒளியா டைக்குள் தண்பவன் குழப்பஞ் செய்வான்
கமனிய ஓவி யம்போல் காரிகை யொருத்தி வந்தாள்.

49. பொன்பராகக் கமலம் = பொன்னொளிக் கதிரவன்.
50. கமல நன்மணம் = ஈண்டுக் கதிரவன் ஒளி.
தமனியம் = பொன். பவன் = காற்று. கமனிய = அழகிய.

51. கண்களின் விருந்தோ? தீந்தேன் கமலமென் மாலைதானோ?
ஒண்முக மழகி னூற்றோ? வுலகெலா முறுவ லாலே
தண்மழை யழகைப் பெய்தா ளங்கதைத் தரிசித் தோர்க்கே
யுண்மயக் கெழவுந் தம்மை ராக்கியந் தானு மோடும்.

52. அலைந்தன தருக்க சால மோமயிர் முடிக ளந்தக்
கலைமதி சோதி நெற்றி காசினி மகுடந் தானோ ?
இலையிரு கமலக் கிண்ண மாமவள் இருகண் ணின்றும்
விலைமதிப் பரிய வொண்ணு ராக விராகஞ் சொட்டும்.

53. பண்களை மிழற்றுஞ் செவ்வாய்
வண்டுமொய் பராக மொட்டோ ?
தண்ணக முலையி ரண்டுஞ்
ஞானவிஞ் ஞானந் தாமோ ?
வண்மையி னொருகை தாங்கும்
வான்றெழிற் கலச மொன்றை
மண்ணவர் உயிரின் சாரம்
மணிக்கரந் தாங்கும் போலும்.

54. சொன்னமற் றொருகை தாங்குங்
கருத்தெனுந் தூய பாண்டம்
மின்னுதொப் பூழின் மீதே
மூவரி படரும் வேதம்
பன்னுமுக் குணம்போல், மின்னல்
ஒளித்துகில் அணிந்தாள் பாவை
அன்னமென் னடையோ தாளப்
பொருத்தமுற் றிருந்த தன்றே.''

## மனுவின் நிலை

55. ''உயிர்த்துடிப் பென்ன வோங்கும்
அலையெழா வுயிர்க்கு ளத்தே
யுயிர்ப்பிலை பனிமு டிற்றே
யவாவலை யுவகை யில்லை

52. ராகம் = பற்று. விராகம் = பற்றின்மை.

துயின்றதோர் கவலை யின்றித்
துளிமது தானே பேசா
தயின்றதவ் வுள்ள மென்னுங்
கூம்புதா மரைப்பூ வன்றே."

56. அமைதியே யெப்பு றத்தும்
அவன்வியந் துரைக்க லானன்,
"அமைந்திவண் வந்தாள் யாரே
யவணகை உயிர்வ ழங்குஞ்
சமைந்தபொற் பாவை யன்னள்,"
மறைந்தது கனவுச் சாலஞ்
சமைந்ததோ ரொளியின் மாயை
யவனிரு கண்கள் முன்னர்."

57. இனியதோர் பரிசந் துய்த்தான் அழைத்ததவ் விறந்த காலம்
மனுமனத் தலைகள் பொங்க மங்கையு முகமலர்ந்தாள்
இனிதுரைத் தா"ணீ யாவன் நானிடை" யிலங்க நாசி
நுனிமுறு வலித்தாள் கல்லுங் கரைந்திட நுடங்கி நின்றாள்.

58. "என்பெயர் மனுகேள் நங்காய் இப்புவி திரிவன் தீராத்
துன்புழந் தயர்வேன்" என்றான் "நலவர வாக தோன்றல்
இன்றுன தெதிரே யென்ற னுமகள் நதிநா டிஃதே
குன்றின விதன்செல் வங்கள் பௌதிகக் குழப்பத் தாலே."

59. "இதுவரை யிங்கி ருந்தேன் ஊழ்வினை திருந்து மென்று"
"பதுமமும் நாணும் பாதம் புகலிடம் படர்ந்தே னனே
மதுமொழி கூந்த லாளே! வாழ்க்கையின் மதிப்பு ணர்த்தாய்
எதிர்வெனு மிருட்கா லத்தைத் திறந்தெனக் கினிது
காட்டாய்."

47. இறந்தகாலம் = முன்னே தேவ வாழ்வில் மனு நுகர்ந்த எல்லை யற்ற சிற்றின்பம்.

60. இருள்விசும் பெவனே விந்த விந்திர சால மின்னல்
கிரகநட் சத்தி ரங்கள் கிழமையொ டியற்றித் தந்தான்?
உருத்தெழும் ஊழி வேலை யலையென வச்சு றுத்திப்
பெருநடம் புரிவான் என்றால் சிற்றுயிர்ப் பெற்றி யென்னே?''

61. ''சிருட்டியி னெண்ண மிஃதோ? வெல்வதிங் கழிவு தானே?
சிருட்டியின் பேரால் மூட ரழைப்பரே யழிவுக் கேடு
சிருட்டியின் தலைவ னேரே? செவிபுகா திரக்கக் கூவல்
வருத்தமாம் வலயம் இன்ப மனைகளை வளைந்தி ருக்கும்.''

62. ''நெடுந்தொலை நீளி டத்தே சனிதரு நீழ லென்னக்
கடுந்துயர் வான்ப ரந்து காணுமப் பாலோர் சோதி
யுடுத்தல மிருக்கு மென்ப வோர்கதி ரங்கி ருந்து
விடுதலைக் காக வந்து விரைந்தெனக் குதவி யாமோ?''

63. ''அக்கதிர் விதியின் சிக்க லறுத்தெனக் குதவி யாமோ?
வெக்கதி யவனி ருக்கை? பித்தனு யியங்க மாட்டேன்
துர்க்கதி யொழித்துச் சத்தி கொண்டென தறிவில் சூழ்வேன்
இக்கரத் தைய மேற்கேன் உறுதியைத் தடுப்பா ராரே?''

## இடையின் கூற்று

64. ''உனக்குறு துணைவ னீயே
புத்திசொல் உரையைக் கேளாய்
உனக்குறு புகல்வே றெங்கே?
யுற்றநற் கல்வி யெல்லாந்
தினமுனை வற்பு றுத்தும்
அருளிறை யியற்கை சேர்ந்த
வனப்புறு செல்வங் கண்டு
பிடிக்கவோர் மனிதன் வேண்டும்.''

65. ''இயற்கையின் திரைய கற்றக்
கங்கண மிறுக்கிக் கட்டு
நியமன வாட்சி யெல்லாம்
நிறுவிநின் வன்மை நாட்டுச்

செயல்புரி தலைவன், ஏற்றத்
தாழ்வுகள் கருதல் செய்யேல்
உயிர்கொடு சடமண் ணிற்கும்
வென்றிவிஞ் ஞான மொன்றால்."

66. "பரவவிஞ் ஞான நீழல்
பாருளோ ருய்வ ரன்றே,"
தெரிவையவ் விடைசொல் கேட்டுச்
சிரித்ததந் நெடிய வானம்
பரந்தவான் கீழே தோற்றக்
கேடுகள் பலவும் நேர்ந்த
மரணமும் பிறப்புஞ் சேர்ந்த
துயர்பல நிகழ்ந்த மாதோ.

67. பருவர லன்றில் போலக் காதலர் பல்லோர் நொந்தார்
கருநிற வானின் கீழே கடுந்தொழில் மனுவு மேற்றான்
அரசியல் வினைக ளேற்றார் மனிதரும், அதனைக் கண்டே
விரவுவான் கீழ்ப்பால் பூத்த வைகறை முறுவல் செய்யும்.

68. சஞ்சலக் காற்று மிக்கக் குதுகலம் உற்றுச் சாலச்
சஞ்சரித் தியங்கும் போலும் இயற்கையின் கதுப்பில் சார்ந்த
மிஞ்சுசெந் நிறத்தைக் கண்டே காதலின் விண்மீன் வீழுங்
கஞ்சமேல் வண்டு பாடுங் காசினி மறக்குந் துன்பம்.

## மனுவின் கூற்று

69. "உயிர்க்குறு துயர்நி ராசை யோடுமே யுன்னைக் கண்டு
செயிர்முகம் மூடிக் கொண்டு மறையுமே வானச் சேய்மை
உயிர்த்துணை யிடையே! யிந்த வேளைமீ திரக்க முற்று
வைகறைப் போது போல வந்தனை யின்ப மூட்ட."

70. "உறங்கிய மனக்க ருத்தாம்
பறவையும் விழித்துப் பாடும்
பிறங்கிய கதிர்போ லுள்ளம்
மகிழ்வலை பெரிது மோங்கும்

69. நிராசை = நம்பிக்கை யிழத்தல்.

பிறர்துணை விடுத்துப் புத்தி
 வாதமே பெற்றே னின்று
சிறந்தவுன் வடிவில் கண்டேன்
 புத்தியைச், செய்வ தோர்ந்தேன்.''

71. ''மனத்துறும் ஐய மெல்லாம்
 உறுதியின் மாறிற் றன்றே
மனத்துயர் விடுத்துக் கன்ம
 மார்க்கமே வாழ்வில் கொண்டேன்
எனக்குறு முலக வின்பச்
 சாதனக் கூட்ட மெல்லாம்,
உனதரு ளிருக்கும் போழ்திங்
 குறுதுய ரணுகற் பாற்றோ?''

## பத்தாம் படலம்

# சிரத்தை கண்ட கனவு

1. செங்கமலக் கேசரத்தா லகங்குளிர்ந்த செழுஞ்செக்க
ரங்கப்போ தக்கமலம் வாடிவிழ லறியாது
குங்குமத்தை யடிவானம் நெற்றியிடங் கலேத்ததிருள்
அங்கினிய குயிலிசையோ வலர்மலர்மேன் முழங்கும்வீண்.

2. சிரத்தையெனு மலர்தரைமேல் சிதைந்திருக்கத் தேனேது?
கரந்தவரி யோவியமேல் கண்கவரும் நிறமேது?
இரிந்தகலுங் காலேமதி யெனினமுதக் கதிரேது?
இரவிமதி விண்மீன்கள் இல்லாத மாலேயவள்.

3. கருங்குவளே செங்கமலம் வெண்கமலங் கள்வற்றச்
சுரும்பணுகாப் பலமலர்கள் சுருங்குண்ட குளமென்கோ?
இருணிறமு மின்கொடியு மில்லாத முகிலென்கோ?
திரண்டுறைந்த பின்பனியின் சிற்றருவி யொழுக்கென்கோ?

4. புழுவொலியுங் கேளாப்பாழ்ப் புலன்மௌன வேதனேயோ?
முழுபுவியுங் கைவிட்ட மொய்வருத்தக் கோள்வடிவோ?
பொழில்தரையில் படிந்திருக்கு நிழல்தானே பூவையவள்?
பழிபிரிவின் முடிவில்லா நதிதானே பாவையவள்?

5. கருவானத் தமிழ்கதிரோன்
கதிர்ப்பறவை கனவுலகில்
பெருங்களேப்பின் துயில்படுக்கை
இடந்துறங்கப் பெறுமெனினும்

---

1. செங்கமலம்=மாலேக்கதிரோன், கேசரம்=செங்கிரணம்,
குங்குமம்=செம்மை.

பிரிந்தவட்கெந் நாளைக்கும்
அமைந்தோய்வு பெறலுண்டோ?
இருண்மேகங் கவியநினை
வெனுமின்னன் மின்னிவரும்.

6. மாலையெனுங் கருங்குவளைக்
கருஞ்சுண்ணம் வழிந்தொழுகும்
மாலைமலைத் தண்ணருவி
வாயொழுகுந் துயர்க்கீதஞ்
சோலைவளர் புற்பூண்டு
மெய்சிலிர்ப்பாத் தோன்றமலை
பாலினிய குரலாள்சொல்
பண்ணோடு மெதிரொலிக்கும்.

7. கங்கைநதி! சுகம்பெரிதோ
துயர்பெரிதோ கணித்துரைப்பாய்
வங்கமுறு கடற்குமிழோ
வான்மீனோ எவையதிகம்?
செங்கடலிற் சேருமுன
தகம்படியும் விண்மீன்கள்,
தங்குகுமிழ் மீன்பிம்பம்
இரண்டுமொரு தத்துவமோ?

8. வானமெனுந் திரைமிசைநல் லோவியங்கள் வாய்ந்துகெடும்
வானகவில் நிறம்பலவும் வருங்காண கொடிப்போதில்
வானமுறு நீலமென வண்ணநிறங் கரைந்துதுயர்
ஆனகரும் போர்வைதனை யவனிக்கு நெய்தளிக்கும்.

9. அழல்துயர்மூச் செழவில்லை யமாவாசை நள்ளிரவில்
தழலுறுத்தி யுயிர்நெய்யைத் தானேபின் விளக்கெரியும்
அழிந்தணையேல் கதிரவன்போல் அங்குடிசைத் தழல்தீபம்
அழற்புழுவிங் கிலதேல்நன் றதுதனியே யெரியட்டும்.

7. நீர்க்குமிழ், மீன்பிம்பம் பலவாந்தன்மைக்கும் நிலையாமைக்கும்.
9. விளக்கு ஈண்டுச் சிரத்தை. தீபம் = சிரத்தை.
அழல் புழு = விட்டில் ஈண்டுத் துயரத்திற்கு.

## சிரத்தையின் கூற்று

10. "கானமொழிக் குயில்பாடத் துயர்மாதே கேட்டிடுநீ
மோனமுடன், பொழிவதிலை முன்போல மலர்ப்பொடிகள்,
மானமுடன் இலையுதிர்வின் பாழ்கிளையை, மனுவருமென்
ருனவரை யெதிர்நோக்கும் மாலைதனைப் பொறுத்திடுக."

11. "துன்பத்தின் மூச்செடுக்குந் தண்டலையென் சொந்தநினை
வன்னவிளங் காற்றியலும் அன்பனுக்கென் நினைவுண்டோ?
என்மீதோர் தவறின்றிச் சினங்கொள்ளும் இவ்வுலகம்
என்கண்ணீர் தொடர்ந்தொழுகும் எவனடியைக்
கழுவிடவோ?"

12. "சென்றனநாள் துயர்நிறைந்தும் நல்லுயிர்க்கு நலமுடைத்
தால்
என்செய்யுந் துணையற்றேன் முனர்நிகழ்ந்த தெண்ணுமல்?
மன்னவன்றன் பிரிவினையால் எனதிருப்பு மறைந்ததுகாண்
துன்பின்பாம் பிதிரறுத்தே துலங்குண்மை பெறலெங்ஙன்?"

13. இன்றுசுவை பொருந்தாத பழநிகழ்வு மனத்தகல்க
கன்றுதழ லன்பணையத் தண்ணுறவு மகன்றதுகாண்
இன்றுயிரின் விழைவோடும் நம்பகமும் ஒளிந்தனவால்
மன்பெறவுங் கொடும்வென்றி யடைந்திலனுனிழிதோல்வி."

14. "அலர்மின்னல் நகையெங்கே? வன்பாசத் தணைவெங்கே?
நலவுறுதி வெறிமனத்தே யெத்துணையோ நாட்டிற்றன்
றிலங்குயிரை யவற்களித்தேன் பெருமிதக்கோ ளீதொன்றே
அலகில்லா விதயதனம் வேண்டியவற் களித்திட்டேன்.

15. "இதயத்தின் பரிமாற்றம், இதுமிகவுங் கொடுமைத்தே
எதுவும்நீ விரும்பித்தா வெதிர்நோக்கேல் பயன்நன்றி
சதமில்லை யெதிர்நன்றி, பொழுதந்தி யிரவிதனை
உதவிப்பின் சிதறுண்ட வுடுக்கூட்டம் உவந்தேற்கும்."

---

11. இவ்வுலகம் = மனு.

16. "இன்னிசையைக் குயின்மொழிய
நறுமணத்தின் மலர்சொரியச்
சின்னாட்கள் முறுவலித்துச்
செங்கதிரோ னெனவந்தான்
புன்னகையின் மாயையையும்
பூங்கதிர்மொட் டசைவென்ன
மன்னவன்றன் நெடுந்தொலைவு
படர்ந்திட்டான் வருவானோ?"

17. "முல்லைமணப் பெருமிதத்தாள் வேனிலிரா முழுவிழிப்பாம்
வல்லடியின் முகஞ்சிவந்து களைப்புற்று மறைபோழ்துஞ்
சொல்லவொரு கதையன்புப் பகல்சுடர நனியின்பம்
வல்லையெழு முயிர்க்கனவே யுடுவடிவில் ஒளிர்போழ்தும்."

18. "நறவுபொழி மலர்ப்பொழில்வாய்க்
குழலினிசை நயந்தெழவும்
பறவைகள்தம் மனையழைப்பின்
பறந்தனவாய்த் திரும்பினவே
மறந்தானே வரநாதன்
மடிந்தநுகம் எதிர்நோக்கி
யிறங்கினவே பனித்துளிக
ளிரவின்கண் புனல்போல."

19. நினைவெனனுஞ் செழுங்கமலம்
மானசத்தே நெடிதலர்ந்து
கனத்துளித்தேன் சொட்டுமது
கடுமுத்த மன்றுதுளி
தனதொழுக்கில் தொலைநோக்குந்
தனதகத்தே நிறையன்பின்
மனத்தெழுது மெத்துணையோ
வோவியங்கள் மறைத்திருக்கும்."

20. "கண்ணீரே யொளிமின்னுப் பிரிவென்னுங் கனவிருளில்
கண்ணுக்கோர் வழிகாட்டுங் கண்ணீரே தோள்கோப்பாய்

17. நனியின்பம் வல்லையெழும் = மத்திம தீபம்

மண்ணதனில் உயிரென்னும் வழிப்போக்கன் கற்பனையாம்
விண்ணுலகைச் சிருட்டிக்க விழுமுயற்சி தொடுக்கின்றான்.''

21. ''செந்திருவின் தாமரையின் முனையிதழில் துளிதங்கும்
அந்துளிகள் கண்ணடிபோல் அழகுமிகப் பதிவுறுத்தி
யந்தரையில் விழுகின்ற நகைபாசம் அன்பெல்லாம்
அந்துயிலுக் கிருட்பிழம்பில் அகன்றனவோ எவரறிவார்?''

22. பிரிவென்னுங் கார்கால வமாவாசைப் பேரிருளில்
அரிவையவள் நினைவென்னும் மின்மினிகள் அஞ்சியொளி
புரிந்தசையும் பாழ்மலைவாய் குழலொன்றின் ஓசையெழும்
வருத்தநதி விருப்பவலை யோடமையும் மணற்றரையில்.

23. விண்தீப மூண்டெரிய வதைநோக்கி விருப்பென்னும்
எண்ணரிய விட்டில்கள் இடையின்றிப் பறந்துவிழும்
உண்கண்ணீர் ஆறென்னப் பெருக்கெடுத்தேயொழுகிடவுந்
தண்மையுற வில்லையவள் உள்ளத்துத் தழல்தானும்.

24. 'அம்மா!'வென் றிளங்குழந்தை
யழைத்தான்பாழ் குடிலொலிக்க
அம்மையெழுந் தோடினளே
யன்புருகக் குழலசையச்
செம்மண்சேர் கரமிட்டான்
அவள்கழுத்தில், சிரித்தவிதம்
அம்மருங்கி ராத்தவசி
யருந்தீபக் காட்சித்தே.

25. ''என்னூழ்போல் குறும்பாநீ யெவ்விடத்துந் திரிந்தலைந்தாய்
உன்றந்தைப் பண்பினனீ யுலப்பில்துன் பின்பளித்தாய்
உன்னியக்க நிலையின்மை! கலைமான்போல் ஓடுகிறாய்
உன்சினத்திற் கஞ்சினனுன் உனைத்தடுக்க வியலாதேன்.''

26. ''சினப்பேனுன் அணைப்பாய்நீ செப்பினைநன் மொழியம்மா
வினவியுனைத் தொல்லைதரேன் படுத்துறங்க விரைகின்றேன்
எனதுதுயிற் கூறில்லை யினியபழ மிகவுண்டேன்,''
எனமொழிய முத்திட்டான் இன்புற்றாள் துன்புற்றாள்.

23. தீபம்=நிலவு. விட்டில்=நட்சத்திரம்.

27. சின்னஞ்சிறு வான்மாவுக் கினியசில சிறுநொடிகள்
இன்னன்மிக வானவிடங் கொப்புமென வெழுந்தியங்கும்
மின்னுகதிர் நாளசைவின் மிகுகளைப்பால் வான்மறையும்
இன்கருணை யொலிகரைந்தன் றெவ்வுலகும் பரந்தொழுகும்

28. "அன்பான கதிர்ப்பிணிப்பிங் கவிழ்ந்திடினும் இறுகினதே
யன்பன்றன் றெலைவிருந்தும் இமைதோறும் அருகிருப்பான்
இன்னிலவின் மூர்ச்சைமனம் மதுரவெறி யியல்போதென்
அன்பன்மாற் றிதயமிலன் அவன்தோன்றும் ஓவியம்போல்."

29. இன்பெல்லாங் கனவாக விமைதோறும் ஏமாற்றம்
மன்னியதென் றமர்ந்திருந்தாள் மலரிதழில் இயல்காற்றின்
அன்பனது செய்திவரும் இன்றவளோ வகன்வானத்
தன்றில்சோர் குரலொலிக்கப் பருவரலின் அமிழ்ந்தனளே.

## சரஸ்வதி நகர் தேவி இடையின் நிலை

30. நெருப்பென்ன விடையெரிந்தாள் கடலுவகை நெடிதோங்க
விருங்கேட்டு நதிக்கலம்போல் மனுக்குவழி யினிதுரைப்பான்
வருமலைகள் துண்டுதலால் ஓரமைதி வாய்த்திலள்காண்
பெருமைமலை யுச்சியிடம் முன்னேற்றப் பெருவழியாள்.

31. சுந்தரத்தோர் ஒளிக்கதிர்போன்
மனங்கவருந் தொழிற்கண்ணால்
எந்தவிடத் திருள்கெடவும்
இடையின்றி வென்றிதரும்
அந்தரவிண் பெருமீன்கொல்
அம்மங்கை, மக்கள்தாஞ்
சொந்தவுழைப் புறுபயனை
மனுமீது சொரிந்தனர்காண்.

32. ஒருநகரங் கிளம்பிற்றுச்
சேர்ந்துழைப்பா ரொருங்கணைந்தார்
பருசுவரின் உயர்மனைகள்
பிறங்கினவே பனிகோடை

பெருமழைகள் வந்தாலுங்
காத்திடுமோர் பெற்றியன
திருவுழவர் உவகையுடன்
வியர்வைவிழப் பயிர்செய்தார்.

33. பொன்னிரும்பு கரையநகை புதுக்கருவி திரண்டனவே
வன்றிரலார் புதுவேட்டைப் பரிசளித்தார் மலர்வினைஞர்
நன்மலர்கள் தேர்ந்தனராய் நாண்மாலை தாந்தருவார்
சின்மலரின் மணப்பொடியு மணிபொருளுந் திரள்தருமால்.

34. கடுந்தொனியேல் சம்மட்டிக் கனவடியால் அவள்குரலில்
படுமினிய மொழிபொழிவால் பாமரர்தம் மனங்குளிருங்
கடுவுழைப்பை வருக்கத்தின் செலுத்தியதக் கடிநகரம்
நெடிதொன்றுங் கூட்டுழைப்பால் நிதிச்செல்வந் திரண்
[டனவே.

35. இடங்காலஞ் சுருக்கினரே சுறுசுறுப்போ டியன்மாந்தர்
தடங்கருவி யியற்றியதால் சுகப்பொருட்கள் மிகத்திரளும்
படர்ந்தோங்க வியனறிவும் நலனுழைப்பின் பயனிழலில்
அடர்தரவும் நரர்முயற்சி யவனியகத் தனமெழும்பும்.

36. சிருட்டிவிதை மனுகாத்தான் சீறியதோர் வாரியிலும்
ஒருமுளையாய் மலர்மலர்ந்து பலகனியோ டுயர்ந்ததுகாண்
அரியவுயி ராற்றலுநற் கற்பனையும் ஆருணர்வும்
ஒருதடையு மில்லாதே யுதவிசெய மரஞ்செழிக்கும்.

## கனவில் சிரத்தை வந்து மனுத்திறங் காணல்

37. சிரத்தையுமவ் வியப்புலகில் செழுமலைக்கால் எனச்சேர்ந்தா
ளொருகாப்பு முணராது சிங்கவழி யுட்சென்றாள்
பெருந்தூலத் துப்பரிகைப் பேரில்லம் பலகண்டாள்
திருவிளக்கின் இல்லொளிர நறும்புகைகள் செழித்துயரும்.

38. பொழில்சூழ்ந்த வீடுகண்மேல் பொற்கலசம் பொலிதருமே
யழகாற்று நடுநடுவே கொடிமனைகள் அமைந்திருக்கும்
வழிமீது காதலர்கள் வழியன்பின் நடந்தணைவார்
இழிமதுவுண் டளிக்குலங்கள் பொடிபூசி யிசைபாடும்.

39. தருவுயர்ந்த புயங்களிடைக் காற்றலைகள் தாமோதும்
அருகணையுஞ் சிறுபறவை யணியிசைகள் ஒலிதருமே
தருவனத்தின் வளியலைகள் வரைதாக்க வெழுமிசையே
மருமலர்கள் பன்னிறத்த பாத்திகளில் மலர்ந்திருக்கும்.

40. அரியணையொன் றொளிவீச வதனடுவண் மிக்கவொளி
புரிதவிசி லழகியதோல் புனைந்தழகோ டமைந்திருக்கும்
எரியகில்வாய் இன்மணத்துப் புகையோங்க, "எங்கணைந் [தேன்?"
விரிகூந்தல் சிரத்தையவண் வியப்புடனே தான்வினவும்.

41. தன்மனுவே! மதுக்கிண்ணங் கரத்தேந்தித் தவிசிருந்தான்
முன்வேள்வி யியற்றியவன் முகஞ்செக்கர் அருந்தியதோ?
முன்னின்று ளிடையழகி ஞேவியமோ மோகஞ்செய்
வன்கருத்தோ காட்சிபெற மாபிறவி யெடுக்கின்றுர்.

42. அவன்வினவுஞ் "செயலாற்ற
வரும்பணிமற் றென்றுண்டோ?"
அவள்சொன்னுள் "வென்றிதரு
மற்புதங்கள் இயற்றினைகொல்?
நவகரணங் கைவசத்தோ?"
நவில்கின்றுன் "என்சொல்ல
நவநாடு குடிபுகினும்
உளமென்னும் நாடோபாழ்."

43. "உன்வதனங் கவின்செல்வம்
என்கண்ணுக் குறுந்தாகம்
உன்னழகின் மீதுரிமை
யுண்டாத லெப்போது?
முன்னுளின் பிறைபுருவம்
உன்னுடன் முழுதுணர்த்த
வென்னுள்ளத் தெழும்புரட்சி
யெனைத்தொன்றும் நினைத்திலனே."

---

39. வரை = மூங்கில். 41. இடை = இடாதேவி.

44. "உன்கண்ணில் செருக்குற்ற
        வணிகருத்தி னொருகுறிதான்
மின்னலென மிளிர்தரவும்
        விழித்துழலு மெனதுணர்வு
பன்னுகநீ யிலையெனினிப்
        பலபொருட்கள் பயனுளவோ?
பன்னாட்கள் தனியாக
        வுறைவதிலே தவித்திட்டேன்."

45. "உனக்குரியார் குடிமக்கள்
        உனைமன்ன னெனக்கொண்டார்
உனக்கையம் புதிதாக
        வுற்றதென்கொல்?" மனுகூறும்,
" எனதரசே! குடியாக
        வுனைக்கருதேன் எனைமயக்கேல்
இனியன்போ டுனைத்தழுவி
        யெழின்முத்தந் தருகின்றேன்."

46. "விதிவானத் திருள்கவியக் கவின்விடிய லெனப்பிறப்பாய்
அதியழகா யொளிர்தருவாய் அகமகிழ்வைப் பெறுகிலனே
மதிமுகத்தாய் ஒளிமகவே! ஒளிக்கொடையை வழங்காயோ
மதுவிதழி னமுதத்தான் மனத்தாக மகற்றுயோ?"

47. "இன்பங்கள் இயைந்திருக்கும் நிலவிரவின் எழினிழலில்
இன்னிசையே திசையெல்லாம் வெறிமீற விளங்கினவே
என்னரசே!" யெனமுழங்கி யெழுந்தானே நரவிலங்காய்
மன்னனெழ வெறிமேக மானுமிருள் பரவிற்று.

48. தழுவினனே! பயவோசை! தரணிமிக நடுங்கிற்றுல்
எழுவலியா னவண்மெலியாள் பிழைத்திடுதற் கிடனுடும்
எழுந்ததுவான் சினத்துழனி பெருகிற்றுப் பயக்குழப்பம்
முழுப்பாவக் குறியானன் குடியென்று னவன்முடன்.

49. சினமுற்ற தொளிவர்னம் பெருந்தேவர் சினமுற்றார்
புனற்சடையான் நுதற்கண்ணைத் திறந்திடவும் புரிநடுங்கும்
மனுகொடுங்கோன் குடித்தலைவன் பரமேசன் பொறுப்பாளே
கனவொலிநாண் வலித்தேற்றிக் கடிதெடுத்தான் சிவவில்லை.

50. இயற்கையகம் நடனத்திற்
        கெடுத்தான்றன் திருத்தாளை
    வியன்பூதத் தலைவனவன்
        சிருட்டியெலாம் வெறிதவன்முன்
    நயன்புகலை நரர்நாட
        மனுவாங்கே யையமுறும்
    பயந்தவனி நடுநடுங்கும்
        இதுகாண்போம் பொறுத்தென்னும்.

51. பிரளயத்தை யவண்கண்ட
        பெருமக்கட் குழுவெல்லாம்
    இரக்கத்தை யெதிர்ப்பார்த்தார்
        உயிர்க்காப்புக் கெழுந்தனரே
    நரர்மறந்தா ரனைவரையு
        மரசாட்சி நலனேது?
    விரவுசின மிகுநாணத்
        தரிவையிடை வெளிப்போந்தாள்.

52. மக்களெலாஞ் சினத்தோடு மன்முன்றில் திரண்டனரே
    பக்கம்மெய்க் காவலரும் பகைத்தருகே அணைந்தாரே
    மீக்கவெழும் பலத்காரம் விதியெல்லைக் கடங்காதே
    மக்களினம் பணிவொழித்து வந்ததரோ தாக்கிடவே.

53. குழம்பினனே மனுமறைந்து குனிந்தமர்ந்தான் பொருளாய
    வழன்றனரே சினமக்கள் அகம்புகவோர் வழியில்லை
    யழலேந்தி யுறுவெகுளி பயமுறுத்திக் குமுறிற்றே
    தழற்கண்ணின் கனல்நடிக்க நரர்தாக்க உருத்தெழுந்தார்.

54. தன்னுளுக்கில் பழுதுற்ற மனுசினந்து சிலசொல்வான்
    "என்னபொருள்? அறிந்திலனே குடிமக்கள் எதற்கடைந்தார்
    முனர்புகலை விழைமக்கள் சினமூண்டார் சுரர்தூண்டக்
    கன்னியிடை தலைமையிலே சதிநிகழ்தல் காட்சிதரும்."

55. "கதவெல்லா மடைத்திடுக
 கொலைகாரர் அகம்நுழையேல்
கதமுற்ற நியற்கையெனில்
 கடிதுறக்கம் இனிக்கொள்வோம்,"
இதுபகன்று விரைந்திட்டான்
 வெளிசினந்தும் அகம்பயந்தான்
விதிவாழ்வு நலன்தீமை
 மிகவாய்ந்தான் படுத்திருந்து.

56. திறந்தாள்கண் கனவுலகின் நடுநடுங்கிச் சிரத்தையவள்
சிறந்தமனு சிதைவுற்றுன் கொடுங்காட்சி யதுகண்டாள்
உறவினர்பால் அருளன்பின் அகமுருக வுறுங்கவலை
யிறந்ததிரா சிரத்தைதுயர்க் கருத்ததனி லமிழ்போழ்தே.

## பதின்மூன்ராம் படலம்

# போர்

1. கண்டது கனவென் ருலுங்
கடந்தன வுண்மை தாமே
கொண்டன ளிடையும் நாணம்
வெகுண்டனர் குடிக ணின்ருர்
அண்டினர் புகலே வேண்டி
யரிவைதன் நிலேகண் டாரே
கண்டனர் புரட்சிச் சீற்ற
மியற்கையில், கலங்கி நின்ருர்.

2. ஆயினு மவமா னத்தை யடைந்தனர் கேடா யிற்றே
யாயவ ளுள்ளம் வேக வடைந்தனர் வெகுளி மிக்க
வேயன தோளாள் தேகம் வெளுத்ததை நோக்கி யார்த்தார்
ஓயவு மில்லே யந்த வியற்கையின் புரட்சி யூற்றம்.

3. நின்றது குடிகள் கூட்டம் அரண்மனே நெடிய முற்றம்
நின்றனர் காவ லாளர் நெடுங்கத வடைத்தி ராவும்
நின்றதோ மறைந்தொ ளிந்து நீடிருள் திரையின் னுலே?
கன்றிய நீல மேகத் திடையிடை காந்து மின்னல்.

4. கருதினன் படுக்கை மீது கிடந்தனன் கடுமை யாகச்
சுருக்கென வெகுளி யையங் தோன்றலேக் கடிக்க லான,
"பெருமகிழ் வுற்றே னிந்தக் குடிகளே நாளும் பேணி
யுருத்தெனே வெகுளி தூண்ட வவர்களுமொருப்பட்டாரே."

5. "உள்ளமீக் கிளர வாணேத் திகிரியை யுருட்டி வந்தேன்
எள்ளரு சீர மைப்பை யியற்றினன் தனிப்பட் டோர்க்கே
தள்ளரும் புந்தி கொண்டு முயன்றனன் தக்க வாட்சி
யொள்ளிய நியமத்தாலே யோரிழை யிவரைக்கோத்தேன்."

6\. ''சிரத்தையி னுரிமைக் கோநான்
புகலிட மாதல் செய்யேன்
அரிவையைத் துறந்து பன்னாள்
அருந்தொலை யடைந்து விட்டேன்
சிரத்தைபோ லிடைதன் னாட்சி
திணித்திட முயலு மென்மேல்
விரவுமென் விருப்பில் கொள்ளேன்
தடை, யிடைக் கொள்கை வேறு.''

7\. ''எனதுநி யமங்கள் பற்றல்
எனக்குமோர் விதியிங் குண்டோ?
தனதுபல் விருப்பம் பற்றத்
தனக்கொரு வுரிமை வேண்டுங்
கனப்பொரு ளேனும் பொன்போல்
கரையுமோர் பண்பு வேண்டும்
எனதொரு படைப்புக் கஞ்சேன்
சுதந்திர விருப்பில் நின்றேன்.''

8\. ''பந்தன மின்றி வையம் மாறுதல் பண்பிற் றாகும்
இந்துவுங் கதிரும் விண்மீன் இனங்களும் இன்ன மற்றுஞ்
சொந்தவ டிவங்கள் மாற்றுந் தரணியே கடலாய் மாறும்
வெந்தழல் கடலுள் தங்கும் விரிகடல் பாலை யாகும்.''

9\. ''எப்பொருட் குள்ளும் பாயும் எரிதழல் பனிம லைக்குந்
தப்புத லரிதாம் ஆருங் கரைந்தபின் நியமந் தப்பா
தப்பொரி நெருப்புப் போல வாருயிர் தோன்றி மாயும்
இப்புவி மாந்தர் யாரே நிலைபெற வியங்கி வாழ்ந்தார்?''

10\. ''கோடிவிண் மீனி னங்கள் சூனியக் குகையி லாடி
யாடின தலைகீழ் தொங்கும் எண்ணிறந் தலைகள் தோன்றுஞ்
சாடிய காற்று வீச்சில், திசையெலாங் கேட்குஞ் சாய்ந்து
வாடினர் குரலை, வல்ல வியற்கைமுன் மனிதன் துச்சம்.''

---

6\. இடை = இடாதேவி.

11. "சுதந்திர விசும்பின் கூத்து நடைபெறத் துடிக்குஞ் சிவன்
அதனதன் ஈடு பாட்டில், அவ்விசும் பியக்கம் ஓங்கு
விதந்தனில் மீண்டுந் தோன்றும், அதனையோர் விதியென் பாரே
அதன்படி யியங்கு கின்ற துயிரென வறிஞர் சாற்றும்."

12. "அழுகையும் நகையாம் எங்கும்
இமைதொறும் அவனிக் கண்ணே
ஒழுகுவ தலைதெ றித்தே
யுயிரினம் விடுத லைக்கே
முழுவுயிர் சாபம் போலுஞ்
சாபத்தே தாப முளுஞ்
செழுபுவி என்னும் பூங்கா
வழிவினை நாடிச் சேரும்."

13. "விதிப்படி யியங்கும் வையம்
என்னுமோர் வெட்டிக் கூச்சல்
பதிந்ததோ விவர்ம னத்தில்
பாமரர் துள்ளு கின்றார்
விதிகளைக் குடிக ளேற்று
வேண்டிய வின்ப முற்றார்
விதிகளை மன்ன னேற்றல்
எனுநிலை விழைவே னல்லேன்."

14. "பிணிப்புறு தவனுன் என்றுங்
கூற்றையும் பெரிதாக் கொள்ளேன்
பணிவுறேன், உறுதி கொண்டு
விருப்பினைப் பற்றிச் செல்வேன்
அணிபுவி யழிவு டைத்தாம்
இன்புறும் அமய மொன்றே
யணியுடைத் தாகும் மற்ற
பொழுதெலாங் கனவா மன்றே."

15. இவ்வகை யசைந்த துள்ளம்
ஓர்கொடி யோய்வை யேற்றான்
அவ்வயின் திரும்பிக் கண்டான்
இடையெதி ரங்கு நின்றாள்

"இவ்விதம் ஆட்சி யாளன்
விதிகளை யேற்கா னயின்
எவ்விதம் நிலைக்கு மாட்சி?"
என்றனள், விடைப கர்வான்.

16. "நீயிவண் எதற்கு வந்தாய்?
நீள்துயர் மற்று முண்டே?
நீயினி மகிழ்ச்சி கொள்வாய்
நினைந்தெனக் களித்த துன்பால்"
ஆயிடை கூறும், "ஆட்சிக்
கனைவரும் நிற்றல் வேண்டும்
ஆயினுங் குடிக ளின்பம்
அடைவது கூடா தோசொல்?"

17. "மன்னவர்க் கொழுக்கம் வேண்டுந்
தனிப்பெரு முரிமை கொண்ட
மன்னவர் நிலைபெற் றுரோ?
விதிகளை யுடைத்தார் மாய்ந்தார்
மன்னிய மனவ ளர்ச்சி
மனிதனென் றறிவாய், தங்குந்
தன்னுணர் வென்னும் போர்வைக்
கீழொரு கருத்து வையம்."

18. "உள்ளகம் நிகழும் போரில்
வேற்றுமைக் கருத்தங் குண்டாம்
உள்ளமோ மறந்த ஞானத்
தொவ்வொரு பகுதி யீட்டும்
உள்ளமோ பலவி லொன்றை
யுற்றதன் அண்மை சேரும்
கள்ளமார் வாழ்க்கைப் போரில்
தேர்ந்தனர் வாழ்வைக் காண்பார்."

19. "தேர்ந்தனர் வாழ்வைக் காண்பார்
உலகிடை நன்மை காண்பார்
சார்ந்தவர்க் கறிவை யூட்டி
நல்வழி தழைக்கச் செய்வார்

ஆர்ந்தசே தனத்தின் சீவன்
 பிறர்வயத் தான போதும்
ஆர்வமும் வெறுப்புஞ் சேர்ந்த
 வாழியின் மூழ்கி னுலும்,''

20. ''திண்மைசேர் வழிசெல் போதும்
 பல்தடை சேர்ந்த போதும்
எண்ணிய குறிக்கோள் நோக்கிக்
 களைப்பினும் இயங்கிச் சேரும்
உண்மைசேர் உயிரின் புத்தி
 யுறுபயன் இதுவே யோர்க
வுண்மையி னிருப்பி டத்தே
 யுறுநமக் குயர்ந்த நன்மை.''

21. ''தண்ணிழ லாட்சி நின்று தன்குடி யின்ப முற்றுல்
மண்ணகத் துயிரை யோம்பும் மன்னவா இன்பங் காண்பாய்
மண்ணவர் கனவுங் கால வெல்லையின் முடியு மாந்தர்
எண்ணமுங் காலந் தோறும் விசும்புசே தனத்தி றங்கும்.''

22. ''ஆடுமவ் விசும்பு ணர்வு மயக்கமா ரசைவு கொண்டே
யாடுக நீயும் பன்மைப் பண்பிலே யாகா யத்தின்
மூடியை நீக்கிக் காட்டு மேன்மையின் முழுமார்க் கத்தைத்
தேடினை கேளாய் வையக் குகையெழுஞ் சிறந்த நாதம்.''

23. ''உயிர்வழி யிசையி னேடே யியங்குக வுயர்ந்த தாளஞ்
செயிருற நடக்க வேண்டாம் இலயமே சிறப்பு டைத்தாம்
மயக்குற வேண்டாந் தன்னை மறந்தனை, யவசு ரத்தை
யியக்கிடா தேவுன் வாழ்க்கை யிப்புவிக் குயர்ந்த தாமே.''

24. ஆண்டகை சொன்னுன், ''நானும்
 மறைமொழிக் கார்வ மில்லேன்
ஈண்டுணர்ந் தேனின் சொல்லில்
 எத்துணைச் சதிகள் உண்டு
மீண்டனை விரைந்தேன் வந்தாய்?
 விழுமிதுன் துணிவு கண்டேன்
ஆண்டவற் குரிமை யில்லை?
 யாவலை நிரப்ப லாற்றேன்.''

25. "பங்கிடன் மட்டுந் தானே?
      பாவமோ வின்பம் நாடல்?
   பங்கமில் அறிவு தந்தாய்
      பாவையென் குடியு மானாய்
   தங்குமுன் உயிரின் சாரந்
      தருதலா லுன்னை யெற்கே
   மங்கையென் விருப்பம் வீணேல்
      மறைமொழி யுனதும் வீணே."

26. "விரும்பிய தெனக்கு வேண்டும்
      நீயெனக் கடங்க வேண்டும்
   இருப்பதில் தலைவ னாக
      வெப்பயன் எனக்கு முண்டுன்
   உருவினைக் கண்ட தாலே
      குழம்பிய துள்ளம் மிக்க
   விரும்பிலன் உன்னை யன்றித்
      தனியதி காரம் வேண்டேன்."

27. "இயற்கையின் குமுறல் வன்மை
      மிக்கதே யதனி னென்றன்
   வயமனத் துறுங்கு ழப்பம்
      வலிதது பன்ம டங்காம்
   பயமிலன் விளையாட் டாகப்
      பொறுத்தனன் பரவை வெள்ளம்
   நயத்தொடு மடங்கி நின்றேன்
      நங்கையுன் பொருட்ட தாக."

28. "புவியொலி லயத்து முழ்க
      வீழ்ந்தெனப் புகன்று யென்றால்
   தவிப்பவற் கதிலே தின்பந்
      திசையெலா மழுகை தானுங்
   கவிதரத் துயரக் கூச்சல்
      கான்றிட அட்ட காசப்
   பவியென முழங்கி யுன்னைப்
      பற்றினன் அடைந்தே தீர்வேன்."

---

28. பவி = இடி.

29. அடல்கடல் பொங்கிற் றேனும்
புயலெழுந் தடர்ந்த போதும்
படகென துடைந்த போதுங்
கதிர்நிலா மீனும் பட்டுச்
சடக்கென வுதிர்ந்த போதுந்
தயங்கிலன் நின்னைப் பற்ற
மடமயி லாட்டப் பொம்மை
யெனவெனைக் கருதேல் மாதோ.''

## இடையின் கூற்று

வேறு

30. ''அந்தோ! நன்மொழி கேட்டிலை வீழ்த்தினை
சொந்த நன்மையா வேசசு ழற்சியில்
நொந்த மக்களும் நும்புகல் வேண்டினர்
இந்தப் பூமிபெ ருங்குழப் புற்றது.''

31. ''மறந்தாய் நன்மை நலன்விழை மாதுநான்
சிறந்த கூறினன் செய்வதற் கொன்றிலை,''
''பிறவென் மாயையே முத்தியைக் கொள்வையோ?
துறந்தாட் டங்களைத் துள்ளுசி ருரெென.''

32. ''சாபக் கேட்டுருத் தாங்கினை சார்ந்தனை
கோபப் போர்க்களங் கூர்ந்தனை காட்டினை
தாப வேதிகை செம்புனல் தாவவும்
பாபந் தந்து விலங்கென மாற்றினை.''

33. ''நாலு சாதியும் நற்றொழிற் பாகமும்
வேலும் எந்திரக் கூட்டமுஞ் சேர்ந்தன
மேலுஞ் சத்தியி லீலை விரும்பினம்
மேலி யற்கை யமர்செய வஞ்சிடோம்.''

34. ''தடையை யென்முனர் சாரவி டேலினி
யுடைந்த வாழ்வினுக் கோரிமை யின்பளி
யடைக நாட்டர சீதனம் யாவையும்
அடைக நானுனை யென்றன மாகவே.''

---

33. தொழிற்பாகம் = தொழிற் பிரிவு.

35\. "நாச மாகுமிந் நாமகள் நாடுதான்
வீசு தீயொடு தூமமும் நீயரோ,"
பேசி னுனவன் பாரவு ணர்ச்சியின்
"நாச மாக்கிடேல் ஆற்றிய நன்மைய."

36\. "இயற்கை தாக்கிடக் கல்வியை யீந்தனன்
முயன்றேன் கேடுனைக் கேந்திர மாக்கியே
இயல்த லைவனுய்ச் செல்வத் துயர்த்தினேன்
செயல் சிறந்தனை செல்வ நுகர்ந்தனை."

37\. "செய்த குற்றமென்? செங்கரப் பாவையாய்ச்
செய்தி லேனடம் ஆமெனல் செய்திலேன்
பொய்ம்ம யக்கவி ராத்திரி போந்ததுய்
வைக றைகிழக் கன்பொடு தோன்றுமால்."

38\. "காலங் கெட்டிலை துன்பிலை நம்பெனைச்
சால நன்மையாஞ் சற்றுப் பொறுத்திடு,"
சீலம் விட்டனன் தாமசஞ் சீறிடக்
கோல வாயிலை மாஇடை சேர்ந்தனள்.

39\. அவன்த டுத்தனன் தூண்வலிக் கையினுல்
அவள வன்தயைக் காகவே நோக்கினள்,
"அவனி யின்னதே யின்பளி, யாட்டுவித்
தவமா னத்தினைத் தந்தனை பாவைபோல்."

40\. "மயக்கம் போயதுன் மந்திரஞ் செல்லுமோ ?
இயங்கா துன்பெரும் ஆணையும் ஏற்கிலன்
நயமி லாட்சியை, நான்பிர புன்னையுந்
தயங்கே ளுளவும் வான்புவி யென்வயம்."

41\. "சின்னு பின்னமாஞ் சில்பொழு திஃதெலாம்
பன்னு பாதலம் வீழும மைப்பெலாம்,"
சொன்ன பூமிசு ழன்றுந டுங்கவும்
மன்னு பேரொலி தன்செவி கேட்டனன்.

---

39\. பாவைபோல் என்னை ஆட்டுவித்து.

42. "பட்டாய் கையெனும் வன்சிறை! மார்பணை!"
கெட்ட நெஞ்சிய சொற்களோர் கூச்சலில்
கொட்டி வாயிலை மக்கள் நுழைந்தனர்
கொட்டிக் கூயினன் "கோவர சீ"யென.

43. வேக மூச்சுத் தளர்ந்தனன் நின்றனன்
சோக முற்றனன் துன்பில் நடுங்கினன்
ஏக மோகமும் ஆணையின் கோலெடுத்
தேக சொல்லிது கேட்பிரே! யென்றனன்.

44. "இன்பச் சாதனம் யாவுமளித்தனன்
மன்றொ ழிற்பிரி வாற்றிவ ருக்கமோ
டின்றி யற்கையின் தாக்குதல் அஞ்சினீர்
சென்றெ திர்த்திடா தேங்கினீர் சீர்கெட."

45. "விலங்கு வாழ்க்கையை விட்டனங் கானகக்
கலங்கு வாழ்வு கடிந்த தயிர்த்திரோ ?
துலங்கு நன்றியைச்" சொற்றனர் மக்களும்
"இலங்கு வாயினல் பாப மியம்புது."

46. "திரட்ட வான்பொருள் தேவைகட் கெஞ்சியே
முரணு லோபமே மூண்டுகற் பித்தனை
பரந்த சிந்தனை வீழ்த்தினை பார்மிசை
யிரங்க லாயினங் துன்பச் செயற்கையால்."

47. "இடையா லித்துணைத் தீங்கி யற்றினை
படையெஞ் சத்தியின் பல்தினம் வாழ்ந்தனை
இடையெங் தேவியோ நின்சிறைப் பட்டனள்
கிடையா தன்பரே கேட்டினின் தப்புதல்."

48. "இனிநா னேயுயிர்ப் போரிலி யற்கையைத்
தனித்த தன்பொறிக் கூட்டமெ திர்ப்பனல்
எனதா ணைப்பெருந் தண்டமெ றும்வலித்
தனிப்பெ ருந்திறல் தன்னையுங் காண்பிரே."

49. பதைத்து கைத்தனன் கூரிய வெம்படை
யுதைத்தெ ழுந்ததங் கங்கி யொளித்தழல்

சிதைக்குங் கூரிய வம்பு செலுத்தினன்
வதைக்கத் தாஞ்செலுந் தூமகே தென்னவே.

50. குடிக ளுக்கிரங் கொண்டனர் நஞ்சினல்
வடித்த மின்கணை எண்ணிறந் திட்டனர்
கொடிய மன்னன் தடுத்தனன் கூரிய
கொடிய வாட்படை கொண்டனன் கொன்றனன்.

51. புரிந்தான் தீவிரத் தாண்டவம் விண்டன
இரிந் தியற்கை யணுக்களி யல்தனஞ்
சொரிந்து ருள்விதி துப்புற மாய்ந்தது
பரிந்தி யாரும் பயச்சுழல் பட்டனர்.

52. இருளில் கொள்ளியைப் போன்றனன் இம்மனு
குருதி யாழ்வெறி யாடுங்கொ டுங்கரம்
உருத்தெ ழுந்தது போர்த்தொனி தாழ்நிலைக்
கிருந்த மக்களு ருத்திர ராயினர்.

53. அடிபட் டாலொரு தூணிலொ துங்கினன்
இடிபோல் வில்லை முழக்கினன் நின்றனன்
துடித்த மக்களின் நாயக ராயினர்
தடிக்கி லாதனு மாகுலி தானுமே.

54. "விடற்க பற்றுமின்," என்றறை கூவினர்
"தொடர்ந்து பற்றுமின்," என்றனன் மன்மனு
படைத்தீர் துன்பு தெரிந்தனன், கோழைகாள்!
அடுத்த கண்பெனத் தந்தனன் நன்புகல்."

55. "பொருக எம்மிது வேள்விபு ரோகிதர்
வருக தேர்கவு யிர்ப்பலி யானதை,"
ஒருக ணத்தி லுருண்டனர் பார்மிசை
"பொருதல் ஒய்கவே போது"மென் றுளிடை.

## சிரத்தையின் கூற்று

56. "தானே வாய்க்குங் கொடியதோர் சாவுதான்
ஏனோ வீணரே யாருயிர் போக்கினீர்?
ஏனோ தீக்கொலை? யிங்குயிர் வாழ்கவே
ஊனஞ் செய்திடேல் ஓங்குயிர் கொன்றிடேல்."

57. யார்தான் கேட்பவர் வேதிகை தீயெழப்
பார்ச்ச முகம் பலிக்கள மாயது
தார்ம னுக்கரஞ் செம்புனல் தோய்ந்ததால்
ஊரின் மக்களும் ஊக்கங் குறைந்திலர்.

58. அவமா னத்திடை யவ்வயின் நின்றனள்
அவமா னப்பழிக் கக்குடி யார்த்ததே
யவர்தந் தேகத் திரத்தமாம் ஆறெழும்
அவன்தொ டுக்கிற வம்பெழும் பாம்பென.

59. வானட் சத்திரம் போன்றன மன்சரந்
தான்மிக் கஞ்சுற வோசையின் தாவின
போன ஆழியைப் போல்தழல் வாயின
போன திக்கெலாம் புக்குயிர் மாந்தின.

60. உங்க ரித்தது மாபெருஞ் சத்தியே
யங்கு வானவி சும்பு மதிர்ந்திட
இங்கம் பின்விசை சொல்ல வியல்கிலேம்
எங்க ணும்பிணக் கூட்டமே யீண்டின.

61. கூரம் புப்படை குத்தின மன்னுடல்
மார ணத்தவன் மண்மிசை சாய்ந்தனன்
பாரி ரத்தமாம் ஆறு சுழித்தது
சார்ந்த ஊன்பிணந் தின்னு விலங்குகள்.

---

# பன்னிரண்டாம் படலம்

# தன்வெறுப்பு

வேறு

1. நாமகள் நதிநகர் நலிந்து மெலிந்தது
சேமமொ ழிந்தது மௌனஞ் சேர்ந்ததே
ஆமதன் பழவினை நஞ்சே யருந்துயர்த்
தாமசப் போர்வைபோல் தாழக் கவிந்தது.

2. தாரகை கோள்களும் பந்தந் தாங்கின
கோர விரைவுடன் திரிந்த, குவலயஞ்
சோர வியங்கவுந் துணுக்க வணுவெலாங்
காரண மென்னவோ கதிக லங்கிட?

3. சீவனில் உறுவிழிப் புண்மைச் செய்கையோ?
ஏவமில் லாததோ வுறக்க வெல்லைதான்
"மாவலிப் பவமெனும் இரவு மாபயம்,"
ஓவமில் இவ்விளி யொலித்த ழைத்திடும்.

4. பயங்கர வெண்ணமாம் இரவு பறப்பன
வியன்சிற கடித்தன வுயிர்கள் வெருக்கொள
அயன்விழை நாமகள் ஆறும் அமைதியின்
பெயர்ந்தது கொண்டதோ வறியேம் பெரும்பயம்.

5. காயம டைந்தவர் கதறி யழுதனர்
நோயதி கம்முறப் பதறி நொந்தனர்
சேயவள் நகர்த்திரு செப்புந் துயர்க்கதை
ஆயவண் பறவைதம் அரற்றல் பெயரிலே.

6. நகர்விளக் கிருந்தெழும் நலிந்த வொளித்தழல்
புகலரு துன்பதைப் புகுந்து நலித்ததோ
நகர்ந்தனன் வாயுவும் மெலிந்து நடந்தனன்
அகத்துயர் ஆழ்ந்தனன் அவனும் போலுமால்.

7. காவலைப் புரிந்தது மௌனம், காற்றுமன்
றுவலித் ததுதுய ராழ்ந்து நின்றது
மீவலித் தெழுமிருள் மையார் போர்வையுந்
தாவவந் தணைந்தது சடச கத்தினில்.

8. மண்டபப் படிகளும் மக்க ளின்மையின்
கொண்டன பாழ்மையை யிடையக் குயின்மொழி
ஒண்மணிப் படிமிசை யுட்கார்ந் திருந்தனள்
ஒண்ணொருப் பெரிந்தது கொழுந்து யர்ந்தெழ.

9. அரண்மனை பாழொரு வரச குறியிலை
அரசனம் மனுபடு காய மடைந்தனன்
அரண்மனைத் தரைமிசை கிடந்த வடைவிலே
அரசச மாதிபோல் அதுதென் பட்டது

10. மனத்துயர் கொண்டனள் மங்கை யிடையவண்
மனத்தக நிகழ்ச்சிகள் சுழல மத்தெனக்
கனவெறுப் புற்றனள் காத லூற்றனள்
தினமுமெத் தனைகழிந் தனவோ தெரிகிலெம்.

11. எத்துணை வியப்பிது பெண்ணி னிதயமே!
மெத்த வலையெழும் அமுத வெள்ளமே
அத்தடக் கடலடி வடவை யழல்வதால்
சுத்தபொன் னிறம்பெறும் தூய்மை பொலிதர.

12. அழன்றன தேனிற நெருப்புக் கொழுந்துகள்
அழலிடை தண்மையுஞ் சிருட்டி யானது
மழவிடை யுள்ளிடம் மாய நடனமாய்
அழகிய பொறுமையும் பழியு மாடின.

13. "அன்புசெ லுத்திடு மொருமை யழகிலை
அன்பருக் கழகிதோ வார்வக் கைக்கிளை?
அன்பருக் கொற்றுமை யெளிதி னுகுமே
வன்மைசேர் துன்பினு லாகா தெழின்மணம்."

---

12. பழி = பழி வாங்குமுணர்வு.
13. கைக்கிளை = ஒருதலைக்காமம்

14. "தடைகளை மீறியே காதல் தாண்டினுல்
கடைநிலை யுறுமது கடிதற் பாலதாம்
இடைச்சிறு நிகழ்ச்சியின் தடைமீ றிற்றெனில்
விடமென வாழ்வினைத் தாழ வீழ்த்திடும்."

15. "இனிமனுக் கியற்றிய வெல்லா வதவியுங்
கனிமனத் திரங்கலுங் கனவோ மாயையோ?
மனுவொரு நாள்துயர் வழியில் படர்ந்தனன்
தனக்கொரு குடிலிலன் வந்தான் தாங்கினேன்."

16. நிறுவின ஞட்சியின் முறைகள் நிரைவகுத்
துறுதியின் விதிகளை உணர்வோ டியற்றினன்,
உறுநவ வாட்சியின் உள்வி தானமே
ஒறுத்திடுந் தண்டமாய்த் தானே யுற்றனன்."

17. "கடலலை நின்றெழுந் தேறிக் கடிதினே
தடமலை யுச்சியைத் தாவி யேறினன்
கிடந்தனன் செத்தவ ளுகக் கெட்டன
நடந்தன கனவென, நண்பர் பகைத்தனர்."

18. "துன்பஞ் சூழ்ந்தனன் குணமலைத் தோன்றலே
நன்மை தீமைகள் நற்புவிச் செடியிலே
மன்னும் ஈரிலை யாமினி மானவர்
அன்பு செய்திடி லொன்றினை யவலமேன்?"

19. "தன்னலம் பிறர்நலந் தானென் ? தாண்டினுல்
துன்பமாம் எல்லையெவ் விடமோ தோன்றிலை
இன்றைய நலன்விடு வெதிர்வு கருதினுல்
தன்வழி தடைபடுந் தலைதெ றிப்பினுல்."

20. "தண்டனை தங்தெதோ ? காப்புத் தங்தெதோ ?
எண்ணடங் காப்பிதிர் சிக்க லெத்துணை ?
எண்ணுறுங் கற்பனை முடிவு வெழிலதாம்
உண்மையி னின்பமே மாந்தர்க் கேற்றது."

21. தடங்தொலை கூக்குரல் சாரத் தன்செவி
சடக்கென நினைவொழித் தெழுந்தாள் சவியிடை
படர்ந்தனள் பதைத்தனள் பாழி ராத்திரி
மடமயில் யாவளோ துயர வடிவினள் ?

## சிரத்தையின் கூற்று

22. "அருளொடு காட்டுக அன்பன் யாத்திரி
அருளிலன் பிறவழி செல்வா னுயினன்
தெருளிலன் கவடிலன் எனது தேவனை
அருகுற வணுகிடத் திரிந்த லைந்தனன்."

23. "தன்னுயிர் மீதொரு வெறுப்புத் தாங்கினன்
என்பொரு ளாமவன் ஏந்தல் தடுத்திலன்
என்னுயிர்த் தனமென மோசம் போயினன்
தன்பொரு ளாயினே தடுத்தல் யாரையோ?"

24. "கருத்தது குற்றமே கடுக்கு முள்ளென
இருதயம், காட்டுக வெவனு யினுமெனக்
கருள்புரிந் தவனையின் றடைவ தெவ்விதம்?
ஒருவழி காட்டுக வுள்ளங் கனிந்தனிர்."

25. எழுந்தன ளிடையு மரச வீதியில்
எழும்புகை நிழலன மாதை யெதிர்ந்தனள்
கழிபெரு நோய்மிக விரங்கு மொழியினள்
பழியெரி வார்ந்ததாம் பான்மை விழியினள்.

26. கட்டழி யுடலினள் கழலு மாடையள்
கட்டவிழ் குழலினள் கழன்ற தொடியினள்
மொட்டென வாடுதன் முடிந்த மேனியள்
பட்டன வுலர்ந்தன கொடியின் பான்மையள்.

27. பற்றுக் கோடெனப் பாலகன் வந்தனன்
பற்றித் தாய்விரல் போந்தனன் மோனமே
முற்றிப் பிள்ளையின் நல்லுரு வேற்றதோ?
கற்ற கல்வியே சீருருக் கொண்டதோ?

28. துயர முற்றவர் யாத்திரி தூயவர்
அயர்ந்தி ளைத்தவர் அன்னையும் பிள்ளையும்
பெயர்ந்து நல்வழி கெட்டடி யுண்டவன்
மயக்க முற்றவன் மன்மனு தேடினர்.

29. இருவர் கண்டிடை யுள்ள மிரங்கினள்
அருக ணைந்து துயர்க்கதை கேட்டனள்
"அருளில் லாதவன் ஆருமை விட்டவன்?
இருள மர்ந்தனிர் நுந்துயர் செப்புவீர்."

30. "சீவன் சேய்வழி யன்பர் திரும்புவர்
சீவ னுள்ளதேல் தேடிய வார்வலர்
மேவ லும்முறும் மீபடர் துன்பிரா
போவ தும்முறும் போந்திவண் தங்குமின்."

31. மங்கை நின்றனள் சேய்களைப் புற்றதால்
"இங்கின் றேய்வுறு," மெனறு நினைந்தனள்,
அங்கி வேதிகை நல்லிடம் மாதிடை
நங்கை சேயுடன் பின்வரச் சென்றனள்.

32. எரிந்த தோங்கியே வேதிகை நின்றெரி,
யிரிந்த தாரிருள் இல்லத் திருந்துமே,
விரிந்த கூந்தலள் மேல்நடங் தவ்வயின்
சொரிந்த நீரோடு தோன்றலைக் கண்டனள்.

33. "அன்பன் என்மனு! மற்றவ னல்லனோ
மின்ன லாருடல் மீதடிக் காயமே!
அன்ப! நிற்கிது நேர்ந்த தறிந்திலேன்,"
மென்ம னங்கரைந் தோடுமால் கண்வழி.

34. இடைதி டுக்கிட வந்தவ ளேந்தலை
அடுத்த மர்ந்தனள், மென்கரத் தன்பொடு
படைஞன் மின்னுடல் தைவர நன்மருந்
தடைந்த தென்ன வகன்ற துடற்றுயர்.

35. மயக்கம்! தன்னுணர் வில்லை படுத்திருந்
தயர்வு நீங்கினன் காணவும் நான்முனை
நயன நீர்த்துளி நான்கு தெரிந்தன,
பயன்கற் புள்ளவர் பாவையர் பண்பிது.

36. அங்கு மானவன் மாபெரு மண்டபம்
எங்குங் காண்பரி தின்பப் பொருட்களை
அங்கி வேதிகை கண்டனன் ஆர்வமோ
டங்க வற்கெலாம் நூதன மாயின.

37. ''அன்பே! மானவ! இங்குவந் தப்பனை
அன்பின் காணுதி தாமரைக் கண்களால்''
அன்புத் தந்தையைக் கண்டனன் ஆவலின்
மன்னைக் கண்டதும் பிள்ளை மகிழ்ந்தனன்.

38. ''தண்ணீர் ஈகவே வேட்கையி ருக்குமே
தெண்ணி யிங்கமர்ந் துள்ளனே'' சூனிய
மண்ட பத்து மணிக்குர லூற்றபோ
துண்டோ முற்பகல் சீவ வியக்கமே?

39. உறவுத் தேன்பொழி தந்தது யர்மனை
உறவி னர்க்குழு வோரிமை தங்கவும்
கறவு போலொரு கீதம ரும்பிடச்
சிறந்தெ ழுந்தது மங்கையி னல்லிசை.

## சிரத்தையின் நல்லிசை

### வேறு

40. ''அன்பமனு! குழப்பமுறு கலகமெழு மவ்வேளை
அன்பிதய மொழியாவேன் துயரசைவின் அயர்கண்கள்
இன்னுறக்கம் விழைபோழ்தும் இனியவுயிர் தளர்போழ்தும்
பொன்மலையாம் பொதியத்தின் தென்றலெனப் புகுதரு
வேன்.''

41. ''அன்பமனு! துயர்க்கடலின் மனிதமனம் அமிழ்போழ்துந்
தன்னிதய வனத்தகத்தே துயரவிருள் தவழ்போழ்தும்
பொன்விடியல் அரும்புதல்போல் பூவலர்த்துஞ் செங்கதிர்
போல்
மின்னியெழுந் தன்பளிப்பேன் மீபடர்ந்த துயரழிப்பேன்.''

42\. "அன்பமனு! சுடுபாலை அழல்செய்யச் சாதகமாம்
மென்பறவை மழைத்துளியை வேண்டிமனங் கரைபோழ்
தும்
அன்னவுயிர் நிகழ்ச்சிகளில் அருளோடு பெய்யுமழை
என்னவரு வேனுயிரைத் தணிவுறுத்தி யின்டளிப்பேன்."

43\. "அன்பமனு! காற்றணைந்தா
லதன்சூழ லுயிரெல்லாந்
துன்புழன்று மூச்சடைந்து
துவள்போதவ் வெம்புதினம்
பொன்பொடியார் மலர்மலரும்
புத்துயிரைத் தளிர்த்திடுமந்
நன்மணத்துக் கோடையிரா
வெனத்தண்மை நானளிப்பேன்."

44\. "அன்பமனு! ஏமாற்ற மேகமுறத் துயர்மனிதப்
புன்கண்ணீர்க் குளத்தகத்தே கருநிழலைப் பொழிபோழ்தின்
இன்னிசையை வண்டோத வினியமது கொண்டிருக்கும்
மென்கமல மெனவந்தே யழகுவலை விரிப்பன்யான்."

45\. குரலலையின் எழுத்தெல்லாங் குழைந்துயிரின் மருந்தாக
இரவுவிடி போழ்தினிலே யேந்தல்கண் திறந்தனவே
சிரத்தையெனும் பற்றுக்கோ டகம்பெறவும் செப்பமுறும்
நிரம்பமகிழ் வுற்றமனு நிறையன்பின் மொழிபுகன்றான்.

46\. "வந்தனைநீ சிரத்தை! யிது
வரையிங்ஙன் கிடந்தேனே!
அந்தமனே! அத்தூண்கள்!
வேதிகையெல் லாமவையே!"
நொந்தனன்கண் முகிழ்த்தியம்பும்,
"நொடிப்போழ்தி லழைத்துப்போ
மந்தவிருள் அச்சமதில்
உனைமறந்தால் கேடாகும்."

47\. "கரம்பற்றி நடந்திடுவேன் காரிகைநீ யாதாரஞ்
சிரத்தாய்! வா மனமலரச் செல்கவிடை வஞ்சகிநீ!"
சிரத்தைமெலச் சிரமசைத்தாள் கண்ணுறுதி தெரிவிக்க
உரைப்பதெனக் காட்சிதரு மென்வயத்தா யுறுபயமேன்?"

48. புனலருந்த வுடற்கஜேப்புச்
சிறிதொழிந்தான் புகன்றுன்சொல்
''மனமிசைந்திப் பாவநிழல்
நின்றழைத்து மாதேசெல்
கனம்வாழும் வானவெளி
கானலதே லெங்குநலன்
தினம்பலவும் பொறுத்திருந்தேன்
சேர்பொருளே யினிப்பொறுப்பேன்.''

49. ''சிலநாட்கள் பொறுத்திருப்பாய்
செல்கின்றே னழைத்துன்னைப்
புலன்புந்தி யிடைமறுக்காள்
போவென்றுள் அறிவுடையாள்,''
நிலமுடையாள் நாணுற்றுள்
விருப்பமுடன் நேர்ந்தாளே
கலங்காத சிரத்தைக்குக்
காளைமனு உரைகூறும்.

## மனுவின் கூற்று

50. ''ஒழுங்கற்ற வாழ்வுகந்தேன் ஆசைகிளர்ந் துயர்போழ்தில்
முழுவிதயந் தகவில்லா வாவலிலே முழுகிற்றே
ஒழுகினனே அழகியபூம் பொன்னிழலில் ஊக்கமுட
ஞெழுகிற்றே மலைக்காற்று மலருள்ளத் துறுங்கிளர்ச்சி.''

51. ''தினங்காலை மணநிழலில் பொற்கிண்ணந் தேன்கொணரும்
எனதிளமை யதையருந்தும் வெறியேறுங் கண்மூடுந்
தினங்கூதிர்ச் சிவலிப்பூ தேன்புதிதாய் வழங்கிடுமே
தினமாலைச் சுருளளகங் கவினின்பம் உண்டாக்கும்.''

52. ''என்றனுயிர் அடிவானத் திருப்புயலே விரைந்தியங்க
என்னுழ மானசத்தில் அலைகுழம்பும், புவியெங்கும்
உன்றனல வின்முறுவல் பரவுதலும் ஒளிநிலவில்
நின்றிலங்கும் பால்வழிபோல் நெடிதலர்ந்த தென்னுள்ளம்.''

---

48. கனம் = மேகம்.

51. பொற்கிண்ணம் கதிரவன். சிவலி வடநாட்டில்கூதிர்காலப்பூ

52. பால்வழி=வானத்தில் பால் தெளித்தது போன்று விண்மீன்கள் செறிந்திருக்கும் வட்டம்.

53. "அழியாத வுன்றிருவும் அகத்தாடி விளையாடும்
ஒழியாது பதிந்ததுகாண் உரைகல்லில் பொன்னுரைபோல்
அழகுருவம் மனக்கோயில் அமர்ந்ததுவே யுதயகிரி
எழும்விடியல் போலன்போ டெனக்குரைத்தாய் கவின்
பெருமை."

54. "அழகென்ப தென்னவென வந்நாளே யாமறிந்தோம்
உழல்கின்ற துன்பின்னை யுலகுயிர்க ளதன்பொருட்டே
அழகுண்மை கண்டாயோ வென்னவுயிர் வினவிடவும்
மழவிளமை தருமாற்றம் வழிப்பணத்தோ டேகுகநீ."

55. "என்னிதயஞ் சிப்பியெனில் சுவதிமழை யெனவந்தாய்
இன்னறவாய் நீயமர மனக்கமலம் இனிதலரும்
இன்பசுமை தூண்டினையே யிலையுதிர்போல் உலருயிரில்
மன்னுவெறி யெனநினைந்தேன் அஃதூக்கும் மகிழ்ச்சிதனை."

56. "துன்பவளி நோயலைகள் சுழல்கின்ற வப்புவியும்
இன்பிறப்பும் நீர்க்குமிழ்போல் இறப்பாகும், புவிமிக்க
இன்பமைதி மங்களமும் நம்பகமும் ஏற்றபினர்
வன்மழையில் நனைகதம்ப வனமென்ன விளங்கிற்றே."

57. "அழகென்னும் அலைபெருக்கும்
அணிதூய தேனொழுக்கை
எழிலமுதும் நாணமுறும்
உயிர்துலங்கும் அதைநுகர்ந்தால்
பொழுதந்தி மாதென்றன்
மறைக்கதையைப் புனைந்துரைப்பாள்
அழகுடுக்கள் திருவாயின்,
அழகுறக்கங் களைப்பாற்றும்."

---

53. அகத்தாடி = மனமென்னுங் கண்ணாடி.

55. சுவதிமழை = சுவாதி விண்மீன் தோன்றுங்கால் பெய்யும் மழை. இம்மழையால் முத்து உருவாகும் என்பது மரபு.

58. "உயிர்க்காற்றுந் தேரேறித் தொலைக்குழலின் ஓசையெனச்
செயிரிருள்சே ரென்வாழ்வில் புதுக்கீதஞ் சிறந்தொலிக்கும்
உயிர்க்கடலின் ஆழத்தே யுயர்முத்து வெளித்தோன்றும்
உயிர்நன்மைத் துனதிசையே யோதவுறும் மெய்சிலிர்ப்பு."

59. "உன்னடிகள் கற்பனைக்கும் உவகைக்கும் நடுவிடங்காண்
நன்மலர்கள் உன்னகையால் மலர்பொழுதே நன்றுளே
உன்முறுவல் வேனிலிரா வுன்மூச்சால் மலர்மலரும்
உன்னடைதேன் நனைதென்றல் உன்குரன்முன் குழல்
தோற்கும்."

60. "தன்னுறுதிக் கதிர்வீசும் மானசமாந் தடத்திருந்துஞ்
சின்னதொரு மேகமெழும் அதைக்கவிழும் செழுநிலவே
மின்னலென வதில்தொங்கி மிக்கொளியோ டசைதருவாய்
இன்பமழை யதுசொரிய வுயிர்வனத்தில் எழும்பசுமை."

61. "முகமலர்ந்தே கற்பித்தாய் முதுபுவியோர் விளையாட்டே
அகமலர்ந்தே விளையாடு காதல்செய் அனைவருக்கும்
அகஞ்சொந்தம் விருப்புற்ற வாளுக்கே யதைவழங்கென்
றுகந்துரைத்தாய் மின்னெழில்போல், ஊக்கமொடு கவனித்
தேன்."

62. "நல்வினையின் தொடர்மழைநீ! நட்புறவின் இன்னிரவு!
புல்லுயிரேன் மகிழ்வற்றேன் போந்துவகை வடிவெடுத்தாய்
எல்லையிலை யுன்னுதவி யென்காதல் உன்னருளே
எல்லையிலை யென்கடனே யிரங்குதலைக் கற்பித்தாய்."

63. "உன்வாழ்வின் நன்மறையை யுய்த்தறியேன் கீழ்மகனேன்
இன்றுந்தான் துயரின்பின் நிழல்பற்றி யேங்கினனே
என்னுயிரோ விருப்பாலும் வெறுப்பாலும் இயன்றதுகாண்
இன்றுமொளி மாளாத தொலைவுள்ள தெனவுணர்ந்தேன்."

---

58. இசை=புகழ்.

60. மானசமாந்தடம்=மனம். தன்னுறுதி=தன்னம்பிக்கை.

64. "திரிதருவேன் சாபத்தேன்
உயிர்க்கூடு தினந்தாங்கித்
தெரிதருவேன் பொருளேதோ
தெளிவில்லாத் தீக்கசடன்
இருள்திரளே யுயிர்வழிதான்
இயற்கைவலித் திழுக்குங்காண்
பெருஞ்சினத்தை யாரிடத்தும்
என்மீதும் மிகப்பெற்றேன்."

65. "அறிந்தேனுன் வரதானம் அதையேற்க வலியற்றேன்
சிறிதுள்ளம் அதின்மிகுந்த செழுந்தேனைப் பொழிந்தனையே
வெறிதாகப் புறந்தங்கும் எனதாக்கும் வென்றியிலேன்
வெறிதருக்கம் மதித்துளேதான் நிறையாதே வெற்றுள்ளம்."

66. "என்மகனென் செம்பாகம் என்வாழ்வின் நல்வடிவம்
இன்கவர்ச்சி யவனுனுன் எழிலிதய நட்பாளுன்
இன்புறுக வனைவீரும் எனையாரும் விட்டிடுக,"
மன்னகத்தே புயல்வீச மாதவளும் பார்த்திருந்தாள்.

67. தினஞ்சாயத் தளர்வுறக்கந் திரட்டியுடன் வருங்கங்குல்
மனத்தெழும வாவடக்கி மானவன்பால் இடைநின்றுள்
தனதங்கை தலையணையாய்த் தரைகிடந்தாள் தளர்சிரத்தை
மனத்தேதோ நினைத்திருந்தாள் மனுநினைந்தான் துயர்நிலையை

68. "சுகமுடைத்தோ உயிரில்லை தொல்லைதரும் பிதிர்மறைதான்
இகமாயைச் சாலத்தின் ஏ! மனுவே! விரைந்தோடு
சுகவிடியல் பொற்கதிரே துவள்நிழலே என்சிரத்தை
தகவில்லா முகந்தன்னைத் தானவட்குக் காட்டுவனே?"

69. "நன்றியிலாப் பகைவர்மேல் நம்பிக்கை கொள்வேனு?
மன்னுபழி யெல்லாமென் மனத்தடக்கி மடிவேனு?
இன்றிவர்மேல் பழிவாங்கச் சிரத்தைமுன ரியலாதே
இன்பளிக்கு மிடனேக்கிச் செல்வதுதான் தக்கசெயல்."

70. எழுந்தாரே வைகறையே கிடந்திருந்த மனுகாணர்
அழுதானே மானவனும் "அப்பா"வென் றழைத்தானே
செழும்புந்தி யிடைநினைந்தாள் பெருங்குற்றஞ் செய்தவள்யான்
அழுந்தினளே தன்கருத்தில் சிரத்தையெனும் அன்பரசி.

# பதின்மூன்றும் படலம்

## காட்சி

1. நிலவில்லாக் கங்குலிலே கவின்விடியல்
நெடியதுயில் ஆழ்ந்தி ருக்கும்
பலவிண்மீன் மினுமினுத்து நதியகத்தே
பலபிம்பஞ் செய்யா நிற்குங்
கலகலெனப் புனலொழுகும் நிழனிலைக்குங்
காற்றெருழுகும் அமைதி யாகச்
சிலபேசா மரவரிசை தம்பொருளைச்
சிந்தித்து நின்றி ருக்கும்.

2. கருநிழல்கள் படிதரவுஞ் சிரத்தையடி
நதியலைகள் வருட அன்பின்
"பெருந்தொலைவு வந்தனம்பார் மாலைவரப்
பெற்றோமே இப்பாழ்க் கானில்
உருவழகை யெதுவாய்ந்தா யில்செல்வோம்
நறுநாற்ற மூக்கா நிற்கும்,"
திருமகளை மானவளை மார்பணைத்துச்
செவ்விதழி லிட்டாள் முத்தம்.

3. "இத்தனைநா ளம்மாநீ துயருழந்தாய்
என்னினைந்தா யருகி லுள்ளேன்
எத்தனைநா ளிம்மோனம் நினைக்கின்று
யெப்பொருளைச் சிறிது சொல்க
எத்தகைய துன்றுயரங் கொடுமையுட
னெரிக்குமுனைப் புறமு முள்ளும்
மெத்தகளைப் புற்றரிய வுயிர்தளர்ந்தாய்
விடுகின்றாய் பெருமூச் சென்றும்."

## சிரத்தையின் கூற்று

4. உரைசொல்லும் "வானத்தே புனல்சுமையி
னெசிமேகம் வரும்போம் மாந்தர்
நிரைதுன்ப வின்பமெனக் குழந்தையென
நெடுங்காற்றுந் துள்ளி யாடும்
விரைந்தசையும் விண்மீன்கள் வானிரவில்
மின்புழுபோல் மினுமி னுக்குந்
தரைவிசும்பின் அருளென்னே! யிஃதென்வீ
டண்டினர்க்கு நாளுஞ் சொந்தம்."

5. "தோற்றங்கள் அனைத்தறிந்தேன் உலகத்தார்
கற்பனையி னின்புந் துன்புந்
தோற்றமுறும், கடலுணர்ச்சி யடித்தலத்தே
பருவத்தின் சுவதி நீர்தான்
ஏற்றபடி முத்தளிக்கும், அருவிபல
வெழுந்திழிந்து தழுவுங் குன்றைத்
தோற்றங்கள் பிதிர்களிலே சிக்குண்டு
நின்றெழுகுந் தூய லீலை!"

6. "கண்சிவந்து புவிவிழிக்கும், இருளுறக்கப்
போர்வைகளில் கடிதின் தூங்கும்
விண்வில்போல் பிறப்பிறப்பில் தாழ்வுயர்வில
நிறமாறி விரையும் வையம்
ஒண்விசும்பு தன்னழகில் ஆழவொளி
மீன்மலர்கள் உதிரும் மேலே
விண்குளத்தே யழகன்னக் கூட்டங்கள்
விளையாடுங் காட்சி காண்க."

7. "இடந்தோறுந் தண்ணமைதி யொடுமோனம்
இழைந்திருக்கும் மயக்காந் தாபம்
தடம்புவியில் மாறுதலும் நிலைநலனும்
பலகருத்துந் தயங்கா நிற்கும்

---

6. அன்னம் = நட்சத்திரம்

நடமாடும் இன்குழப்பம் அதனகத்தே
பேருக்கம் நடனஞ் செய்யும்
இடமாகும் நான்வதிய வின்பவொளி
யெழில்கூட்டம் அமைதி வையம்.''

## இடையின் கூற்று

8. ''அம்மா ! பின் னித்துணையேன் வெறுப்புற்றுய்
அன்பற்ற வடைவென் கொல்லோ ?''
அம்மருங்கே துயர்வரிபோன் மங்கையிடை
நின்றிருத்தல் அரிவை கண்டாள்
அம்மதிக்கி ராகுவென வொருதுயர்க்கோ
டவண்முகத்தே தவழக் கண்டாள்
செம்மைவினை விழித்துறங்கத் துறவேழ்மை
நோக்கினளே யிடையைப் பற்ற.

9. ''சிரத்தைசொலும், ''வெறுப்பேனோ? பேராவல்
நீயலவோ? செம்ம லென்மேல்
விரத்தியுற வகன்றுனைப் புகல்தந்து
காத்தனையே வேற்று னேனும்
பெருமுயற்சி நம்பகம்நீ! கவர்ச்சியும்நீ!
வெறிமேகப் பிறக்கம் நீயே!
திருமனுவின் புந்தியுறை வேட்கையும்நீ !
திட்பமிகு வொளியும் நீயே!''

10. ''பரிசென்ன வுனக்களிப்பே னிவ்வுள்ளம்
பணிமொழிக ளிவையே கொள்க
சிரிப்பேனே லழுகையுந்தான் வரும்வாழ்வில்
பெறலிழத்தல் சேர்ந்து வாய்க்கும்
வரிப்பேனே லொருபொருளைப் பிறனலனுக்
கதைவிடுப்பேன் மகிழ்வேன் துன்புந்
திரிதருவேன் நெடுமறதி யெனவுள்ளஞ்
செறிந்திருக்கு மினிய வன்பே.''

---

8. அடைவு=கரணம்

11. ''கண்டுனது மலர்முகத்தை யுணர்விழந்தான்
காளைமனு! பெண்டிர் வாழ்வில்
திண்மையெது? கவர்மாயை யழகலவோ?
திறன்மாது அமைதிச் சின்னம்
மண்ணுலகம் பாராட்டுந் தூய்மாதை
மன்னிக்கும் அருள்செய் வாயே
எண்ணினெனை துரிமையுமாம் மன்னிப்புன்
னிடங்கேட்க விழைவுங் கொண்டேன்.''

## இடையின் கூற்று

12. ''மனச்செய்தி சொல்லத்தான் வேண்டுமினித்
தவறில்லா மாந்தர் யாரே?
தனதுயிரில் துன்பின்பம் யார்க்குமுள,
தனதென்பர் இன்னை மட்டுங்
கனவுரிமை யெல்லையடங் காதொழுகும்
மழைக்கால்போல் காவல் வீழ்த்தி
எனிலவரைத் தடுப்பவரார்? பகையென்பர்
யாவரையும் மனையுங் கூட.''

13. ''மனிதவினம் பிளவுண்டு பிரிந்துளது
மடிகிறது வியற்கை யெல்லை
தனித்தியங்கும் வருக்கங்கள், தொழிற்பிரிவோ
டுயர்வருக்கங் கருவந் தாங்குஞ்
சனக்கொலையின் முனைந்தவர்கள் அறிஞரெனச்
சட்டங்கள் வகுக்க லானார்
சனத்திரளும் பேராசை வெறிக்கள்ளைக்
குடித்ததெனக் குறையும் வன்மை.''

14. ''புகழுற்றேன் தோழியென வின்றவர்கள்
பகையெனவே புகும்வி லக்க,
பகர்தொழிலின் நற்பிரிவு தொலைந்திடுமோ
புயலடிக்கப் பருமே கம்போல்?

பகல்தோறும் புதுச்சட்டம் பின்தகரும்
படுதுயராம் பனிக்கல் பெய்யுஞ்
சகநடுவே வேள்வித்தீ யெரிந்துயிரின்
ஆவுதியாந் தாகங் கொள்ளும்.''

15. ''பிரமைதனி லிருந்தேனே வொடுக்கப்பட்
டார்க்கழிவு பிழையா தாமோ?
கரவில்லா வேழையர்கள் அழிவென்னுங்
குகைக்குள்ளே கடிதேன் செல்வார்?
பரந்ததொழில் திறன், தொழிற்போர் பொறித்திறனின்
வேள்வியெலாம் பொய்யின் பாற்றோ?
பிரமையினர் பயத்தொடுங்கும் அணைவரையும்
பெருங்கட்டுப் பாட முத்தும்.''

16. ''உன்வாழ்வின் மங்களமுஞ் சுகதனமும்
ஊறுறவே கெடுத்தேன் பொல்லேன்
என்னிழிவை யுணர்கின்றேன் வெறுப்புற்றேன்
என்மீதே, யின்றி சைக்கும்
என்பாடல் பொருளறியேன் பாடுதற்காப்
பாடுகிறேன் வேறொன் றில்லை
என்தேவீ! மீண்டெழுக மெய்யுணர்வு
விரத்தியிலே மன்னிப் பீக.''

## சிரத்தையின் கூற்று

17. அரிவைசொலும் ''தழல்வடிவன் சிவனருளே
யிதயவழி பெறுதல் வேண்டும்
பரிந்திதயம் பற்றாதே புந்திமிகப்
பாராட்டித் திரட்டிக் கொண்டாய்
பெரிதிழந்தாய் மகிழ்வென்னுந் தனிச்செல்வம்
பெறவில்லை யுண்மை ஞானம்
அரிதுழன்று பொருளற்ற வழிச்செல்வார்
தொழிற்பிரிவு பிரமை யாமே.''

15. பொறி=யந்திரம்

18\. "உயிரென்னும் அழகொழுக்குண் டதுசச்சி
தானந்தந் தருக்க வூக்கம்
பயிலிடையே யலையெண்ணல் மீன்பிம்பம்
பற்றலிவை யுன்றன் புந்தி
அயிர்த்தயிர்த்துப் பகலெல்லாம் இயல்கின்றாய்
அதுசடத்தின் தன்மை யாமே
உயிர்க்கெளிய நல்வழியைத் துன்பின்பத்
தினியநிழல் வெயிலொ ழித்தாய்."

19\. "தரம்பிரித்தாய் உயிர்ப்பொருளை யைம்பூதம்
பங்கிட்டு வெறுப்பைத் தந்தாய்
தரணியிது விசும்பான்மாப் பரிணமம்,
பலவடிவந் தாங்கா நிற்கும்
விரகத்தி லனுவெல்லாங் கூடலவா
விழைந்துமகிழ்ந் தாடா நிற்குஞ்
சுரத்தினிய தோரிசையே நாற்புறமுஞ்
சூழ்ந்தொலிக்கும் 'விழிமின் நீவிர்'"

20\. "புவிநெருப்பின் மிகவெரிந்து மகிழ்வுடனே
யாவுதியும் பொழியா நின்றேன்
கவின்மனத்தே பொறுத்துள்ளாய் இதயத்தீ
யெரிந்திடவோர் காதல் பூண்டாய்
அவியாத பெருஞ்செல்வம் என்வயத்தாம்
அதைக்கொள்க யான்போ கின்றேன்
சவிக்குமர! இவணிருப்பாய் இன்பளிப்பாய்
நற்செயல்கள் தருக வேற்க."

21\. "இருவீரு மரசாள்க வாட்சிமதங்
கொண்டுபய முறுத்தல் செய்யேல்
திருமனுவைத் தேடுவனல் நதிபாலை
மலைபொழில்வாய்த் தேடிச் செல்வேன்
ஒருசூது மறியாதான் எதிர்ப்படுவான்
எங்கேனும், அவனன் புண்டேன்
இருவீரின் ஆட்சிமுறை பினர்காண்பேன்
மானவநின் புகழே வாழ்க!"

## மானவன் கூற்று

22. "அன்புறவை யறுக்காதே மனம்வெறுத்துப்
பேசாதே யுருளி னன்னுய்!
உன்னுணை கடைப்பிடிப்பேன் மதித்தவனுய்
உனதன்பின் பணியேற் பேனல்
என்னுயிர்க்கென் னுயினுமென் உறுதிவிடேன்
வரதானத் தியல்கென் சீவன்
என்னைவிடுத் தேகுகிருய் பொன்னடியே
யெனக்குறுக விஃதே யாவல்."

## சிரத்தையின் கூற்று

23. "சுந்தர!வுன் துயரொழியு மிவளன்பால்
கடுந்தருக்கம் புந்தி சூழுந்
தந்திரத்தாள், ஊக்கத்தன் கருத்தினனீ
பயமின்றித் தொழிலைத் தாங்கு
நொந்தவிடைத் துயரகற்று மாந்தர்தம்
நல்வினைகள் நோன்பு கொள்க
பந்தமிலாச் சமரசத்தை நிலைகாட்டித்
தாய்விருப்பைப் பரிந்தி யற்று."

## இடையின் கூற்று

24. "உனதிதய நம்பகத்தின் மொழியறிந்தேன்
உனதன்பு, சிரத்தா தேவீ!
எனதகத்தே வேருன்றும் வன்மையது
நின்சிறப்பை யென்றுந் தூண்டும்
புனலன்ன உனதன்பு பொழிந்திடுக
பொய்த்திடுக துயர மெல்லாம்,"
இனயமொழிந் திடைசிரத்தை யடிப்பொடியை
யேற்றுமகன் கரம்பி டித்தாள்.

25. எங்குள்ளோ மெவ்விடத்தோ மெனமுவ
ரிருந்தாரே மறந்தார் தம்மை
அங்கவர்கள் வெளிப்படைக்குத் தனித்திருந்தார்
அவரிதய மான தொன்றே

பங்கப்பட் டடிபட்ட நீர்த்துளிகள்
　　பாய்ந்தலையில் மீண்டுஞ் சேரும்
அங்கிருந்தும் நகர்ந்திருவர் புறப்பட்டார்
　　தொலைவிலணைந் தொருவ ரானார்.

26. வானகத்தே யமைதியுறுந் திசையமைதி!
　　மிகுவனப்பி னோவி யங்கள்!
வானகத்தே மீனினங்கள் நொந்தவிராத்
　　துளிவேர்வை மானு மாங்கே
தானவனி மிசைவீழு மாழ்ந்ததுயர்,
　　நிழல்பரவுந் தரணி கீழே
வானமதில் நதிக்கரையில் துன்பிருளே
　　வழியெங்கும் பரவா நிற்கும்.

27. தாரகைசே ரவ்வனந்தம் பூங்கொத்து
　　விரிவசந்த மெனத்த யங்கும்
பூரணவிண் மேனிலவு முறுவலிக்கும்
　　பொலிவுறுமால் ஒளியின் கற்றை
தாரகைபால் வழிமாயை நதியொழுகுக்
　　தயங்கொளியி னலையெ மும்பும்
பேரவருங் கீழடுக்கிற் பயநிழலே
　　பேசாதே யுடனு றுங்கும்.

28. நதிக்கரையோ தனித்திருக்குங் காற்றூஞ்சல்
　　நாதத்தோ டாடா நிற்கும்
நதிக்கரைமேல் அலைமோதி மெதுவாக
　　வதற்குள்ளே நகர்ந்து போகுங்
குதியலையின் மோதுமொலி யிடைகேட்குங்
　　கோலவொலி நடுங்க டுங்குங்
துதிவையந் தனைமறக்க வம்மலரோ
　　மணங்கெடினும் உருவா டாதே.

---

27. அனந்தம் = வானம்

28. அம்மலர் = சிரத்தை

29. எம்மருங்கும் பார்த்தனளே நதியென்ன
யிரைந்திரைந்து மூச்செ டுத்தாள்
அம்மருங்கோ ரிருகண்கள் பாறைபுதை
யரதனம்போல் ஒளிரக் கண்டாள்
சும்மையிரு ளூடொலிக்கும் ஓய்யெனலே,
புனலொழுக்கின் துழனி தானோ?
"அம்ம! இலை கொடிகவிந்த குகைக்குள்ளே
அமருயிரின் மூச்சா கும்மே!"

30. எத்தகைய வோவியமிந் நதிக்கரைதான்
அதன்தூய்மை யெத்த கைத்து?
மெத்தவுயர் உச்சியினுஞ் சிரத்தைசிரம்
மிக்கவுயர் வுடைத்தே மாது
சுத்தவொளிப் பொன்வடிவள் புவிநெருப்பில்
எரிந்துகரைந் துற்றுள் தூய்மை
அத்தலத்தே மனுகண்டான் புவிநண்பாம்
அன்னையுரு வோவி யத்தை.

## மனுவின் கூற்று

31. மனுவுரைத்தான் "நின்மனத்தே யோர்விருப்பும்
மாதரசீ! கண்டே னில்லை
தனதெல்லாம் துறந்தனளாய்க் கண்ணீரோ
டெனையடைந்தாய் துயரந் தந்தேன்
எனதுதனம் மானவனை யொப்டைத்தாய்
எனைவருத்துங் கொடியோர் கையில்
உனதிதயங் கருங்கல்லோ வச்சிரமோ?
வியப்புடைத்துன் உள்ளப் போக்கே!"

32. "வனவிலங்கின் கொடியரிடம் இளமானை
யொப்படைத்தாய் வனப்பு டைத்தே!
மனங்கவரு மவன்மொழிகள் கேட்டிருந்தேன்
மாசற்ற மழலைச் சொற்கள்

உனதிதயம் மிகக்கொடிது மாதிடையும்
உனேமோசம் செய்து போந்தாள்
இனமுறுதி கொண்டுள்ளாய் வில்நின்றும்
எழுந்தம்பு விட்ட தேகி.''

## சிரத்தையின் கூற்று

33. ''அன்பவினும் ஐயுறவு கொண்டுள்ளாய்
கொடையாலே யேழை யாகோம்
இன்னபரி மாற்றத்தின் உலகசையுங்
கொடைகுறைவே யில்லை யாக்கம்
உன்கட்டு விலகிற்று விடுதலையை
நனிபெற்றுய் குற்ற மேது?
தன்னுறவோர் துறந்தேகின் அஞ்சுவதேன்?
தந்தேற்பாய் செய்தி யீதே.''

## மனுவின் கூற்று

34. ''என்தேவீ! 'யுனதீகை சிறந்ததுதாய்
வடிவத்தில் இலவி காரம்
நன்மைத்தே நனிபொறுத்தாய் பிறர்துன்பம்
நலமென்று தான்சு மந்தாய்
சொன்னலத்தி னுரைதருவாய் சென்றுரைவாய்
பொறுமையெனுந் தூய வில்லம்
என்தவறே யுனேக்கண்டேன் எளியபெண்
எனக்கொண்டேன் இழிந்த வெண்ணம்!''

35. ''நதிக்கரையில் பாழிடத்தே பசிநோயுங்
கடுங்காற்றும் நலிவு செய்ய
அதியெண்ண வட்டத்தில் அகப்பட்டேன்
அவலமுற வருகின் றேனே
மதிமாற்றத் தகப்பட்டு வலியிழந்து
வெற்றிடத்தை வலிந்தேற் றேனுல்
பதிகொடிய னெனக்கருதே லிதயத்தைக்
கிழித்துப்பார் கழிவி ரக்கம்!''

36. "இந்தவிரா நிறையமைதி நினைவுறுத்தும்
இறந்தனவாம் நிகழ்ச்சி தம்மை
இந்தவிடம் பிரளயமன் றடங்கவென
தாருயிரை உனக்க ளித்தேன்
சொந்தமுனக் கானேனே மறப்பேனோ
விவ்வளவில் இழிவு றேனே
அந்தவிடத் தெழுந்தருள்க சாந்தவிடம்
அடைவோமே கரம்பி டித்தேன்.

### சிரத்தையின் கூற்று

37. "இருதேவ அறிகுறியான் மானவனும்
நந்தவற்றைத் திருத்து மின்றே
கருநஞ்சாம் புலனுவல் அகற்றுயர்ந்த
தொழிலியற்றிக் காண்க வீடு
பொருமயக்க மறுத்திடுக புலனடக்கம்
விடுதலையின் மறையே பொய்மை
தருவுணர்வு விழுந்துவிடும் பண்டைவரி
கால்நடையான் மறைதல் போல."

### இமயத் தோற்றம்

38. கனவிருளோ பொருள்தோற்றப் பாழகத்தின்
கலகலத்த குழப்பந் தானோ?
கனமரங்கள் செறிவாலே பேரிமயங்
கருமணியின் மலையாத் தோன்றும்
இனியநிழ லிடந்தன்னை மனுகண்டான்
இமையாதே, பாழ்மை யொன்றே
தனதுள்ளங் கொண்டிருக்கும் முடிவின்றித்
தான்பரவும் உயர்ந்தி லங்கும்.

### கைலைமலை சிவனுகத் தரிசனம்

39. இருள்திரையைச் சத்தொன்று கிழித்ததுவாய்
ஏந்தல்கண் புலனு யிற்றே
இருட்கடலைக் குடைந்துநில வென்னுநதி
யினிதசையுந் தழுவ லாலே

அருள்பிழம்பன்! வெள்ளிநிற வொளிவடிவன்!
ஆனந்த மங்க ளத்தான்!
திருவொளியும் விளையாட வின்கதிர்கள்
அலைமோதச் சிவனே தோன்றும்!
40. இருட்பிழம்பே குழுவளகம், பொறிதோறு
மெல்லலையிலா வொளிகள் கற்றை!
இருட்பாழைப் பிளந்தோடுஞ் சிற்சத்தி
யுள்ளொலிக்கு மினிய கீதம்
அருளாளன் நடராசன் நடம்புரிவான்
அகன்வானஞ் சிரிப்பு மேவுந்
திருவிசைக்குத் தாளமதைத் தாள்களிடும்
உணர்வகலுந் தேச காலம்.
41. அண்டங்கள் சிதறுவன ஆழிவழி
யுகம்பலவு மாங்குப் போகும்
அண்ணலொளி மின்கண்கள் நோக்குகிற
வவ்விடங்கள் நடுநடுங்குந்
தண்ணணுக்கள் அகவுணர்வின் பலவடிவந்
தாங்கியழிந் தியலு மற்றும்
மண்விசும்பு தத்தளிக்கும் வெளிப்படையாம்
பொருண்மாற்றம் மறையாம் பின்னர்.
42. சத்தியுட லொளியதனுல் பூண்டற்றுப்
போயழியுஞ் சாபம் பாபம்
அத்தனவன் நடத்தாழ வியற்கைகரைந்
தொளிக்கடலி லாழ்ந்து மூழ்குஞ்
சுத்தவழ கோவியமாம் அச்சமிகு
நடமெனினும் அழகு தூய்தே
பித்தனொளிப் பனிச்சிரிப்பு வயிரமலை
மின்னலொளி பிறங்கிற் றுகும்.
43. நடத்தானை மனுகண்டான் தனைமறந்து
நங்கையிடம் இரைந்து சொன்னுன்
''மடமயிலே! வியப்புடைத்துத் திருவடிக்கே
மலர்க்கரந்தந் தழைத்துப் போவாய்
அடல்பாவ புண்ணியங்கள் எரிந்தெரிந்து
தூய்மையுறு மாங்குச் சென்றுல்
கெடும்பொய்மை யையமிலை சமரசமும்
நிறைமகிழ்வுங் கிளர்த்து மூர்த்தி!''

## பதின்மூன்காம் படலம்

# மறை

### கைலைமலையில் இருவரும் ஏறுதல்

1. இருள்திர ளிடத்தே பாறைப்
பனியசை வின்றி நிற்க
அருவழி களைப்பி னாலே
மறைந்ததவ் வசலன் பார்த்துக்
கருவமொ டிருந்தான் ஏறிக்
கடந்திட வவர்மு யன்றார்
திருமனு சிரத்தை யூக்கந்
துணிவுகள் என்னச் சென்றார்.

2. எதிர்த்திசைக் காற்று, "நீவிர்
திரும்பு"கென் றியம்பும் போலும்
"எதிரெனக் கெங்குச் செல்வீர்
உயிர்களை யிழந்தீர் கொல்லோ?"
அதியுயர்ந் துச்சி வானந்
தொடுவதற் காக நீளும்
அதிலுடற் புண்கள் கொல்லோ
வச்சமாம் குழிக ளாங்கே?

3. பன்னிலா செய்வான் பாறைப்
பனிமிசை பிறங்கும் பானு
அன்னகூ ழலுக்கே காற்றுச்
சுழன்றனன் அடைந்தான், கீழே
மின்னலார் மேக மாலை
வானவில் விளங்க வோடல்
மின்னணி விளங்க யானைக்
குட்டிகள் போலக் காணும்:

4. சுழியுறு மதநீர் வெள்ளை
யானைகள் சொரிந்தா லென்னப்
பொழிதருங் கிழி டத்தே
புண்ணிய வருவிக் கூட்டஞ்
செழிப்புயர் சமத லந்தான்
ஓவியத் திரைபோல் காணும்
வழிகிற நதிக ளாங்கே
திரைதிகழ் வரிபோல் தோன்றும்.

வேறு

5. புவிப்பொருட்கள் துளிகளெனக் காட்சிதரத்
தலைமேலே பெரும்பாழ் பொங்கும்
அவிந்தபினர் மலையேற்றக் கடுங்கங்குல்
அணுகிடவும் வென்றிக் காலை,
தவிப்பவளை யெங்கழைத்துப் போகின்றாய்?
தளர்ந்ததுகாண் என்றன் சத்தி
அவிந்திடவென் மனத்துணிவும் பற்றுக்கோ
டற்றவனா யயர்ந்தே னென்றான்.

வேறு

6. முகமதி யொளிர்ந்த தன்றே நம்பக முறுவ லிப்பே
தகவொடு தொண்டி யற்ற விரல்தளிர் தாங்கு டிக்கும்
இகத்துயர் மனுவி னுக்குக் கைகொடுத் தினிது சொன்னாள்
"மிகத்தொலை வந்து விட்டோம் இனிப்பரி காசம் வீணே."

7. "நடுங்கின திசைகள் கால வெல்லைகள் ஒன்றுங் காணேந்
தொடுபதம் உணர்கின் றாயோ பனிமலை யிருப்புச் சூழல்
அடுக்கவோ ரிடமின் றேனும் இவ்விடந் தங்க லாமேம்
அடுத்ததோர் சூழ்ச்சி யில்லை யூழ்நமை முடியா தாட்ட."

8. "கிழலென வொன்று தோன்றி நினையெழு கெனவே கூறுஞ்
சுழன்றியல் காற்றுத் தள்ளத் தூக்குநம் முணர்வின் வீச்சே
வழிகெட விறக்கை சாய்ந்த பறவைபோல் வீழ்ந்த போதும்
பொழிதருங் காற்றும் வானும் உதவுமா விறக்கை போல."

9. "அஞ்சிடேல் சமதலத்தை யடைந்தனம் விழித்துப்பாராய்,"
அஞ்சுதல் சிறிது நீங்க மலர்விழி திறந்தா னன்றே
மஞ்சனும் புதிய ஞுஞன் மீனினம் மறைந்த, சீவன்
உஞ்சுறப் பொலியுங் காலைக் கொருதடையில்லையாங்கே.

10. பருவங்க ளொழுங்கங் கேது? புவிவரி பார்த்த லேது?
ஒருபுது நுகர்வு தோன்றிற் றுயர்ந்தவா னிடத்தி னூடே
தெரிந்தன வுருண்டை மூன்று செங்கதிர்ப் பிம்ப மாக
எரிந்தன கதிர்கள் வீசித் தனித்தனி யியங்கா நிற்கும்.

11. "புதியன கிரகந் தாமோ? புகலுக சிரத்தாய்! மற்றும்
அதிசய வுலகோ? காவவ் விந்திர சால நின்றும்"
"வதியுமம் முக்கோ ணத்துள் வலிமிகு மூன்று சோதி
பதிமனு அவைதாம் இச்சை பாங்குறு கருமம் ஞானம்."

## இச்சையின் சோதி

வேறு

12. "சுந்தர விடியலின் தூய பந்துகொல்?
செந்திரு மனத்துறு பாசச் செம்மைகொல்?
அந்தநல் லொளியுருள் ஆவ லாகுமோர்
சுந்திரக் கோயிலாய் வனப்பின் றேன்றுமால்."

13. "கடிமணம் ஊறெடு நல்ல வொளியொலி
படுசுவை யைவகை யொப்பில் அழகிய
படிகமார் பொம்மைகள் பட்டாம் பூச்சென
நடிப்பவக் கோயிலைச் சூழ்ந்து நாட்டியம்."

வேறு

14. "வசந்தகா ணகத்தே புட்ப
ராகமாம் நிழல்கீழ் வந்தே
நசைமிக விளையாட் டொன்றே
யாற்றுமப் பொம்மைக் கூட்டம்

12. பந்து = கதிரவன்.

வசந்தமார் குயில்போல் பாட
வுள்ளெழும் வனப்பெண் ணங்கள்
இசைமிகக் கனிந்து வான
விசும்பெலாம் நனைக்கு மன்றே."

15. "இதினுழைந் தாலே கட்டித்
தழுவிய தென்ன தூண்டல்
பதிந்துபின் உள்ளந் தோன்றும்
மெல்லிய படப டப்புப்
புதுப்பரு வத்தள் தொட்டால்
சிணுங்கியின் பான்மை போல
அதிகமெய் சிலிர்ப்பும் நாண
வுணர்ச்சியுங் கிளம்பு மன்றே."

16. "இச்சையின் சோதி வாழ்வின்
நடுவுல குயிர்கள் மிக்க
நச்சுமோர் சுவையொ ழுக்கு
நனைத்திடும் இதையெப் போதும்
இச்சிறு நதியில் ஆவற்
பேரலை யெழும்பா நிற்கும்
இச்சவி யிடத்தே மின்னல்
போன்றழ குயிர்க ளேற்கும்."

17. "மலர்க்குழு செறிந்து காணும்
இச்சையின் தொளைகள் தோறும்
அலர்நறு மணமெ ழும்பும்
நனைந்தபின் இரசத் தாலிவ்
வுலகிடை மறைந்த பேச்சாங்
குழல்பல வுளநங் கண்ணில்
புலப்படா வகையில் பாயும்
நுண்துளி யிரசம் பொங்கும்."

---

16. சிறுநதி = சுவையொழுக்கு, இரசதாரை

17. உலகு, ஈண்டு இச்சையின்சோதி

18. "விருப்பெனு முலகில் வாழும் மனேமைய சீவர் மிக்கக்
கருத்துடன் அழகு மோகக் கருத்தினுக் காற்றும் பூசை
அரசுவீற் றிருக்கும் மாயை யாருயிர் தம்மைப் பற்றும்
பரப்பியே மோக சாலம், படிந்துயிர் மயக்கில் வாழும்."

19. "காமனி னிரதி யென்னக் காரிகை யரம்பை மார்கள்
தேமரு மலர்போல் வண்ணச் செம்மையு மணமு மீறத்
தாமலர் வெறியில் வாழ்வார் தத்தம துவகை பொங்கக்
காமரு வாயி னின்றும் புறப்படும் இனிய பண்கள்."

20. விருப்புல கியலுஞ் சொந்தக் கருத்தடிப் படையில் மேன்மை
அரும்புபுண் ணியமும் ஈன பாவமும் பிறக்கு மன்றே
உருப்பல கொள்ளு கின்ற வுயிரெலா முறுக ருத்தில்
உருப்படும் புலன வாத்தீ யொளித்தழ லினிதெ ரிந்தே."

21. கருத்தெனு மரத்தே சிக்கல் கடுவிதிக் கொடிவந் தேறும்
வருமலர்ந் தாவல் வான்பூ வஃதுயிர் வனவி னுவாம்
வருமெனி லினிய வேனி லிலையுதிர் தானும் வாய்க்கும்
பெருங்கலப் பழுதும் நஞ்சும் பிணிப்புறு மின்பும் துன்பும்."

## மனுவின் கூற்று

### வேறு

22. "விருப்புல கம்மிது நன்றுவி ளக்கினே
கருத்தவவ் வொளியெது தெரியக் காட்டுக
உருகினே யருளினே யுள்ளம கிழ்ந்தனே
இருப்பதெம் மறைபொருள் சிறப்பெ டுத்துரை."

## தொழிற் சோதி

### சிரத்தையின் கூற்று

23. "கரியசக் கரமிது புகைக விந்தது
தெரிகிலே தெளிவுடன் இருள்செ றிந்தது
தெரிகில மிதன்மறை பொருளின் செறிவினுல்
புரிசுழல் புகைகவிந் திருண்ட புரியிது."

---

20. விருப்புலகு = இச்சையாஞ்சோதி
21. உயிரெனும் வனத்தே அஃது வினுவாகும்.

24. ''மாண்டொழில் சக்கர மாகும் மாவினை
தூண்டலு முருளையின் பிண்டஞ் சுழன்றிடும்
ஈண்டுயி ரினங்களும் புதுவி ருப்புகள்
தூண்டிட நாளுமோரா தொழிலை முயலுமால்.''

25. ''உழைப்பிலோர் கடுமையே யோங்கு மெந்திரம்
பிழைக்கிலா தெவரையும் பிழிந்தி யங்குமால்
விழைந்திளைப் பாறவும் மிஞ்சா தொருநொடி
யழைதொழிற் சாலையுள் உழைப்போ ரடிமைகள்.''

26. ''கற்பனை நிழல்வளர் கருத்தி னின்புகள்
உற்பத்தித் தொழில்வழித் துயரா யுற்றிடும்
உற்றபல் தோல்வியுங் கொடுமைக் கூக்கமும்
பற்றிடச் சுழன்றிடு மிங்குப் பல்லணு.''

27. ''செய்தெதை யேனுமே யுடலெ டுத்தவர்
உய்ந்திட விரும்புவர் வெற்று ணர்ச்சியும்
மெய்யிலா ஞானமும் மிகுந்த துயர்தருஞ்
செய்தொழின் மாந்தருந் துன்பி லாழ்ந்தனர்.''

28. ''இடைவிடா தியற்றுவர் ஏதே னுந்தொழில்
கிடைத்திடா தமைதியு மின்பக் கிளர்ச்சியும்
புடைப்பரால் சாட்டையால் புகுந்தி யாவரோ
கடைவரை யஞ்சினர் கால்ந டுங்குவர்.''

29. ''கழிபெரும் வேட்கையின் ஆவற் கவர்ச்சியின்
தொழிற்செறி யுருளையைச் சுழற்று மயன்விதி
தொழில்வழி யைம்பெரும் பூதந் துதிப்பரால்
விழிமுக முதலுருப் பலவுந் தந்துமே.''

வேறு

30. ''இயற்கை வளர்ச்சியின் உயர்படி யியன்றவர்
இயற்கை யகத்திருந் தேகினர் தொலைவிலே
பயனில் வாழ்க்கையைச் சாரமில் செய்கையைச்
செயற்கை முறைகளைச் செய்துழல் கின்றனர்.''

31 "எதிலும் மகிழ்வுறு வாரிலை யியன்றதைச்
சதமென் றயின்றுகல் லமைதிகொண் டாரிலை
எதுவந் தாலுமென் கோடிமேல் கோடியே
மிதமி லாத்தனம் வரினும கிழ்ந்திலர்."

32. "பொய்யை யாள்பவர் பிறர்தனம் பறிப்பதில்
மெய்யைக் கொல்பவர் குருதியை யுறிவதில்
வையமே வெறியரின் பலிக்கள மாயதோ?
ஐயமொன் றில்லையே யழிவுவந் தடைவதில்."

வேறு

33. "நிரந்தரம் போர்களே, நெடிய தோல்விகள்
அரசுவீற் றிருக்குமால், அவர்கண் மூடியே
விரவுவர் தொழிற்களம் விரைந்தி யங்குவர்
பரந்தவிச் சமுகமே யிருள்ப டிந்ததோ?"

34. "இழந்தனர் நுண்மையை யிழியா டம்பரத்
துழன்றனர், கொடியன வுழைப்பின் விளைவுகள்
பொழிதரும் வேட்கையே யமைதி புகுந்திலை
இழிந்ததே யவர்நிலை மோக விழிவினல்!"

35. "பகல்தொறும் புதுவிதி பறைசாற் றப்பெறுந்
தகவில ராட்சியின் வெற்றித் தாண்டவம்
பகலெலாம் பசித்தவர் ஒடுக்கப் பட்டவர்
நுகத்தடி மாடென நொறுங்கப் பெறுவரே."

36. "பெருந்தொழில் பொறுப்புகள் ஏற்றுப் பேதையர்
பெரும்பத வுயர்வினுக் குளுற்றும் பெற்றியர்
நிரந்தரம் தோல்வியின் நெஞ்சு டைந்தவர்
சிரங்களை நசுக்கிடத் தயக்கஞ் செய்கிலர்."

37. "குவியலின் குவிந்தன செல்வக் கோடிகள்
கவடுற மயங்குவர் கான னீரெனச்
சவிச்சுகம் நுகர்ந்தவர் இறந்து சாயினும்
புவிச்சுக வாவலோ மீண்டும் புகுதரும்."

38. "விரும்பினர் யாவரும் மேன்மைப் புகழினை
விருப்பமோ டாற்றினர் தீய்தாம் வினைகளைக்
குருடராய்த் தூண்டலின் குதித்தோ ராயினும்
பெருமிதங் கொள்வரே கருத்தாப் பெயரொடு."
39. "உயிர்களுக் குதவுவ கருவிக் குழுவெலாம்
பயிர்புன லுறைதரும் பனிக்கல் லாகவே
துயர்ச்கனல் கொளுத்திடுந் தொழிற்பு குந்தவர்
உயிர்த்திட லரிதிறந் திறந்து யிர்ப்பரால்."

வேறு

40. "மரணமுங் கால வெட்டும் மாய்க்கிலாத் தாது போல
விரத்தமுங் கண்ணீர் தானுஞ் செறிதொழில் நெருப்பு தித்த
பரவுபண் பாடு தன்னைப் பாதுகாத் தியங்கு மன்றே
உருக்கொளும் புதியவச்சில் சுடச்சுடத் தொழில்நெருப்பு."

வேறு

41. "பிரளயப் பெருக்கெனத் தொழிற்பண் பாடுதான்
திரளுமால் மாந்தரும் வணங்கி யேற்றனர்
இரைந்தது தொழில்நதி யொழுகும் முடிவிடம்
விரைவரே மீதந்தனர் வேற்று வழியிலர்
42. "சிரத்தையே! நிறுத்துக கொடுமை செய்வது
சிரமதை நசுக்குதல் செய்யுந் தொழிற்களங்
கரவில துயரொளி யாதக் கவினுருள்?
பரப்பிய வெள்ளியின் குவியற் போன்றது."

## ஞான சோதி

### சிரத்தையின் கூற்று

43. "கெழுதகை யன்பவீ தறிவின் கேந்திரம்
முழுகுவர் கருதிலர் மூள்துன் பின்புகள்
பழுதிலா நீதியின் பார வாட்சியே
சுழலுநற் புந்தியின் சகடந் தோன்றுமே."
44. "அறிவுல கத்திலே யணுசு தந்திரஞ்
செறிந்ததோர் தருக்கமோ டாய்தல் செய்திடும்
இறையுள னிலனென, வின்ப துன்புகள்
உறவிலை யெனினுற வுண்டு முத்தியில்."

45. "கிடைப்பது கிடக்குமால் கிடையா தமைதியே
யுடைத்தது பங்கிடும் உற்ற தனத்தினைத்
தடையிலை புந்தியின் தாக முற்றிட
அடங்குப னித்துளி யருந்து மணலென."

46. "தருக்கமும் புந்தியுந் தவமும் ஆய்தலும்
பெருகவிவ் வுயிரினம் ஒளியில் பிறங்கிடும்
மருத்தலத் துலர்ந்தன வருவி மணலென
உருத்தழன் றனவவை யொளியில் விளங்குமே."

வேறு

47. "உள்ளெழுங் கருத்தால் தக்க தகவில வுணர்ந்த ளத்தல்
உள்விழிப் போடு செய்வார் ஒருவிருப் பில்லா மாந்தர்
கள்ளமில் ஒழுக்க மேலோர் நீதியின் களத்த மர்வார்
உள்ளமே கலங்கார் முன்னுல் பெருந்தன முற்ற போதும்."

வேறு

48. "அறத்துலைக் கோலினல் பாக யாக்கியே
சிறப்பின வுரிமைகள் விளக்கஞ் செய்வரால்
அறத்தினர் தன்னல மறவே யவற்கிலை
பெறுகில ரமைதியை அறிவுப் பேற்றினும்."

49. "உத்தமந் தானிவர் தனித்த வுரிமைகள்
இத்தலந் தாமரை யிலங்கு பொய்கையில்
மெத்தவு ழைக்குமத் தேனீ மேன்மைபோல்
நத்தியு ழைத்தவர் உயிர்த்தே ளுடுவர்."

50. "இன்புறு கூதிரின் இருள்பி ளந்திடும்
இன்னிலா, இருளொளி யிரண்டுங் கலந்துள
உன்னத ஒழுக்கமும் ஒழுக்க வீனமும்
இங்நிலத் தியங்கிடும் என்றும் விரவியே."

---

45. தனம், இங்கு அறிவுத்தனம்

50. உத்தம ஒழுக்கம் = தருக்கம் நியாயம் எனும் பலத்தில்
நிற்கும் விதியொழுக்கம்;
அதற்கெதிரான குழப்பம் ஒழுக்க வீனமாம்.

51. "அன்னவர் வெளிப்படைக் கமைதி பூண்டவர்
என்னினும் உள்ளகத் தையப் பாட்டினர்
நன்புரு வத்தினைக் கோடும் நயத்திலே
தன்குறி காட்டுவர் அறிவின் செருக்கினர்."

52. "இன்னவர் அறிகிலர் வாழ்க்கை யினிமையை
அன்னதைத் திரட்டலாந் தொடக்கூ டாதது
உன்னத வேட்கைதான், உற்று மற்றவர்
தன்னைவஞ் சிப்பினும் ஒருபொ ருட்டிலை."

53. "அன்னவர் சமரசம் ஆற்ற முயலுவர்
என்னினும் வேற்றுமை சால வேற்றுவர்
இன்னுயிர் உண்மையைப் புறம்பா வியற்றுவர்
மன்னுயிர் விருப்பினைப் பொய்யா மதிப்பரே."

54. "உள்ளங் குழம்பினும் மேற்புறம் ஒண்மையர்
தள்ளரு சாத்திரக் காவல் தாங்குவர்
கொள்கைவிஞ் ஞானமே கூர்ந்து வளர்வதை
உள்ளிலர் அறிவிய லாற்றி லொழுகினும்."

55. "கண்டனை திரிபுரங் காந்து மொளியினை
அணடமுப் புள்ளிகள் அவைதம் மிடங்களில்
தண்மையும் வெப்பமுந் தாங்கி நிற்பினும்
விண்டன தொலைவிலே வீற்றி ருக்குமால்."

56. "அறிவொளி தொலைவிலே, தொழில்வே றகலிடஞ்
செறிமன விருப்பமோ சேய்மை யியங்குமேல்
செறிந்தவை ஒற்றுமைச் செம்மை நாட்டிடா
பறிகொடுத் தின்பினை யுயிர்கள் பரிவுறும்."

57. சிரத்தையின் முறுவலாஞ் சிறந்த சோதிமுப்
புரங்களில் சென்றொளி மாரி பொழியமுப்
புரங்களும் ஓர்நொடி யொன்றப் புகுந்தன
பரந்தபே ரொளித்தழல் பாய்ந்தெ ழுந்தது.

58. பொன்றழல் கொடியதோர் காற்றின் பொங்கியே
சென்றது பத்துறு திசைகள் கவிந்தது
அன்றவண் விண்மிசை பறைபோ லரற்றுமால்
நின்றன பொருளெலாம் 'நேதி! நேதியே!'

59. முப்புர மெரிந்தன மூண்ட தெரியலை
எப்புற வுலகினும் எழும்புங் குழலொலி
அப்பொழு துடுக்கையி னரற்ற லெழுந்தது
முப்புரப் பிரளய நெருப்பு மூண்டது.

60. அலர்ந்தமா ஞானமாந் தூய வங்கியின்
உலகெலா மஞ்சுமா நடன மோங்கவக்
கலந்ததீ யுலகினு ரோமக் கால்தொறும்
நிலவுமங் கொருபுதுக் காட்சி நின்மலம்.

வேறு

61. இறந்தன மூன்றும் புத்தி தொழிலொடு இச்சை தானும்
உறக்கமும் விழிப்பு மாயக் கனவுமங் கொழிந்த தன்றே
பிறந்தத ஞுக தத்தின் பிறங்கொலி, அமைதி பூண்டான்
சிறந்தவள் சிரத்தை யோடு சேய்மனு சின்ம யத்தில்.

---

58. ந+இதி=நேதி, நாங் காணும் பொருள் எதுவும் பிரமம் அல்ல என்பது பொருள்.

61. அஞுகதம்=யோக முற்றும்போது பிரம்மரந்திரத்தில் தோன்றும் ஓங்காரவொலி.

## பதினைந்தாம் படலம்

# மகிழ்ச்சி

1. மெல்லச் சென்றனர் நல்வழி மேவுவர்
கல்லார் குன்றுகள் கானக வாறுகள்
புல்லின் மெல்லிய நல்வழிப் போந்தனர்.
ஒல்லுந் தோளமர் கோப்புடன் போந்தனர்.

2. சோமப் பைங்கொடிப் போர்வைக விந்திடத்
தேவ றக்குறி வெண்ணிறச் சேய்விடை
காமர் மென்கழுத் தொண்மணி யார்த்தெழப்
போமப் பீடுடன் பொங்கழ கார்ந்திட.

3. மழுவெ ருத்தது சேர்கயி ரூர்கரம்
சுழலுங் கூர்திரி சூலவ லக்கரங்
குழந்தை மானவன் கூடவி ருந்தனன்
எழின்மு கத்தொளி யோர்முடி வற்றது.

4. சிங்கக் குட்டிபோல் செவ்விதி ணூர்ந்தன
அங்க நற்பொறி கட்டழ கார்ந்தன
துங்க வாலிபஞ் செம்முகந் தோன்றுமால்
அங்கொர் செங்கருத் தின்வடி வானவன்.

5. விடையின் ஓர்புறஞ் சொல்லெதும் விண்டிலள்
இடைய மைதியோ டேகினள் காவியின்
உடையள் பட்சிகள் இன்னிசை யோய்ந்தவத்
தடையில் செக்கரைப் போலவொ ளிர்ந்தனள்.

6. புதுவூக் கத்தொடு வாலிபர் போந்தனர்
மதுமொய் வண்டென மக்களும் ஆர்த்தனர்
மதிமு கத்தியர் மங்கலப் பண்களை
யெதிர்மு ழக்கினர் நல்வழி யேகுவர்.

---

2. தே அறக்குறி

7. சுமைக ளேந்தின சூழ்ந்தன சாமரம்
அமைந்தங் கேறினர் பேரெழில் வாலிபர்
அமைத்தார் நல்விளை யாட்டுகள் தத்தம
இமைதோ றும்புகும் இன்பெனும் வாரிதி.

8. எங்குச் செல்கிறுர் என்பதை முற்றிலும்
அங்குத் தாயர வர்கரம் பற்றினர்
சங்கொ லித்திட நல்லிசை சாற்றினர்
தங்கள் நாயகர் உள்ளங் குளிர்தர.

9. "இதுதா னவ்விடம் அண்மைய தென்றனை
மதுரச் சொற்களி யம்பினை யென்னினும்
அதுவோ நீளுது நிற்கிற தாயிலை
யெதுவத் தூய்தலம்?" என்றனன் மானவன்.

## இடையின் கூற்று

10. "முன்ன ரவ்விடந் தூயது மொய்ந்நிழல்
இன்ப தேவதா ரானதோர் கானகம்
வன்ம ரத்திலே மென்பனி வாரியை
முன்னிக் கிண்ணியாம் மேக முகக்குமால்."

11. "இந்தக் குன்றிறக் கங்கடந் தேறினல்
அந்தப் புண்ணிய நற்புலஞ் சேர்குவம்
அந்த முள்ளது நல்லொளி யார்ந்தது
சொந்த நாடெனத் தூய்மையைப் பெற்றது."

12. பின்ன ராயிடை பாலிது பேசினன்
"அன்னுய்! நில்லெனக் கவ்வர லாறுசொல்"
என்று பிள்ளை வினவினன் மாதிடை
யன்னுன் பூவுடற் பேரெழின் மாந்தினள்.

13. பாத முன்புற மூன்றினள் பார்த்தனள்
பாதம் வைத்தனள் பொன்மலர் தோய்ந்தெனச்
சாத னைவழி சார்ந்தவர்க் கீபவள்
பேத நீக்கினள் பெண்கள ருங்கலம்.

---

7. சாமரம் = சுராப்பசு     வாரிதி = கடல்

14. "சேர வேண்டிய புண்ணிய நற்றலம்
பார பூமியில் பாவன மானது
சார மோர்ந்தவன் சாதனை செய்யிடம்
ஏர மைந்தது சாந்தத போவனம்."

15. "சாற்றிங் கெப்படிச் சாந்தத போவனஞ்
சாற்று வாயிலை தக்கவி ளக்கமாய்,'.
சாற்றி னுனவன் தாயனை மாதிடஞ்
சாற்றி னுளவள் சற்றுநா ணத்தொடு.

## இடையின் கூற்று

16. "சொன்னூர் பேரறி வாளனேர் தூயவன்
அன்ன சூழலோர் போதுநெ ருங்கினன்
பன்னு பூமிசேர் பேரழற் பாய்ச்சலால்
துன்பி லாழ்ந்தனன் தீய்ந்தனன் தேன்றினன்."

17. "நெருப்பி னேங்கு கொழுந்துகள் நீள்வனம்
பொருப்ப டித்தலம் புக்கு விரிந்தன
உருத்த மாநெருப் பார்தழல் வீச்சினுல்
கருகி வெந்தது கானகப் பைந்தடம்."

18. "மனையின் மாட்சியள் நற்றுணை மங்கையே
யனையள் தேடினள் அவ்வயின் சேர்ந்தனள்
இனைய கூர்துயர் மீறவி ரங்கினள்
நனைய கண்மழை நங்கையும் பெய்தனள்."

19. "கண்ணீர் ஓர்வர தானமாய்க் கான்றிட
மண்ண கத்திடை மங்களம் பொங்குமால்
தண்மை கானுறுந் தாபந் தணிந்திடக்
கொண்டு பைந்தளிர் இன்பமுங் கூர்ந்தது."

20. "அருவி பொங்கின் குன்று பொழிந்தன
அருளெ னப்பசுந் தண்மை பரந்தது
கரிந்து லர்மரக் கானகை செய்தது
விரித ளிர்மிசைச் செம்மை தவழ்ந்தது."

வேறு

21. "இருவரும் அவ்வயின் அமர்ந்தி ருந்தனர்
சிருட்டித னக்கருஞ் சேவை புரிந்தனர்
தருவதற் கின்பமும மகிழ்வுந் தங்கினர்
வருத்தமெ ருப்பினை வெருட்டி வந்தனர்."

22. "மனத்தெழும் வேட்கையை மாணத் தடுப்பது
புனன்மிகத் தெளிந்தது தூய்மை புரிவது
மனசமென் றழைப்பரால் அணுகு மாந்தரின்
மனத்தெழு மின்பமொ டமைதி மன்னுமே."

## மானவன் கூற்று

23. "எருத்தினை யிவ்வித மேன்மெச லுத்தினை
யருத்தியி னதன்மிசை யமரா தேகினை
வருந்தினை களைப்பினை வரவ ழைத்தனை
மருமல ரடிகளும் நோவ வருந்தினை."

## இடையின் கூற்று

24. "நாமகள் நதிக்கரை நாட்டு வாசிகள்
காமனை வருமொரு வழியை நாடினம்
பாமரர் பாழுயிர்ப் பார பாத்திரம்
நேமமாய் வருகிறோம் அமுதம் நிரப்பவே."

25. "எருத்திது நல்லறக் குறியா முயன்றிதை
யருத்தியின் கொணர்ந்தனம் அறத்துக் களிக்கவே
ஒருத்தருந் தடைசெயார் உற்று விடுதலை
கருத்தெழு மின்பொடுங் களிந்து வாழ்ந்திடும்."

26. அவர்விழிப் புற்றனர் அதுவே யிறக்கமே
அவண்மலைச் சமதலம் பசுமை யார்ந்ததே
யவர்மன வெரிச்சலும் நோயு மகன்றன
அவர்முனர் வெண்மலை கைலை யலர்ந்தது.

27. அதனடி வாரமே யழகு புற்கொடி
சதனபூங் காகுகை சால வார்ந்தன
வதனிடம் மானச மடுவு மமர்ந்துள
ததனையெல் லாருமே யன்பின் கண்டனர்.

வேறு

28. மங்காச் செம்மையும் மஞ்சளுஞ் சேர்மலர்
எங்கு நோக்கினும் பார்ச்சித றுண்டன
அங்கி யாங்கணும் மென்மலர்க் கீழ்க்கிளை
தொங்கித் தாழ்ந்து மறைந்து புகுந்தன.

வேறு

29. கானனம் வந்தவர் நின்று கண்டனர்
மானச வியப்புறு மாண்புக் காட்சியைக்
கானன வுயிரினம் இன்பங் கண்டன
மோனமார் சிறுபுவி யொளியின் மொய்த்தது.

30. மரகத மேடையுள் வயிரப் புனல்கொலோ ?
தரணியின் சிறியதோர் தயங்கு மாடியோ ?
இரவுறு நிறைமதி யிறங்கி யுறங்குமோ ?
பரவுத லெவ்விதம் மடுவின் பாங்கினை ?

31. தினகரன் கிரிபினர் சேர்ந்தான் சந்திரன்
பனிக்கரம் பரப்பினன் வானம் படர்ந்தனன்
பனிமலை யின்னுரு வொளியில் படர்ந்தது
தனிநிலை யாழ்ந்தது போலத் தயங்குமால்.

32. மானச மருங்கிலே மாலை வந்தனள்
கானன வற்கலைக் காந்தி யாடையள்
வானக மீன்பதிந் தளகம் வார்ந்திடை
மேனியில் அணிந்தவள் கதம்ப மேகலை.

33. அன்புரை மொழிந்திடும் அரச வன்னமே
இன்குர லெழுப்பிடும் பறவை யீட்டமே
கின்னர மாதருங் கிளப்பி யெதிரொலி
யின்னிசை புதியன பண்க ளெழுப்புவர்.

34. மானசத் தூய்மையின் மணித்த டம்மனு
வானவ னமர்ந்தனன் ஆழ்தி யானமே
தானழ கஞ்சலி மலரைத் தாங்கினள்
தேனன சொல்லினள் சிரத்தை நின்றனள்.

35. நாறுவண் மலர்களை நாரி தூவலும்
நூறுநூ றெனச்சுரும் பார்க்க நொடிக்குளே
மாறில தெதிரொலி பரப்பும் வானகம்
மாறில தன்மையன் மனுவ மர்ந்தனன்.

36. அன்பொடு வந்தவர் அறிந்து கொண்டனர்
அன்னவர்க் கணுகிட வாமோ தாமதம்?
இன்னவ ளொடுமனு தேவ ரிருவரை
இன்றுவ ணங்கிட வில்லை தாமதம்.

37. இவ்வயின் மழவிடை சோம வேந்தியுஞ்
செவ்விதின் மணியொலி யினிது செய்தது
கொவ்வையின் கனியிதழ் இடையுங் கூர்ந்தனள்
எவ்வமில் மானவன் இடைபின் தொடர்ந்தனன்.

38. தன்தவ றுணரினுந் தைய லிடையவள்
மன்னிப்பு வாங்கிட மனம்வி ழைந்திலள்
இன்னெழில் காட்சியைக் காணு மின்பினள்
தன்துணைக் கண்களைத் தான்பா ராட்டினள்.

39. பழவுற வியற்கையோ டுறைந்த பழமையன்
அழகொடு மலர்ந்தருள் அந்தச் சேதனன்
எழவுவ கைக்கடல் நோக்கி மனுபொலன்
கழலடி களிப்பொடு காட்சி கண்டனள்.

---

இடையின் தவறு :—மனுவை நன்னெறி உய்க்காமல் தொழிற்போரிற் செலுத்தி ராஜச தாமசக் குணங்களையுந் தனியுரிமை வெறியையுந் தூண்டி விடுதல்.

39. பழமையன், சேதனன் = மனு.

40. மானவன் சிரத்தையைத் தழுவி மடியிலே
தானமர்ந் தானிடை தலைவ ணங்கினள்
ஆனன மலர்ந்தனள் ஆகம் புளகிதந்
தானெழத் தாமரைத் தாளை வணங்கினள்.

41. உரைத்தனள் இடையவள், ''நலமே யுற்றனன்
நிறைந்தவன் போடுனை நேடி வந்தனன்
கரைந்தவுன் உள்ளமாங் காந்த மீர்த்திட
விரைந்தனன் என்னினி யிதனின் விழுமிதே?''

42. ''ஒருசிறு குடும்பமாய் உற்றோ மனைவரும்
மருள்கெட யாத்திரை செய்ய வந்தனம்
அருளுைப் கேட்டனம் பாவ மழிதர
வொருதவத் தூய்வனம் உளதென் றணுகினம்.''

43. தவமனு நகைத்தனன் சவிக்கை லாயம
தவள்தனக் கன்பொடு காட்டி யறைந்தனன்
''நவமது மலரனை நங்காய்! கேளிதை
யிவரெலாம் உறவினர் இலதோர் வேற்றுமை.''

44. ''அன்னியர் நாமலர் ஆனோ மோர்குடி
யன்ன'நாம்' எனுமொழி கொள்ளும் அப்பொருள்
பொன்னெழில் 'நீர்'எலாம் என்து பொறிகளே
யென்னினோர் குறைவிலை யேக்க மகற்றுமின்.''

45. ''இவ்வுல கெவர்க்குமோர் சாப மில்லையால்
இவ்வயி னெவர்க்குமோர் பாப மில்லையால்
இவ்வுயிர் புவித்தரை யேற்ற சமதலம்
எவ்வுயிர் எங்கணும் ஏற்குஞ் சமரசம்.''

46. செழுங்கிலாக் கடலிலே விண்மீன் திரள்களே
குழுமின வொளிதருங் குமிழி வடிவின
பழுதில வுயிர்கள பேத பரவையுள்
முழுவுயிர்க் குள்ளுறும் முடிவி லின்பமே.

---

44. பொறி = அவயவம்.

47. "தத்தம தின்பமுந் துன்பமுந் தாங்கியே
இத்தரை வாழ்வன விச்ச ராசரஞ்
சித்தெனு மாவுடல் சிவமென் மங்கலம்
நித்திய சத்தியம் நெடிய சுந்தரம்."

48. "உயிர்களை நானெனும் உணர்வு தாக்கவுஞ்
செயிரறு சேதனம் பலவின் நிலையிலே
மயக்குறத் தனதுபல் வடிவு கொண்டுபின்
சுயநிலை தன்னைவெவ் வேருக் காணுமால்."

49. "விடியலின் விழியொடு மனிதன் விழிக்கவே
படிதுயர் இரவிமை யோடு படிகவே
கடிமறை யியற்கையின் அளகக் காடுறு
தொடுத்தனன் பின்னுக தூய கனவுகள்."

50. "மானவன் நாள்தோறும் மனம லர்கவே
தானவன் விசும்புசே தனத்தின் பிம்பமே
மானச மறையுறு மடுவில் படிந்துமே
மேனனி சமரசம் இனிது மேவுக."

வேறு

51. "மறக்கவே பேத வெண்ணம் மனிதரும், அழகுக் காட்சி
சிறந்தது கண்டா லென்ன வின்பதுன் பங்கள் சேர்ந்தே
யுறுவதா மகிழ்ச்சி கொள்க, ஒருரை 'அதுநான்' உண்மை
பெறுவரேல் இந்து கர்வு பெரும்புவி தம்ம தாமே."

வேறு

52. விடியலின் செங்கதிர் விரிந்த தொப்பவே
துடியிடை சிரத்தையின் துவர்த்த விதழ்களின்
படிந்தது புன்முறு வலிப்புப் பார்த்தனர்
மடியிலள் இடையொடு வந்தார் மகிழ்ந்தனர்.

---

51. அது நான் = அஹம் பிரம்ஹாஸ்மி, நானே பிரமன்

53 மானச கரைதிகழ் அழகு மணிக்கொடி
யானவள் காமனின் செல்வி யவனியில்
தானமாய் மங்கலங் கனிந்து வழங்கினள்
ஆனந்தப் பெருக்கிஞல் அலர்ந்து விளங்கினள்.

54. தண்புனல் ஆழ்குள மென்ன வொளிர்தரு
மண்ணுளர் மதித்திடுங் காமன் திருமகள்
ஒண்விசும் புணர்வுடைப் பரிசத் தொளிபெறுந்
தண்மயிர்க் கூச்சமும் நிறைவுந் தாங்கினள்.

55. உலர்தரு வையமுங் கேட்டிங் குவகையின்
மலர்தரும் இன்னிசைக் குழலின் மொழியினள்
மலர்ந்தனள் இன்னகை, பருகு மதுவெனப்
பலவகைச் சேதன சடங்கள் யாவுமே.

56. ஒருகொடி யண்டமாங் கமலத் துறையணு
வுருவெலாம் மாறலா யினபே ரற்புதம்
மருமலர் மணப்பொடி பொழிய மலிதரும்
அருங்கடல் மகிழ்ச்சியி னமுதம் பொங்குமால்.

## காற்று வருணனை

57. அண்டமாங் கமலம கரந்த மணைந்தலர்
தண்ணிதழ்க் குழுவிடைத் தாண்டிப் போந்தனன்
நுண்பொடி தாங்கினன் நுணுக்க வாயுவே
தண்மையன் இனிமையன் புரிந்தான் சவிநடம்.

58. மொட்டுகள் பற்பல முழுது மலர்ந்தன
தொட்டனன் வருவதால் இனிய மணத்தினன்
தொட்டிலா மலரிதழ் முத்துத் துளிகளால்
மட்டிலா மகிழ்ச்சியொ டூக்க மிகுதியன்.

59. நின்றுநின் றியங்கினன் திரும்பி நீண்டனன்
தன்பொருள் மறந்தன னென்னத் தோன்றினன்
அன்றலர் பலசம கரந்த மணைந்ததால்
இன்பொடிச் சும்மையை யேந்து மேகமே.

60. வனத்திரு பெய்தனள் மழைபோல் மணப்பொடி
கனவிமப் பொன்மலைப் பாங்கர் கனியமு
தனநதித் தண்புனல் ஒழுகுந் தண்ணிழல்
எனப்பவன் அசைந்தனன் உயிர்கட் குயிரினன்.

61. கடவுளாங் காதலன் காட்சி கூடவே
யுடனெழு மூச்சென வியங்கி வருபவன்
தடவெளி யெழுந்தது சடமு முருகிடக்
கடவுளின் மங்கலங் கனிந்த கானமே.

## பல்வேறு காட்சிகள்

62. வண்டிசை நூபுர வொலிபோன் மயக்கிட
வெண்கம லத்தவள் மென்கை தைவரும்
பணணுறு வீணைபோல் மாதர் பண்களே
விண்ணகத் திசையெலாம் விரைந்து பரவுமே.

63. வெறிமிகு வேனிலுங் குளிர்ந்த தென்றலுஞ்
செறிந்தன விரைந்தன செழிய மலையெலாம்
வெறிமணத் தாழ்குயில் மீட்டும் நல்லிசை
செறிமலர் வானகத் திருந்து சிதறுமால்.

64. விழுமல ரானவை விசும்பு சுந்தரி
விழுமிய பட்டுறு மடிப்பின் படிந்தன
குழுமலர்ப் பரப்புதன் துடிப்புக் கோமளம்!
முழுபுவி புளகித முறக்க ளித்தது.

65. இன்பமாம் அரசனின் இயல்கூட் டாளியத்
துன்பவி தூடகன் களிப்பு மின்றபின்
மன்பதை கொள்வதோர் மறதி மணித்திரை
பின்னொளிந் தாவொரு கவலை பெற்றிலன்.

66. கிளைதொறுந் தேனொடு கிளர்மெல் லரும்புகள்
வளைந்தன தொங்கின தொங்கன் மானவே
களைத்தன தேனுறு கனத்த சும்மையில்
வளைந்தன கிளைமலர் மகிழ்ந்து தூவின.

67. கிரணமொய் வெண்பனிக் கட்டிப் பாறைகள்
அரதன மணிவிளக் கன்ன வொளிசெயும்
விரவுகாற் றவற்றினை விழைந்து மோதினன்
குரலுறு மத்தளச் சுவையின் கொட்டினன்.

68. இனியதோர் நல்லிசை யுள்ளத் தெழுந்திடுங்
கனிவுற வுயிர்க்குழல் முழங்குங் காதலின்
கனிமனங் கூடலை விழையுங் கண்ணதைத்
தனியொரு பண்பினே தயங்கக் காட்டிடும்.

69. அரம்பையர் வடிவிலே கதிர்கள் அழகொடு
சுரர்விழை வானகஞ் சுழலும் நாட்டியம்
பரிமள வணுக்களைத் திரட்டி யியற்கையும்
பரிவொடு நாடக வரங்கு வனைந்தது.

70. கல்லொடும் பனியொடுங் காணும் இயற்கையின்
தொல்லுடல் தசையெலும் பாகத் தோன்றுமால்
நல்லவ ளியற்கையின் நடனம் வனப்பிதே
தொல்லையி லுவகையின் துலங்கிச் சிரித்தனள்.

71. வெண்மலை சந்திர மௌலி விளங்கிட
அண்ணலாஞ் சிவனென வமர்ந்து மகிழ்வுடன்
தண்புனல் மானசக் கௌரி வெண்ணலை
ஒண்ணடை மேன்மையைக் காண்ப தொக்குமால்.

71. வெண்மலை = கைலாயமலை; மானசமடு பார்வதி போலக் காட்சி தரும்

72. நிருமல வன்பொளி யாலே நின்றவர்
உருகினர் கண்ணொளி கான்ற, வொருமொழிப்
பொருளதை யுணர்ந்தனர் போந்தார் "ஆயினம்
நிருமணஞ் சிவமெனும் நிதியின் கலையினுல்."

73. அனைவரும் ஒருரு வானுர், அவனியும்
வனையழ கினனுருக் கொள்ளும், ஆங்கவர்
நினைவெனுஞ் சேதன மொன்றே, தூய்மைசேர்
நினைவரு மகண்டமாம் மகிழ்ச்சி நிலவுமால்!

காமன் மகள் எனுங் காவியம்

முற்றிற்று.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 1615
நன்கொடை எண்: 1615
மதுரை காமராசர் ப... தி... லகம்... ...ியல்துறை.